A CRITICAL TAMIL COMMENTARY

ON

MULLAIPPATTU

AN ANCIENT CLASSICAL TAMIL IDYLL

By

SWAMI VEDACHALAM

Master of

The Sacred Order of Love;

Editor of Jnanasagaram,

Pallavaram

Wrapper Printed at

The T. M. Press,

The Sacred Order Of Love-Mutt,

PALLAVARAM

22nd August, 1927.

All Rights Reserved] [*Price, Re 1.*

ஓம்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள் இயற்றிய நூல்களில் இப்போது விலைக்குக் கிடைப்பவை

மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்

சைவசமய முதலாசிரியராகிய மாணிக்கவாசகப் பெருமான் வரலாறு, தன்னைக்கூறும் புராண நூல்களில் முன்னொடுபின் முரணிப் பலவாறு பிறழ்ந்துகிடத்தலால், அஃது அடிகள் அருளிச்செய்த திருவாசகந் திருக்கோவையார் என்னும் நூல்களினின்றுந் திரட்டப்பட்ட மெய்ச்சான்றுகள்கொண்டே ஆராய்ந்து சிக்கறுத்து இந்நூலின்கண் தெளிவுபடுத்தி எழுதப்பட்டிருக்கின்றது.

அதனோடு, அடிகளதுகாலம் சைவசமய ஆசிரியர் ஏனை மூவர்க்கும் முற்பட்டதாதலும், அதனுண்மையுணராது அவரது காலம் அம்மூவர்க்கும் பிற்பட்டதென்று கூறிய சிலர் கூற்றுகள் நடுநின்று நன்காராய்ந்து காண்பார்க்குப் பொருந்தாவாய் ஒழிதலும் இதன்கண் விரித்து விளக்கப்பட் டிருக்கின்றன. இஃது உயர்ந்த சீமைக்கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. 800 பக்கம், இதன்விலை பத்து ரூபா.

மனிதவசியம்

உலகத்திலுள்ள நன்மக்களின் அன்பையும் உதவியையும் பெற்று அவற்றால் திரண்ட செல்வத்தையும் கல்வியறிவையும் மன வலிமையையும் அடைந்து இம்மை மறுமைக்குரிய எல்லா இன்பங்களையுந் தாமுந் துய்த்துப் பிறரையும் துய்க்கச் செய்தற்குரிய வழிகளைத் தெள்ளிய இனிய எளிதான தனிச்செந்தமிழ் நடையில் விளக்கிக்காட்டும் அரிய தமிழ்நூல். இதற்குமுன் இத்தகைய அரியநூல் தமிழில் வெளிப்பட்டதில்லை.

இதன் பொருளடக்கம்:-மனிதவசியம் இன்னதென்பது—நினைவை ஒருவழி நிறுத்தல்—கண்ணின் சிறப்பும் பார்வையின் கவர்ச்சியும்—எண்ணமும் எண்ணத்தின்வலிவும்—எண்ணத்தை வலுப்படுத்துவன—மந்திர மொழியும் அதனைச் செலுத்தும் முறையும்—வசியச் செயல்கள்—சேர்க்கைப்பொருள் வசியம்—வசியத்திற்கு ஏற்றகாலம்—நடுயாமத்துச் செய்யும் வசிய முறைகள்—விந்துவைக்கட்டல்—வசிய சக்கரம், வசியவேள்வி.

முல்லைப்பாட்டு ஆராய்ச்சி

உரை,

இது

பல்லாவரம்

சமரச சன்மார்க்க நிலையகுரு

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்களால்

இயற்றப்பட்டுப்,

பல்லாவரம்

சமரச சன்மார்க்க நிலையத்தின்கண் உள்ள

டி. எம். அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

மூன்றாம் பதிப்பு

1919

விலை கவ ரூபா

All Rights Reserved.

65698

THE MADURA TAMIL SANGAM

6569

முதற் பதிப்பு—1903.
இரண்டாம் பதிப்பு—1910.
மூன்றாம் பதிப்பு—1919.

THE MADURA TAMIL SANGAM

பொருளடக்கம்.

6569

	பக்கம்.
மூன்றும் பதிப்பின் முகவுரை	௫
முதற் பதிப்பின் ஆங்கில முகவுரை	௧௧
இரண்டாம் பதிப்பின் முகவுரை	௧௮
பாட்டினியல்பு	௧
பழந்தமிழ்ப் பாட்டின் சிறப்பியல்பு	௮
முல்லைப்பாட்டின் இயற்கையும் அதன் பாட்டியற்றிறமையும்	௨௭
முல்லைப்பாட்டில் நீளச்சென்று பொருந்தும் சொற்றொடர் முடிபு:மாட்டு.	௩௨
முல்லைப்பாட்டின்மேல் நச்சினார்க்கினியருரை	௩௩
பாட்டின் வரலாறு	௩௬
செய்யுட்பொருள் நிகழும் இடம்	௩௯
செய்யுட் பொருள் நிகழுங்காலம்	௪0
முல்லைப்பாட்டு	௪௩
பொருட்பாகுபாடு	௪௮
பாட்டின் பொருள்நலம் வியத்தல்	௫௫
பாவும் பாட்டின் நடையும்	௫௭
இப்பாட்டின்கட் காணப்பட்ட பண்டைக் காலத்தமிழரின் வழக்க வொழுக்க வரலாற்றுக் குறிப்புகள்	௬0
விளக்க உரைக் குறிப்புகள்	௬௨
அருஞ்சொற்பொருள்	௭௯

வழுவழுப்பான உயர்ந்த சீமைக்கடிதத்தில் அச்சிடப்பட்டது; பக்கங்கள்; விலை இரண்டுரூபாஎட்டணா.

யோகநித்திரை

மக்கள் வாழ்க்கையில் வரும் பலவகைத் துன்பங்களையும் நீக்கி இன்புற்று வாழ்தற்கு வழியான மறைபொருள் நுட்பங்களைத் தெள்ளத்தெளிந்த செந்தமிழ் நடையில் விளக்குவது இந்நூல். இதுகாறுந் தமிழ்மொழியில் வெளிப்படுத்தப்படாமல் மறைவாகப் பூட்டிவைக்கப்பட்ட அரும்பொருள்களை யெல்லாந் திறந்தெடுத்து வெளிப்படக் காட்டுவது. கட்புலனாகாத பொருள்களையும் நிகழ்ச்சிகளையுங் கண்டுணர்தலும், தீராநோய் தீர்த்தலும், தீய பழக்கங்கள் உடையாரை அவற்றினின்று விடுவித்தலும், பின்வரும் நன்மை தீமைகளை முன்றிதலும், மறதியை யொழித்து நினைவை வலுப்படுத்தலும், தாம் விரும்பியவர்களைத் தம்வழிப்படுத்தலும், இறைவனருளைப் பெற்று இப் பிறவியிலேயே இன்பத்தை யடைதலும் இந்நூலிற் சொல்லிய முறைகளைப் பழகுதலால் தப்பாமற் பெறலாம்.

இதுவும் உயர்ந்த சீமைக்கடிதத்திற் பதிப்பிடப்பட்டது; 188 பக்கங்கள் உள்ளது; விலை இரண்டுரூபா எட்டணா.

சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்

(இரண்டாம் பதிப்பு)

இந்நூலின் முதற்பதிப்பு 22 பக்கங்கள் மட்டுமே உடையதாய் இருந்தது. அது செலவழிந்தபின் அதன் அருமையை யுணர்ந்தோர் அதனைப் பெற்றுப் படித்தற்கு மிக விரும்பினர். என்றாலும், அது நீண்டகாலமாக அச்சிடப்படாமலிருந்தது. இப்போது அதன் 2-ஆம் பதிப்பு முன்னையிலும் நான்குமடங்கு பெருக்கி எழுதி அச்சிடப்பட்டிருக்கின்றது. இஃது 104 பக்கங்கள் உள்ளது. நால்வகைச் சாதி வகுப்புகளைப்பற்றி இதுவரையில் எங்கும் வெளிப்படாத உண்மைகள் எல்லாம் நன்கு ஆராய்ந்து உயர்ந்த பற்பல நூல் மேற்கோள்களோடு இதன்கண் விளக்கப்பட்டிருக்கின்றன. இதன் ஆக்கியோரான மறைமலையடிகளின் ஆராய்ச்சிவன்மையும், அவர்களின் தனித்தமிழ்நடையின் அழகும் இதனைக் கற்போர் உள்ளத்தைக் கவருந் தன்மையவாய் மிளிர்கின்றன. 'பண்டைக்காலத்தமிழர் ஆரியர்,' 'வேளாளர் நாகரிகம்' என்னும்நூல்களும், இந்நூலும், பழைய தொல்காப்பியம்,இருக்கு

வேதம் என்னும் நூல்களின் காலத்திருந்து இதுகாறுந் தமிழர் யர் என்னும் மக்கள் இருந்த நிலைமைகளையும், சாதிவேற்றுமை ரால் உண்டான வகைகளையும், பிறப்பளவிற் சாதிவேற்றுமை எ இல்லாமையையும் நன்கெடுத்துக் காட்டுவனவாகும். இந்நூல் (றும் தமிழர் ஆரியரின் வரலாறுகளை உணர்தற்கு இன்றியமையா இதன்விலை ஒரு ரூபா.

வேளாளர் நாகரிகம்

(இரண்டாம்பதிப்புப் பெருக்கி எழுதப்பட்டது)

இது, நாகரிகத்திற்சிறந்த பழந்தமிழ்க் குடிகளாகிய வேளாள இயல்புகளைப் பழைய நூல்களின் சான்றுகள்கொண்டு ஆராய் காட்டும் முகத்தால், தமிழர் ஆரியர் என்னும் இருபெரு வகுப் ரின் பண்டை வழக்கவொழுக்கங்களைத் தனித்தமிழ்நடையில் தெ விளக்குவது. தமிழ்வேத ஆரியவேதங்களின் வேறுபாடும், சாதிப் பாட்டின் தோற்றமும் உண்மையும் இதுகாறும் வெளிவராத பல ஆராய்ச்சி முறைகளால் நன்கெடுத்துக் காட்டுவது.

சைவசித்தாந்த ஞானபோதம் ரூ 3-4; கோகிலாம்பாள் கடி ரூ 2-8; மரணத்தின்பின் மனிதர்நிலை ரூ 2-4; பட்டினப்பாலை ஆ சியுரை ரூ 1-4; அறிவுரைக்கொத்து ரூ 1-4; முல்லைப்பாட்டு ஆ சியுரை ரூ 1; சாகுந்தலநாடகம் ரூ 1-4; குமுதவல்லி அல்லது நாச டாசி முதற்பாகம் ரூ 1-4; 2-ஆம்பாகம் ரூ 1-4; சிந்தனைக்கட்டுரை இரண்டாம்பதிப்பு ரூ 1-4; பண்டைக்காலத்தமிழர்ஆரியர் 12அ; சுந்தரக்காஞ்சியாக்கம் 12அ; பொருந்தும் உணவும் பொருந் வும் 8; கடவுளுக்கு அருளுருவம்உண்டு 3அ; சைவசமயப்பாதுகாப்பு 2அ; தமிழ்த்தாய் 2அ; 2அ; சிறுதேவதைகட்கு உயிர்ப்பலியிடலாமா?

மக்கள் நூறுண்டு உயிர்வாழ்தல் எப்படி போதஆராய்ச்சி (அச்சில்), திருக்குறள்ஆராய்ச் லுணர்தல் (அச்சில்).

ஞானசாகரத்தின் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, செலவழிந்தன; அவை இனி அச்சிடப்படா.

பதினோராம்பதுமம் ரூ 5; பன்னிரண்டா மூன்றும் பதுமக் கையொப்பம் ரூ 4.

ஓம்

மூன்றும் பதிப்பின் முகவுரை

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து"

என்னும் பழையபாட்டின்கட்கண்ட திருமுருகாற்றுப் படை முதல் மலைபடுகடாம் ஈறுன அருந்தமிழ்ப் பாட்டுகள் பத்தினுள் ஐந்தாவதாய்நிற்பது முல்லைப்பாட்டாகும். தன் ஆருயிர்க் கணவனைப் பிரிந்து வருந்தியிருந்த தலைவியின்நிலைமையும், பகையரசர்மேற் போர்புரியச் சென்ற அவள்கொழுநன் கார்காலத் துவக்கத்தே அப் போர்வினையை முடித்துத் தன் மனைவிபாற் றிரும்பிவரும் வகைமையும் இச்செய்யுளின்கண் மிகவும் அழகாக எடுத்துச் சொல்லப்படுகின்றன. இச்செய்யுள் இயற்றப்பட்டுச் சிறிதேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகின்றன. இதனை இயற்றிய ஆசிரியர் காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் என்று சொல்லப்படுவர். இப்பாட்டைத்தவிர இவ்வாசிரியரால் இயற்றப்பட்டனவாக வேறு எவையும் இதுவரையும் வெளிப்படவில்லை.

கற்போருணர்வைக் கவருந்திறத்ததாய், அழகிய இயற்கைப்பொருள் நிலைகளை இருந்தவாறே எடுத்து மொழிவதாய், நூற்றுமூன்றடிகளிற் சுருங்கிய பாவாய்இருப்பினும் தமிழ்மொழியின் நலங்களை விளக்கமாகத் தேற்றுவதாய் உள்ள இம் முல்லைப்பாட்டுக் கி-பி௧௯0௩-ஆம்ஆண்டு கலைநூற்புலமைக்குப் பயிலும் மாணக்கர்க்குப் பாடமாக வந்தது. சென்னைக் கிறித்

துவ கல்லூரியில் அப்போது யாம் தமிழாசிரியராய் இருந்து மாணாக்கர்க்குத் தமிழ் நூல் அறிவுறுத்தி வந்தமையால், இம்முல்லைப்பாட்டிற்கும் உரைவிரித்து உரைக்கலானேம். இச்செய்யுட்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையையுங் கூடவே விளக்கி வருகையில், செய்யுளியற்றிய ஆசிரியர் கொண்ட பொருண்முறை ஒருபக்கமாகவும், உரைகாரர் கொண்ட பொருண் முறை மற்றொரு பக்கமாகவும் ஒன்றோடொன்று இணங்காதாய் மாறுபட்டுநிற்றல் கண்டு மாணாக்கர் பெரிதும் இடர்ப்படுவா ராயினர். அதுவேயுமன்றி, ஆக்கியோன் அமைத்த சொற்றொடர் நெறி யைச்சிதைத்துச் சொற்களையும் அடைமொழி களையும் ஒருமுறையுமின்றிப் பிரித்துக்கூட்டிப் பொருளுரைக்கும் நச்சினார்க்கினியருரை சிறிதும் ஏலாவுரையேயா மென்றும் அவர் கருதுவாராயினர். முன்னமே ஆக்கியோன் கருத்தையொட்டி வேறோர் உரைசெய்துவைத்திருந்த யாம், அதனையெடுத்து அவர்க்கு விளக்கிக்காட்டினேமாக, அதுகண்டு அவ ரெல்லாம் 'தமதுரை ஆக்கியோன் கருதியபொருளை நேர்நின்று விளக்குவதோடு, பண்டைக்காலத்துத் தண்டமிழ்ச் சிறப்புகளைப் பின்றைக் காலத்துக் கேற்ற படி தெற்றென நன்கு விளக்குவதாயும் இருத்தலின் தமது விரிந்த இவ்வாராய்ச்சியுரையினை எழுதிப் பதிப் பிட்டு எமக்குத் தந்தருளல் வேண்டும்'எனக்கேட்டு அதுபதிப்பிடுதற்காஞ் செலவும் ஒருங்குசேர்ந்து முன்உதவினர். அங்ஙனம் உதவிய அம்மாணாக்கர்க்கு யாம் என்றும் நன்றி செலுத்தக் கடைப்பட்டிருக் கின்றோம். உடனே யாம் எழுதிய முல்லைப்பாட்டா

ராய்ச்சியுரை அச்சிற் பதிப்பிக்கப் பட்டமையின், அதன் அச்சுப்புத்தகங்கள் அவ்வாண்டின் மாணுக்கர்க்கும் பிறர்க்கும் வழங்கப்பட்டன. அவ்வுரை நூலை வாங்கிக்கற்ற மாணுக்கரும், ஏனைத்தமிழறிஞரும் புதுமுறையாக எழுதப்பட்ட அவ்வுரைப் பாங்கினைப் பெரிதும் வியந்து பாராட்டி அம்முறையினைப் பின்பற்றிப் பழைய தமிழ் நூல்களை ஆராய்வதிற் கிளர்ச்சி பெறலாஞர். இப் புதுமுறையுரை தமிழ்நூ லாராயும் வகைகளை இனிது விளக்கி அறிஞர் பலர்க்கும் அக மகிழ்ச்சியினை விளைத்தமை கண்டு, இனிஇத்தகைய உரைகளையே எழுதுதல் வேண்டுமென எமதுள்ளம் பெரிதும் விழைந்தது. கி-பி.கஅ௯௦௬- ஆம் ஆண்டு. கலை நூற் புலமைக்குப் பயிலும் மாணுக்கர்க்குப் பத்துப் பாட்டுக்களில் ஒன்ருன பட்டினப்பாலை என்னும் அருந் தமிழ்ச்செய்யுள் பாடமாய் வந்தது. யாம் முல்லைப் பாட்டிற் கெழுதிய ஆராய்ச்சியுரையினைப் பற்றிக் கேள்வியுற்ற அவ்வாண்டின் மாணுக்கர்களும் தமக்குப் பாடமாய் வந்த பட்டினப்பாலைக்கும் அதனைப் போல வே ஓர் ஆராய்ச்சியுரை எழுதித்தரும்படி வேண்டி, அதனைப் பதிப்பிடுதற்காம் செலவின் பொருட்டுத் தாமும் ஒருங்குசேர்ந்து பொருளுதவிசெய்தனர். அம் மாணுக்கர் செய்தவுதவிக்கும் யாம் பெரிதுங்கடமைப் பட்டிருக்கின்றேம். திரும்பவுங் கி.பி.கஅ௯க௦-ஆம் ஆண்டு கலை நூற் புலமைக்குப் பயிலும் மாணுக்கர்க்கும் முல்லைப்பாட்டுப் பாடமாக வந்தது. இதற்கிடையில் முதற்பதிப்பிட்ட எமது முல்லைப்பாட்டாராய்ச்சியுரைப் புத்தகங்கள் எல்லாஞ் செலவழிந்து போனமையின், அவ்வாண்டின் மாணுக்கர் வேண்டுகோட் கிணங்கி

அவர் தாம் ஒருங்குசேர்ந்து முன்னர்த்தந்த பொருள் கொண்டு அஃதிரண்டாம்முறையும் பதிப்பிக்கப்பட்டது. இரண்டாம் பதிப்புப்புத்தகங்களும் செலவாய் விட்டமையால், இப்போதிதனை மீண்டும் பதிக்கலாயினேம். இப்பதிப்பின்கட் பலதிருத்தங்களும் மாறுதல்களும் செய்யப்பட்டிருக்கின்றன. எமதிடமுள்ள ஓர் ஏடுச் சுவடியையும் அச்சுப் புத்தகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து முல்லைப்பாட்டுச் செய்யுளின்கட் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

முல்லைப்பாட்டுப் பயில்வோர் பிறநூல் உதவி பெரிதும் வேண்டாமல் எளிதில் அதனைக் கற்றறிதற் பொருட்டு, முன்னிரண்டு பதிப்புக்களினும் இல்லாத பல விளக்க உரைக்குறிப்புகள் இப்போதிதன்கட் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதுவேயுமன்றி, உலக வழக்கத்திலுள்ள சொற்களைத் தவிர்த்து, முல்லைப் பாட்டில்வந்த ஏனை எல்லாச் சொற்களையும அகர வரிசைப் படுத்தி அவற்றிற்கெல்லாம் பொருள்கள் எழுதியிருக்கின்றேம். இவ் வருஞ்சொற் பொருள் வரிசையின் உதவிகொண்டு இச்செய்யுட் பொருள் உணர்ந்துகொள்வது எவர்க்கும் எளிதேயாம். இனி, இவ்வருஞ்சொற்கட்குப் பொருள் வரையுங்கால் இம் முல்லைப்பாட்டு வழங்கிய காலத்தில் அதன்கண்வந்த சொற்கட்குவழங்கிய பொருள்களையும், அக்காலத்தை அடுத்துத் தோன்றிய சான்றோர் நூல்களில் அவற்றிற்கு வழங்கிய பொருள்களையும் எடுத்துக்காட்டியிருக்கின்றேம். ஒரு செய்யுள் வழங்கிய காலத்தும் அதனையடுத்துவந்த காலத்தும் அச்செய்யுட் சொற்கட்குப் பொருடெளிவது அச்செய்யுள் ஆக்கியோன் கருத்தை

நன்கறிந்துகோடற்குக் கருவியாமாதலின், இங்ஙனஞ் சொற்பொரு டுணிவிக்கும் முறையைத் தமிழாராய் வோர் அனைவருங் கைப்பற்றி ஒழுகுவராயின் நம தருமைச் செந்தமிழ்மொழி சால்வும் விளக்கம் உடையதாகித் திகழும்.

இனி இவ்வாராய்ச்சி யுரையின்கண் மற்றொரு முதன்மையான சீர் திருத்தமுஞ் செய்திருக்கின்றோம். தொன்றுதொட்ட சிறப்பும், இலக்கண இலக்கிய வரம்பும், தனக்கெனப் பன்னூறாயிரஞ் சொற்களும் வாய்ந்து, இன்றுகாறும் வழக்கு வீழாது உயிரோடு உலாவிப் பன்னூறாயிரம் மக்கட்குப் பெரிதும் பயன் பட்டுவரும் நமது இனிய செந்தமிழ்மொழியை அயல் மொழிச்சொற்கள் விரவாமற் பாதுகாத்துத் தூயதாய் வழங்கி அதனை வளம்பெறச்செய்வது தமிழராயினர் ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாத கடமையாம். சில நூற்றாண்டுகளாய்த் தோன்றி இலக்கண இலக்கிய வரம்பில்லாது தமக்கெனச் சிலசொற்களே யுடைய மொழிகளையும், உலகவழக்கிற்குச் சிறிதும் பயன் படாமல் இறந்துபட்ட மொழிகளையும் அவற்றிற்குரி யோரும் அவற்றிற்கு உரியோர்போற் றம்மை எண்ணிக்கொள்வோரும் அவற்றைத் தூயவாய் வழங் கவும் அவற்றை உயிர்ப்பிக்கவும் ஓவாது முயன்றுவர, எல்லா நலங்களும் ஒருங்குடைய நமதருமைச் செந் தமிழ் மொழியை நம்மனோர் பயிலாதும் பாதுகாவாதுங் கைவிட்டிருத்தல் நிரம்பவும் இரங்கற்பாலதொன்றும். இனியேனும் அவர் அங்ஙனம் மடிந்திராமைப் பொருட் டு, நம்மனோரிற் கற்றவராயிருப்போர் ஆரியம் ஆங் கிலம் முதலான பிறமொழிச் சொற்களைக் கலவாமற்

றனித்தமிழிற் பேசவும் எழுதவுங் கடைப்பிடியாய்ப் பழகிவரல் வேண்டும். இதனை முன் நடந்து காட்டும் பொருட்டு, இதற்குமுன் யாம் எழுதிய நூல்களிற் புகுந்த சிற்சில அயன்மொழிச் சொற்களையும் அந் நூல்களைத் திரும்பப் பதிப்பிட்டுவரும் இப்போது முழுதுங்களைந்துவிட்டு, அவை நின்ற இடத்திற் றூய தமிழ்ச் சொற்களையே நிரப்பி வருகின்றோம். இம் முல்லைப்பாட் டாராய்ச்சியுரையினும் முற்பதிப்புகளி லிருந்த அயன்மொழிச் சொற்களை நீக்கி அவற்றிற் கீடான செந்தமிழ்ச் சொற்களையே இப்பதிப்பின்கட் பெய்துவைத் திருக்கின்றோம். என்றாலும், கால நிலைக்கும் நாகரிகவளர்ச்சிக்கும் இசையச் சில அயன் மொழிச் சொற்களையுஞ் சொற்றொடர்களையுங் குறி யீடுகளையும் ஒரோவிடங்களில் மிகச் சிறுக எடுத்தா ளுதல் வழுவன்றென்பதூஉம் அறிஞர்க்கு உடன் பாடா மென்க. இத்தன்மையவான ஆராய்ச்சியுரை கள் எழுதுவதற்கு நல்வழிகாட்டின ஆங்கில மொழி நல்லிசைப்புலவர்க்கு யாம் எழுமையும்நன்றி பாராட் டுங் கடமை உடையோம்.

பல்லாவரம்,
சமரசசன்மார்க்கநிலையம்,
சாலி, ௲௮௱௪௰௩ ஆவணிமீ

வேதாசலம்.

PREFACE TO THE FIRST EDITION.

"Poetry is simply the most beautiful, impressive, and widely effective mode of saying things, and hence its importance,"—Matthew Arnold.

To a mind brooding over the great beauty that manifests itself in the phenomena of Nature, to an intellect plunging deep into the hidden mysteries of Life, to a soul soaring high into ethereal regions of religion and philosophy, to a spirit finding its serene rest in moral sanctity and Divine grace, nothing appears as permanently beautiful, impressive and effective as the study of a fine piece of Poetry. Not only does a fine poem delight us by presenting a faithful picture of Nature's charms and beauties but it even impresses us with the immediate presence of a benign principle in all the varied objects of beauty revealing unto man Its supreme kindness and instilling into him love and sympathy which serve to refine and ennoble his entire being. To a heart eaten bit by bit away by sorrow and worldly cares, Poetry comes as a healing balm; to a heart chilled by the icy hand of cruelty and oppression its influence comes like that of the morning sun; and to a heart stained with the blackest crime and the direst evil it comes as the washing pearly dew. Ah! the changes wrought by Poetry in the mind of man are profound and the effects which it produces on him are permanent.

To me the study of Poetry has been a welling fountain of delight and ever will it continue to be

so to the very close of my life on this earthly plane, For years together I have been devoting my time to a close, careful and diligent study of the ancient classical poems in the Tamil language and have been drinking deep the ineffable sweetness that was there stored in. The pure simplicity of thought, the close and minute observation of nature, the vivid and sublime portraits presented of the social, moral, religious and intellectual conditions of the old Tamilian life, the energy and artistic beauty beaming through with a sterling freshness, and last, but not least, the great historic value which it possesses—all combine to invest Tamil Poetry with a peculiar charm and splendour that can hardly be surpassed by the poetry of any great language in the world. This alone accords to Tamil quite a unique place in the history of all cultivated languages in the civilised world.

But sad to relate the classical poems prescribed as text books for the B. A. and F. A. Examinations in the University of Madras, seem to have attracted little or no attention of the students. And a study of them has been even regarded useless and as wearisome by some easy-going students who have been led to revel in stories of a religious and mythological character and who have thereby lost all seriousness and appreciation of natural beauty. This has been due partly to the

teaching of Pandits and the bulky volumes of notes which mainly consist in giving word for word meanings and turgid and trivial grammatical notes and partly to some prescribed Tamil texts in prose and poetry which for the most part contain silly and crude religious myths translated from Sanscrit Puranas and which by no means represent the true nature of original classics in Tamil. I do not mean, however, to deny the fact that one or two classical poems are occasionally prescribed as text-books by the scrupulous members of the Tamil Board, but I only intend to say that even these brilliant gems become buried deep in the heap of filthy poems forthcoming as text-books by the side of them. The sparkling glitter of the former is swallowed up in the intense darkness of the latter. Hence the study of Tamil Poetry disappears from our gaze as though it were surrounded by an impenetrable gloom. In spite of this disadvantage I had had an earnest desire to make an attempt in directing the attention of students to a sound critical study of some classical poems and see what effect is produced on them when they are put in the light of modern critical study of Poetry in general. Although I feel myself unfit for the task, yet I ventured to make an attempt which, as I afterwards found to my great satisfaction, proved highly successful not only among the students of our

College but also among those who, out of pure love, study Tamil in private. Thus I came to realise the benefit that would accrue to students from a critical and comparative study of poetry and ever since that time was putting the scheme into practice orally. But an occasion presented itself to me for bringing my critical method of poetic study into writing also. While I was engaged in teaching Mullaippattu to my students of the senior B.A. class, they requested me to write a critical commentary on this beautiful ode and subscribed in advance to defray the cost of printing. In compliance with their request most cheerfully did I undertake the task. I take this opportunity to express my thanks to my students of the senior B.A. class for this and many other acts of courtesy and kindness they had extended to me.

Mullaippattu is an ancient classical ode of 103 lines sung in honour of the Pandian King Nedunchelian by his court bard Napputhanar. How Nedunchelian, once having gone on an expedition to meet the combined forces of seven powerful kings in the field at Talayalanganam and routed them all in the battle that ensued, returns with great splendour and magnificence and with trophies of victory to kiss his loveliest wife and how this beautiful maiden that had been left alone in a country villa with a deep sorrow for

the separation of her beloved husband, is lying down on her couch her chaste bosom heaving up with a sigh of consolation at his shortly expected return, are all related most vividly and very picturesquely in this poem. The Poem is remarkable alike for simplicity of thought, beauty, and noble sentiments. The imaginative hold which it has on the mind of the reader is strong and elevating. The interest of the plot is sustained throughout by the artistic method insinuated into it by the poet with great delicacy and subtlety that characterise a master mind. The rhythm and harmony of style vary every now and then and adhere themselves closely to the dignified march of the sense, while the diction, though rugged at times, is, on the whole, chaste and elegant replete with genuine elements of Tamil. The Sanscrit words have mingled in it at the rate of two per cent, or three and hence the date of its composition falls about the second century before Christian era.

In commenting on this excellent ode I followed the main lines of literary criticism inculcated by the able and profound critic Professor William Minto; for his critical methods are exceedingly interesting and help much towards a clear understanding of the work to be scrutinised. From this critical point of view, I have given a

historical account of the age that gave birth to such a splendid poem as Mullaippattu and of the influence which that age had exerted on this poem. It must be remembered that the true nature of a work of art cannot be comprehended unless the condition of the times in which it had sprung up is distinctly understood. I have also availed myself of the grand opinions expressed on Poetry by such great masters as Milton and Ruskin and have even translated freely into Tamil one or two passages from their writings.

In my analysis of the poem I have adhered closely to the original idea conceived and expressed by the Poet, rather than follow the mangled and distorted meaning given by the commentary of Nachinarkkiniar. The old commentator discarding the simple and natural order with which the subject-matter of the ode is set up, has torn the excellently woven fabric of the Poet to pieces and glues them again together with his own vapid thought in such a fantastic manner as to make the poem seem most artificial and its structure very ridiculous. And in elucidating the text, I have, therefore, inserted, wherever necessary, short critical notes which would make the inaptitude of the commentator's meanings at once intelligible to the reflective minds. Pandit V. Swaminatha Aiyar of the

Government College at Kumbakonam and Pandit C. Tiruchitrambalam Pillai of Coimbatore having been greatly misled by the commentary of Nchinarkkiniar, have, in their editions, added notes which do not follow the sense of the poem but mar the flow and natural setting of its poetic thoughts. But of the two I wish to recommend to students Mr. Tiruchitrambalam's edition since his comments and critical introduction are valuable for a clear understanding of the old commentary though not of the poem, more than that of Mr. Swaminatha Aiyar. In the course of my criticism I need hardly say that I have widely differed from the old commentator and the two Pandits, but I have fully stated my reasons and authority for doing so.

I now conclude these few prefatory remarks with a fervent hope that those Tamil students who take a deep interest in the study of poem, will find in this critical commentary a better means of getting a true and appreciative knowledge of this only genuine relic of a great and old Tamil poet Napputhanar and will further devote a few of their leisure hours to the study of pure Tamil and extend their knowledge of Tamil classics a little wider than it is at present.

MADRAS CHRISTIAN COLLEGE,
28th september, 1903.

VEDACHALAM

இரண்டாம் பதிப்பின் முகவுரை.

முல்லைப்பாட் டாராய்ச்சி யுரையின் முதற் பதிப்புப் புத்தகங்கள் நெடுநாட்கள் முன்னரே செலவழிந்து போயின. அதனை மீண்டும் பதிப்பித்துத் தரும்படி பலர் பலகாற் கேட்டும், அதனைப் பதிப்பிடுதற்குச் செலவிடும் பொருள் பதிப்பிட்ட பின் புத்தக விலையாற் பெறக்கூடாமற் போய்விடுதலானும், இங்ஙனமே புத்தகங்கள் பதிப்பிடுதலில் இரண்டாயிரம் ரூபாவுக்கு மேல் இழந்தேனுகையாலும் அதில் நோக்கமின்றி யிருந்தேன். இவ்வாண்டின் பி. ஏ. வகுப்பு மாணவர்களுக்கு முல்லைப்பாட்டுப் பாடமாக இருத்தலால், எங்கள் கலாசாலைப் பி. ஏ. வகுப்பு மாணவர்கள் இதன் ஆராய்ச்சி யுரையைப் பதிப்பிட்டுத் தரும்படி எம்மை வேண்டியதோடு, அப்பதிப்பிற் காம் செலவும் முன்னர்த் தந்து உதவி செய்தமையால் இதனை மீண்டும் பதிக்கலானேன். இப்பதிப்பின்கட் சில கூட்டியும் சில குறைத்தும் விளக்க உரைக் குறிப்புகள் பல சேர்த்தும் திருத்தங்களும் மாறுதல்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

இப்பதிப்புக்கு மாணவகரிடம் பொருள் திரட்டி உதவி செய்த மாணுக்கர் ஸ்ரீ அரங்க ராமாநுசம் அவர்களுக்கு நிரம்பக்கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்னைக் கிறித்துவ
கலாசாலை,
7—12—1910.

முல்லைப் பாட்டு

ஆராய்ச்சி உரை.

பாட்டினியல்பு.

முல்லைப்பாட்டு என்பதைப்பற்றித் தெரியவேண்டுவன எல்லாம் ஆராயும் முன், பாட்டு என்பதென்னை? என்று ஆராய்ந்து அறிந்துகொள்ளல் வேண்டும். பின்றைக்காலத்துத் தமிழ்ப்புலவர் பாட்டென்பது இன்னதென்றே அறியாராய்ப் புதுமைபுதுமையாகச் சொற்களைக் கோத்துப் பொருள் ஆழமின்றிச் செய்யுள் இயற்றுகின்றார். பண்டைக்காலத்துத் தமிழ்ப் புலவரோ பாட்டு என்பதன் இயல்பை இனிதறிந்து நலமுடைய செய்யுட்கள் பலப்பல இயற்றினார். இங்ஙனம் முற்காலத்தாராற் செய்யப்பட்ட பாட்டின் இயல்போடு மாறுபட்டுப் பிற்காலத்தார் பிறழப்பாடிய செய்யுட்களைக் கண்டு மாணக்கர் பாட்டினியல்பு அறியாது மயங்குவராகலின் பாட்டு என்பது இன்னதென்று ஒரு சிறிது விளக்குவாம்.

உலக இயற்கையிற் கண் முதலான புலன்களுக்கு விளங்கித் தோன்றும் அழகினையெல்லாம் தன்னுள்ளே நெருங்கப்பொதிந்து வைத்துப், பின் அவற்றை நம் அறிவினிடத்தே புலப்படும் வண்ணம் தோற்றுவித்து, மாறுதல் இல்லா இனிய ஓசையுடன் ஒற்றுமைப்பட்டு

நடைபெறும் இயல்பினை உடையதுதான் பாட்டென்று அறிதல்வேண்டும். இன்னும் எங்கெங்கு நம் அறிவைத் தம்வயப் படுத்துகின்ற பேரழகும் பேரொளியும் பெருந்தன்மையும் விளங்கித் தோன்றுகின்றனவோ அங்கெல்லாம் பாட்டு உண்டென்றே அறிதல்வேண்டும். இதனை விரித்துக் காட்டு மிடத்துப், பேரழகாற் சிறந்த ஓர் அரசி தான் மேற்போர்த்திருந்த நீலப்பட்டு ஆடையினைச் சிறிது சிறிதாக நீக்கிப் பின் அதனைக் கீழேசுருட்டி எறிந்துவிட்டுத் துயில் ஒழிந்து ஒளி விளங்கு நளிமுகங்காட்டி எழுதல்போல இருட்கூட்டங் குவிந்து மழுங்கி அலைகடலிற் சென்று அடங்கும்படி இளையஞாயிறு உருக்கித்திரட்டிய பசும்பொற் கோளம் போலத் தளதளவெனக் கீழ்த்திசையில் தோன்றவும், அத்திசையின் பரப்பெல்லாம் பொன் உரைத்த கற் போற் பொலிந்து திகழவும், பசுமை பொன்மை நீலம் சிவப்பு வெண்மை முதலான நிறவேறுபாடுள்ள உலோகங்கள் உருகி ஓடுகின்ற நிலம்போல வான் இடமெல்லாம் பலவண்ணமாய் விரிந்து விளங்கவும், கரிய மேகங்களெல்லாம் செவ்வரக்கு வழித்த அகன்ற திரைச்சீலைகள் எனவும் வெளிய மேகங்களெல்லாம் பொற்பட்டுப் படாம்போலவும் ஆங்காங்குச் சொல்லுதற்கரிய பேரொளியோடு திகழவும் உலகமங்கை நகைத்தாற்போலப் புதுமையுற்றுத் தோன்றும் விடியற்கால அழகெல்லாம் பாட்டென்றே அறிதல் வேண்டும். ஆ! இங்ஙனந் தோன்றும் அவ்விடியற்கால அழகினைக் கண்டு வியந்த வண்ணமாய் மீன்வலையோடு கடற்கரையில் நிற்குஞ் செம்படவனைக் காட்டினுஞ் சிறந்த புலவன் யார்?

அவ்விடியற்காலையிலே முல்லை நிலைத்துக் கோவலர் ஆன்கன்றுகளைக் கொட்டிலிலே தாம்பினாற் கட்டி வைத்து, ஆன்நிரைகளை அடுத்துள்ள மலைச்சாரலிற் கொண்டுபோய்ப் பசியபுல்மேயவிட்டுத் தாம் மரநிழலிற் சாய்ந்திருந்துகொண்டு, தமக்கெதிரே பச்சிலைப் போர்வை மேற்கொண்டு கரிய மேகங்கள் நெற்றி தழுவிக்கிடப்பப் பெருந்தன்மையோடு வான் அளாவித் தோன்றும் மலையினை அண்ணாந்து பார்த்து அவர்கள் அச்சமும் மகிழ்ச்சியும் அடையும்போது அங்கும் பாட்டு உண்டென்றே அறிதல் வேண்டும். காதலினாற் கட்டுண்ட இளைஞரும் மகளிரும் நெகிழாத அன்பின் மிகுதியால் தோளோடு தோள் பிணையத் தழுவிக்கொண்டு மலையடிவாரத்தில் உள்ள பூஞ்சோலைகளிற் களிப்பாய் உலவுந்தோறும், தூங்கணங்குருவிகள் மரங்களில் வியப்பான கூடுகட்டுதலையும், மரப்பொந்துகளில் மணிப்புறாக்கள் கூவுதலையும், ஆண்மயில்கள் தம் அழகியதோகையினை விரித்துப் பெடைமயில் கண்டு களிப்ப ஒருபுறம் ஆடுதலையும், மலையருவிநீர் கூழாங்கற்படையின் மேற் சிலுசிலுவென்று ஓடி வந்து அச்சோலையின் ஒருபக்கத்துள்ள ஆழ்ந்த குட்டையில் நிரம்பித் துளும்ப அதன்கண்உள்ள செந்தாமரை முகிழ்கள் அகன்ற இலைகளின்மேல் இதழ்களை விரித்து மிகச்சிவப்பாய் அலர்தலையும் விரும்பிக் கண்டு நறுமணங்கமழும் பூக்களை மரங்களினின்றுந் தாவிப்பறித்துக் கரியகூந்தலில் மாறிமாறி அணிந்தும், சிவக்கப் பழுத்த கொவ்வைக் கனிபோன்ற தம் இதழ்கள் அழுந்த முத்தம் வைத்துக்கொண்டும், தேன் ஒழுகினாற்போல இனிய நேசமொழிகள் பேசிக்கொண்டும்

அவர்கள் செல்லுமிடத்து அங்கும் பாட்டு உண்டென்றே அறிதல் வேண்டும்.

சுருங்கச்சொல்லுங்கால் எங்கெல்லாம் நமதுணர்வைக் கவர்கின்ற பேரழகு உலக இயற்கையிற் காணப்படுமோ அங்கெல்லாம் பாட்டு உண்டென்பது தெளியப்படும். ஆயினும், ஒரு நல்லிசைப் புலவனால் இயற்றப்படுகின்ற பாட்டுப்போல அது நூலினிடத்தே காணப்படுவதில்லையேயெனின்; அறியாது வினவினாய், ஒரு நூலின் கண் எழுதப்பட்டு உலக இயற்கையின் அழகை நமதுள்ளத்திற் பொருத்திக்காட்டி நமக்கு உணர்வு பெருக்குஞ் சொல்லின் தொகுதியான பாட்டு நூலின்கண் எழுதப்படுகின்ற வடிவுடைய பருப்பொருளாகும்; உலக இயற்கையின் அழகோடு ஒற்றுமைப்பட்டுக் கண் முதலான புலன்வழிப் புகுந்து நமக்கு உணர்வுமிகுதியினை வருவிக்கும் பாட்டு வடிவு இல்லாத நுண்பொருளாகும். இங்ஙனமாகலின் உலக இயற்கையிலெல்லாம் பாட்டு உண்டென்பது துணிபேயாமென்க.

அல்லாமலும், உயிர் வாழ்நாளில் ஒவ்வொரு நாளும் நம்முடைய நினைவுகளெல்லாம் உணவு தேடுதலினும், பொருள் தொகுப்பதினும், மனைவிமக்கட்கு வேண்டுவன திரட்டிக்கொடுத்தலினும், பிறர் இட்ட ஊழியஞ்செய்தலினுமாகப் பலவாறு சிதறி அருமை பெருமையின்றிக் கொன்னே கழிந்து போகின்றன. இவ்வாறு கழிந்துபோகும் மக்களுடைய நினைவுகளுஞ் சொற்களுஞ் செயல்களும் நமக்கு இன்பந்தராவாகலின் அவற்றை அறியவேண்டுமென விரும்புவார் உலகில் யாரும் இலர். இனி, இவ்வாறு கழியும் நாட்களில்

ஒரோவொருகால் அவர் அறிவு வறிய நினைவுகளின் வேறுகப்பிரிந்து, உலக இயற்கையழகிற் படிந்து அதன் வண்ணமாய்த் திரிந்து தெளிவுற்று விளங்கும்போது, அவ்வறிவிற் சுரந்து பெருகும் அரிய பெரிய கருத்துக் களையே நாம் அறிதற்கு மிக விரும்புகின்றேம். இங் ஙனந்தோன்றும் அரிய பெரிய கருத்துக்களின் கோவை ஒழுங்கினையே பாட்டென்றும் அறிதல்வேண் டும். இன்னும் மக்கள் வாழ்நாள் என்கின்ற நீரோடை யிலே வறு நினைவுகளான கலங்கல் நீர் பெருகிச் செல் லும்போது, உலக இயற்கை யென்னும் மலைக்குகை களிலே அரித்து எடுத்து வந்த அருங்கருத்துக்களான பொற்றுகள் இடையிடையே ஆழ்ந்து அவ்வோடை யின் அடிநிலத்திற் சிதர்ந்து மின்னிக்கிடப்ப, நல் லிசைப்புலவன் என்கின்ற அரிப்புக்காரன் மிக வருந்தி முயன்று அப்பொற்சிதர்களை யெல்லாம் ஒன்ருகப் பொறுக்கி எடுத்துத் தன்மதிநுட்ப நெருப்பிலிட்டு உருக்கிப் பசும்பொற்பிண்டமாகத் திரட்டித் தருவதே பாட்டு என்றும் அறிதல் வேண்டும். இன்னும் மக்கள் அறிவு என்கின்ற தித்திப்பான அரிய அமிழ்தம் பல வகையான குற்றங்களானுங் கலப்புற்றுத் தூயதன் மைப் போக, நல்லிசைப்புலவன் தன் பேரறிவினுல் அதனைத் தெள்ளிவடித்து அதன் இன்சுவையினை மிகுதிப்படுத்தி நாமெல்லாம் பருகிப் பெரியதோர் ஆறு தல் அடையக் கொடுப்பன்; அங்ஙனங்கொடுக்கப்படுந் தூய அறிவின் விளக்கமும் பாட்டென்றே அறிதல் வேண்டும். இக்கருத்துப்பற்றியே மிலிட்டன் என்னும் ஆங்கிலமொழிவல்லநல்லிசைப்புலவரும், "பாட்டென் பது மக்கள் மன அறிவினின்றும் வடித்து இறக்கப்

பட்ட தூய அமிழ்தம்ஆம்" * என்று உரைகூறினர். இது நிற்க.

இனி இங்ஙனம் இயற்றப்படுகின்ற பாட்டு உலக இயற்கையழகுடன் பெரிதும் பொருந்தி நடத்தல் வேண்டும். இன்னும் இதனை நுணுகி நோக்குமிடத்துப் பாட்டுப்பாடுதலில் வல்லவனான நல்லிசைப்புலவனுக்கும், உலக இயற்கையினைப் பலவகைவண்ணங்களால் வரைந்துகாட்டுகின்ற ஓவியக்காரனுக்கும் ஒற்றுமை மிக உண்டென்பது தெள்ளிதிற் புலப்படும். ஆயினும், ஓவியக்காரன் வரைகின்ற படம் கட்புலனுக்கு மாத்திரம் தோன்றும்; நல்லிசைப்புலவன் அமைக்கின்ற பாட்டோ கண்முதலான புலன்களின் அகத்தே விளங்கும் உள்ளத்திலே தோன்றும். ஓவியக்காரன் தான் எழுத எடுத்துக்கொண்ட பொருளைப் பன்முறையும் நுண்ணிதாக அளந்தளந்து பார்த்துப் பின் அதனைத் திறம்படவரைந்தால் மாத்திரம் அப்படத்தைக்கண்டு வியக்கின்றோம்; தான் விரித்து விளக்கமாய் எழுதவேண்டும் பகுதிகளில் அவன் ஒரு சிறிது வழுவிவிட்டானாயினும் அப்படத்தின் கண் நமக்கு வியப்புத்தோன்றாதொழிகின்றது. நல்லிசைப் புலவனோ அங்ஙனம் அவனைப்போல் ஒவ்வொன்றனையும் விரிவாக விளக்கிச்சொல்லவேண்டும் வருத்தம் உடையான் அல்லன். ஓவியக்காரன் புலன் அறிவைப் பற்றிநிற்பவன்; புலவனோ மனஅறிவைப் பற்றிநிற்பவன். புலனறிவோ பருப்பொருள்களை விரித்தறியும் இயல்பினுள்ளது; மனவறிவோ அப்புலனறிவின் அகமாய் நின்று நுண்ணிதாம் பொருளையும் தானே ஒரு

* Areopagitica

நொடியில் விரித்தறியும் ஆற்றல் வாய்ந்தது. அம்மம்ம! மனநினைவின் ஆற்றலை யாம் என்னென்று சொல்லுவேம்! அணுவை ஒரு நொடியில் மலைபோற் பருக்கக் செய்யும், மலையை மறுநொடியில் ஓர் அணுவினுங் குறுகச்செய்யும். இங்ஙனம் வியப்பான இயல்புடைய மனநினைவினை நல்லிசைப்புலவன் என்னும் மந்திரகாரன் தன்மதிநுட்பமாகிய மாத்திரைக்கோலால் தொடுதல் மாத்திரையானே அது திடுக்கென்றெழுந்து அவன் விரும்பிய வண்ணமெல்லாஞ் சுழன்று சுழன்றாடும். இன்னும் இதனைச் சிறிதுவிளக்குவாம். ஓவியக்காரன் அச்சுறுத்தும் அகன்றதொரு கரிய பெரிய காட்டினை எழுதல் வேண்டுமாயின் பலநாளும் பலகாலும் அதன் இயற்கையினை அறிந்தறிந்து பார்த்துப், பரியமரங்கள் அடர்ந்து ஓங்கி ஒன்றோடொன்று பிணைந்து வெளிச்சம் புகுதாமல் தடைசெய்து நிற்றலையும், அக்காட்டின் வெளித்தோற்ற அமைப்பினையும், மரங்களின் இடையிலுள்ள இடுக்கு வெளிகளில் நமது பார்வை நுழையுங்கால் அவைதோன்றுந்தன்மையினையும், உள்ளே இருள் தடிப்பாய்ப் பரவியிருத்தலையும் அங்குள்ளவாறே சிறந்த பலவண்ணங்களைக்குழைத்து இரட்டுத்துணியின்மேல் மிகவருந்தி எழுதிக்காட்டல் வேண்டும்; இஃது அவனுக்குப் பலநாள் வினையாக முடியும். நல்லிசைப்புலவனோ, 'பரிய மரங்கள் அடர்ந்தோங்கிப் பிணைந்துநிற்குங் கரியகாடு' என்று சில சொற்களைத் திறம்படச் சேர்த்துக்கூறுதல் ஒன்றானே ஒரு நொடிப்பொழுதில் அவ்வோவியக்காரனாலுங் காட்டமுடியாத ஒரு பெருவியப்புணர்வினை நம்மனத்தகத்தே விளைவிக்கும் ஆற்றலுடையனவன். இஃது

இவனுக்கு மிக எளிதிலே முடிவதொன்றாம். இங்ஙனம் மனவுணர்வினை எழுப்புதல் மிக எளிதிலே செய்யக் கூடிய தொன்றாயினும், அம்மனவியல்பின் நுட்பம் உணர்ந்து அவ்வாறு செய்ய வல்லரான நற்பெரும் புலவர் உலகிற் சிலரேயாவர். புலவனுடைய திறமையெல்லாம் "சில்வகை யெழுத்திற் பல்வகைப்பொருளைக் காட்டுகின்ற அரும்பெருஞ் செய்கையினாலே தான் அறியப்படும். இங்ஙனம் பாட்டுவழக்கின் நுட்பமுணர்ந்து பிறமொழிகளிற் புகழ்பெற்று விளங்கிய நல்லிசைப்புலவர்கள் ஓமர் *, தாந்தே †, செகப்பிரியர் ‡, மிலிட்டனார் §, கேதே ||, காளிதாசர் முதலியோரும், நஞ்செந்தமிழில் திருவள்ளுவர், நக்கீரனார், இளங்கோவடிகள், கூலவாணிகன் சாத்தனார், மாங்குடி மருதனார், கபிலர், சேக்கிழார் முதலானோரும் பண்டைக் காலத்துப் பழந்தமிழ்ப் புலவருமேயாம். இன்னும் இதனை விரிப்பிற் பெருகு மென்றஞ்சி இத்துணையின் நிறுத்துகின்றாம்.

பழந்தமிழ்ப் பாட்டின் சிறப்பியல்பு.

இனிப் பண்டைக்காலத்துச் செந்தமிழ்ப் புலவரெல்லாரும் உலக இயற்கைத்திறம் பிறழாமல், அதனை நுணுகி ஆராய்ந்து பாட்டுப் பாடும் மனவுறுதி மிகுதியுமுடையராயிருந்தனர். உலக இயற்கையிற் காணப்படும் அருமை பெருமையினை மிக வியந்தனர். தம்மன நினைவிற்கு இசைந்த வண்ணமெல்லாம் உலக இயற்கை

* Homer † Dante ‡ Shakespeare § Milton || Goethe

யினைத் திரித்துக் கூறாமல், அவ்வுலக இயற்கையின் அழகின் வழியே தமதறிவினைப் பொருந்தவைத்துத் தம் நினைவினை விரிவுசெய்து விளக்கிவந்தனர். இம் முறைமை நற்பெரும் புலவர்க்கு இன்றியமையாச் சிறப்பினதாம் என்னுங் கருத்துப் பற்றியே இரசிகர் * என்னும் ஆங்கிலமொழியில் உரைவல்ல ஆசிரியர், காட்டு என்ற புலவரைப் பற்றிச் சொல்லவந்தவிடத்து "அவர் தமதுணர்வின் வழியே உலக இயற்கையினை நிறுத்திக்கொள்ளாமல், அவ்வுலக இயற்கையின் வழியே தமதுணர்வை நிறுத்திநின்றார்." என்று புகழ்ந்தெடுத்துக் கூறினார். ஆகவே, உலக இயற்கையின் வழிநின்று பாட்டுப் பாடுதலே அருமையாமென்பதும், அதுவே நல்லிசைப் புலவர்க்கு அடையாளமாம் என்பதும் இதனால் நன்குபெறப்படும். பழந்தமிழ்ப் புலவர்களெல்லாரும் இந்நுணுக்கம் இனிதறிந்து விளங்கினார்களென்பதற்குப் பழைய தமிழ்ப்பாட்டுகளே சான்றாகும். எனினும், இதனை ஒருசெய்யுள் முகத்தானும் ஒரு சிறிது விளக்கிக்காட்டுவாம்.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே"

என்பது குறுந்தொகை † என்னும் பழைய தமிழ்நூலில் உள்ள ஒரு பாட்டு. தன் மகள் தன் காதற்கணவன் வீட்டில் எப்படியிருக்கின்றாள் என்பதைக் கண்

* Ruskin † குறுந்தொகை, கசுஎ.

டறியும் பொருட்டுச் சென்ற செவிலித்தாய், அவ்விரு வரும் மிக நேசமாய் இருப்பதைக் கண்டு, தன்னுள் மகிழ்ந்து சொல்லியதாக இது பாடப்பட்டிருக்கின்றது. "என் மகள் வற்றக் காய்ச்சின கட்டித்தயிரைப் பிசைந்த காந்தள் மலர்முகிழ்போற் சிவந்த மெல்லிய விரல்களால், இடுப்பிற் கட்டிய நன்குகழுவி வெண்மை யான உயர்ந்த ஆடை சமையல் செய்யும் விரைவினால் அவிழ்ந்து கழல அதனைக் கைகழுவாமல் உடுத்துக் கொண்டு, குவளைப் பூப்போன்ற மைதீட்டிய தன் கண் களிலே தாளிப்புச்செய்யும் புகைபட்டு மணக்க அதனை யும் பாராமல், தான் துடுப்பினால் துழாவி மிக அன் போடு சமைத்த தித்திப்பான புளிப்பாகினைத் தன் கணவன் மிகவும் இன்சுவைத்தாயிருக்கின்றதென்று சொல்லிக்கொண்டே உண்ணுதலைப்பார்த்து ஒளி மிகுந்த நெற்றியினையுடைய என் மகளின் முகம் உள்ளுக்குள்ளே நுட்பமாய் மகிழ்ச்சி அடைந்தது." என்பதுதான் இப்பாட்டின் பொருள். பாருங்கள்! இச்செய்யுளின் இயற்கையழகும், மனநினைவின் இயல் பும் எவ்வளவு அருமையாக இருக்கின்றன! காதற் கணவனும் மனைவியும் கெழுமி இருந்து இல்லறம் நிகழ்த்தும் ஒழுக்கம் முல்லை எனப்படுமாகலின், இவ் வொழுக்கம் நடைபெறுகின்ற முல்லை நிலத்திற்கு ஏற்ப 'முளிதயிர்பிசைந்த' என்றார்; தயிர் பால் முதலியன ஆனிரைமிக்க முல்லை நிலத்திற்கே உரியன. தன் கண வன்மேலுள்ள காதன்மிகுதியினால் ஏவலரும் பிறருஞ் சமையல் செய்வதற்கு ஒருப்படாது தான் தன் மெல் லிய சிவந்த விரல்களால் தயிரைப் பிசைதலும், கண வன் பசித்திருப்பானே என்னும் நினைவால் விரைந்து

சமையல் செய்யும்போது இடுப்பிற் கட்டிய உயர்ந்த ஆடை கழலவும் பிசைந்தகையினைக் கழுவிவிட்டு உடுப்பதற்குங் காலந்தாழ்க்கும் என்று அக்கையுடனே அவ்வுயர்ந்த ஆடையினைக் கட்டிக்கொள்ளுதலும், அங்ஙனம் பிசைந்து திருத்திய புளிப்பாகினைத்தாளிக்கும்போது மேல் எழும் புகை தன் குவளைக்கண்ணிற் படவும் அப்புறம் முகந்திரும்பினால் அது பதங்கெடும் என்று திரும்பாமல் அதனைவிரைந்து துழாவலும், அங்ஙனமெல்லாந் தன் வருத்தத்தினையும் பாராமற் சமைத்த சுவைமிக்க அப்புளிப்பாகினைக் கணவன் மகிழ்ந்துண்ணல் கண்டு தன் மகிழ்ச்சி வெளியே தெரியாமல் அவள் முகம் மலர்ந்து காட்டுதலும், இயற்கையே தனக்குள்ள நாணத்தால் அவள் முகஞ் சிறிது கவிழ்ந்து நிற்றலால் அவளது ஒளிமிக்க நெற்றியே முன் விளங்கித் தோன்றுதலும் சில சொற்களால் மிக விளங்கச் சொல்லிய நுண்மை பெரிதும் வியக்கற் பாலதொன்றாம். உள்ளமுவக்கும் முல்லை நிலத்திற் கணவனும் மனைவியும் நேசமாக மருவிவாழும் இயற்கை இப்பாட்டின்கட் படம் எழுதிக் காட்டினாற்போல எவ்வளவு எளிதாகவும் உண்மையாகவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது! இப்பொருளருமையோடு இச்செய்யுளில் உள்ள சொற்கள் எல்லாம் நீர்மடையில் தெளிநீர் மொழுமொழுவென்று ஓடுவது போல ஓசையின்பம் உடையவாய் ஒழுகுதலும், ஒரு சொல்லாயினும் பொருளின்றி வேண்டாகூற லாகாமல் முன்னும் பின்னுமுள்ள பொருட்டொடர்புக்கு ஏற்ப இடையே முழுமுழுச்சொற்களாய் அமைந்து நிற்றலும் மிகவும் பாராட்டற் பாலன.

இன்னும் பண்டைக் காலத்துத் தண்டமிழ்ப்புலவர் உலக இயற்கைப் பொருள்களை ஆங்காங்குத் திரிந்து கண்டு பெருங்களிப்பும் பெருகிய மனவெழுச்சியும் உடையராய், வருத்தமின்றி இனிதாகப் பாட்டுகள் பாடினர் என்பதற்குத் தாம்விரித்துச் சொல்லும் பொருள்களுக்கு அவர்கள் எடுத்துக்காட்டும் உவமைகளே தக்க சான்றும். ஓரிடத்தில் மான்கொம்பைப் பற்றிச் சொல்லவந்துழி 'இரும்பை முறுக்கினாற்போலுங் கரிய பெரிய கொம்பு' என்னும் பொருள்பட "இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பு" என்றும், ஓரிடத்தில் இருவர் நேச ஒற்றுமையினைச்சொல்லும்போது 'கத்திபுறை செய்யுஞ் சிறிய தொழிலாளன் பிசினொடு சேர்த்த கல்லைப்போலப் பிரியோம்' என்னும் பொருள்படச் "சிறுகாரோடன் பயினொடு சேர்த்திய கற்போற் பிரியலம்" என்றும், ஓரிடத்திற் புறந்துறுத்திய நண்டின் கண்களுக்கு வேப்பம்பூ முகையினை உவமை எடுத்து "வேப்புநனையன்ன நெடுங்கட்கள்வன்" என்றும், ஓரிடத்தில் 'வயல் நெல் புதிது ஈன்ற பசிய கதிருக்குச் செல்வர்கள் தமது குதிரையின் உச்சியில் தூக்கிக் கட்டிய தையல்மூட்டுள்ள கவரி மயிரை' உவமையாக எடுத்து "முரசுடைச்செல்வர் புரவிச்சூட்டும், மூட்டுறு கவரி தூக்கியன்ன, செழுஞ்செய் நெல்லின் சேயரிப்புனிற்றுக் கதிர்" என்றும், ஓரிடத்தில் 'மழையில்லாத வானம் பூத்ததுபோல இலை நெருங்கிய முசுண்டைச் செடிகள் வெள்ளிய மலர்களைப்பூக்க' என்னும் பொருள் போதர "மழையில் வானம் மீன் அணிந்தன்ன, குழையமல் முசுண்டை வாலியமலர" என்றும், ஓரிடத்தில் 'பஞ்சின் றொடர்

நுனிபோலுந் தலையினையுடைய புதர்களின்மேல் ஏறிப் படரும் இண்டைக் கொடிகளின்நீரில் நனைந்த தளிர்கள் நெய்யில் தோய்த்தனபோல் விளங்கி இரண்டாக இருளைக் கூறுபடுத்தினாற்போல ஒவ்வொரு தளிரும் இரண்டு கூறுபட்டனவாய்க் கரிய நிறத்துடன் அசைய' என்னும் பொருள்படத் " துய்த்தலைப்பூவின் புதலிவர் ஈங்கை, நெய்த்தோய்த்தன்ன நீர்நனை அந்தளிர், இருவகிர் இருளின் ஈரிய துயல்வர " என்றும், ஓரிடத்தில் 'பச்சை மஞ்சளின் பசிய முதுகைப்போல் சுற்றிலும் பொருத்துடம்புஉடையனவாய் அகழியிற் கிடக்கும் இருமீன்' என்பது விளங்க " முற்றுமஞ்சட் பசும்புறங் கடுப்பச், சுற்றிய பிணர்சூழ் அகழியிறவு " என்றும், ஓரிடத்தில் 'மயிலின் அடிபோல் மூன்று பிளவாய் இருக்கும் இலைகளையுடைய பெரிய கதிருள்ள நொச்சி' என்பது தோன்ற " மயிலடி இலைய மாக்குரல் நொச்சி " என்றும், ஓரிடத்தில் 'கதிர் அரிந்துவிட்ட தினைப்பயிரின் தாள்போன்ற சிறிய பசுங்காலையுடையவாய் ஓடும் நீரில் ஆரால்மீனைப் பார்த்துக்கொண்டிருக்கும் நாரை' என்பது புலப்படத் " தினைத்தாள் அன்ன சிறு பசுங்கால, ஒழுகுநீர் ஆரல் பார்க்குங் குருகு " என்றும் போந்த தன்மைநவிற்சியணிச்சொற்றொடர்களானே பழைய தமிழ்ப்புலவரின் விழுமிய உலகியில் அறிவினை இனிது அறிந்துகொள்ளலாம். இன்னும் இவைபோன்ற எடுத்துக்காட்டுகள் நூறு நூறாகப் பெருக்கலாமேனும், இங்கு அதற்கு இடம் பெறுதல் கூடாமையின் இதனை இவ்வளவில் நிறுத்துகின்றாம். இத்துணை நுட்பமான உலகியல் அறிவு பண்டைக் காலத்துத் தண்டமிழ்ப் புலவரிடங் காணப்படுதல்

போல, மற்றைமொழிகளில் வல்லராய் விளங்கிய ஏனைப்பழம்புலவரிடத்துங் காணப்படுதல் அரிது. இன்னும் இவ்வாறே பழைய தமிழ்ப்புலவர் உலக இயற்கைப்பொருட் காட்சிகளைப் புனைந்துரைத்த முறையும், அவ்வுலக இயற்கைக்கும் மக்களியற்கைக்கும் உள்ள பொருத்தம் பற்றி அவர் வெளியிட்ட அரிய கருத்துகளின் விழுப்பமும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிற் பரக்கக்காணலாம். ஆண்டுக்கண்டுகொள்க.

கி. மு நானூறு ஆண்டு முதல் கி. பி. நூறுண்டு வரையில் தொடர்புற்று விளங்கிய செந்தமிழ் இலக்கிய காலத்தில் இயற்றப்பட்ட நூல்களின் இயற்கையும், அந்நூல்களுக்கும் முல்லைப்பாட்டிற்கும் உள்ள இயைபும், அக்கால வரலாறும்.

இனிக் கிறித்துபிறப்பதற்கு முன் நூற்றுண்டுகளிலே மிகவும் புகழ்பெற்று விளங்கிய புலவர் காலமும், அவர் பிறந்த பின்நூற்றுண்டிலே அவ்வாறு விளங்கிய புலவர் காலமும் செந்தமிழ்மொழி மிக உயர்ந்த நிலையிலே இருந்து திகழ்ந்தகாலமென்று அறிதல் வேண்டும். கிறித்து பிறப்பதற்கு முன் ஒரு நானூறு ஆண்டும் அவர் பிறந்தபின் ஒரு நூறு ஆண்டும் சேர்ந்து முடிந்த ஓர் ஐந்நூறுண்டும் தமிழ்மொழி மறுவற்ற மதிபோற் கலைநிரம்பி விளங்கிய காலமாகும். இக்காலத்திலே சிறந்த புலவர் பலர் தோன்றிப் பலவகையான அரிய பெரிய செந்தமிழ் நூல்கள் இயற்றினர். இப்புலவர்களைப் போற்றித்

தமிழை வளம்படுத்தற்கு ஆவல் மிக்க அரசர் பலரும் வள்ளல் பலரும் ஆங்காங்கு மிகுந்திருந்தனர். தமிழ அரசர்கள் பலர் கல்வி வளத்தானும் செல்வ வளத்தானும் மேம்பட்டுப் போர்வல்லமையினும் பெருமை படைந்து தமிழ் மொழியினைப் பல விடங்களினும் பெருகச்செய்வதிற் கருத்தூன்றினராய் இருந்தார். இக்காலத்திலேதான் தனக்கு ஒப்பும் உயர்வும் இன்றி விளங்காநிற்கும் திருக்குறள் என்னும் அரும்பெருநூல் எழுதப்பட்டது ; சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான சிறந்த தமிழ்க் காப்பியங்களும், பழமொழி, நான் மணிக்கடிகை முதலான அறநூல்களுந் தோற்ற முற்று எழுந்தன. இவ்வைந்நூறாண்டுகளுக்கு முன் னிருந்த தமிழ்ப்புலவர்களாற் பாடப்பட்டுச் சிதறிக் கிடந்த அருந்தமிழ்ப்பாட்டுக்களெல்லாம் ஒருங்கு தொகுக்கப்பட்டு நாலடி நானூறு, புறநானூறு, கலித் தொகை முதலிய வகைவகைத் தொகைநூல்களாக இக்காலத்திலேதான் ஒழுங்குபடுத்தப் பட்டன. பண் டைக்காலத்திலே செய்யப்பட்ட தோல்காப்பியம் என் னும் அரிய பெரிய தமிழிலக்கணத்தில் மிகச்சிறந்த பகுதியான பொருளதிகாரத்தின் விரிவையெல்லாம் சுருக்கி அதனைவடித்த பிழியாக இயற்றப்பட்ட இறையனரகப்பொருள் என்னும் மனவியற்கைநூல் பன்னெடுங்காலமாக மறைந்துகிடந்து பின்னர் இக்கா லத்திலேதான் வெளிவந்துலாவலாயிற்று. இன்னும் இக்காலத்திலே இன்றியமையாது அறியற்பாலதாம் சிறப்பியல்பு ஒன்றுண்டு. இதற்கு முன்னெல்லாம் தமிழ் பெரும்பாலும் செய்யுள் வழக்கிலே பெருகிவந் தது, இக்காலத்தில் அதனோடு உரைவழக்கும் விரவிப்

பயிலத் தொடங்கிற்று; சொல் விழுப்பமும் பொருள் விழுப்பமும் பொருந்த மிக இனியதோர் உரை மிக நுணுக்கமான அறிவினையுடைய நக்கீரர் என்னும் நல்லிசைப்புலவரால் இறையனாரகப்பொருள் என்னும் நூலுக்கு வரைந்து தரப்பட்டது. இவ்வுரை சூத்திரத்தின் பொருளை இனிது விளக்கும் பொருட்டே எழுதப் பட்டதாயினும், மற்றை உரைகள்போற் சுருங்காது மிகவிரிந்து இன்றியமையாது உணரற் பாலனவாம் அரும்பெருந் தமிழ் நுட்பங்களெல்லாம் ஒருங்கு நிரம்பப் பொலிகின்றது. ஆகவே, இக்காலத்தில் மிகச் சிறந்த உரைகாரராய்த் தோன்றித் தமிழ்மொழியிற் பலவகையான நல்ல சீர்திருத்தங்களெல்லாம் செய்து அதனைப் பெருகச்செய்துவந்த நற்பெரும் புலவர் ஆசிரியர் நக்கீரனார்தாமென்று அறியற் பாற்று. இவ்வைந் நூறாண்டுகளும் விரிந்து பெருகிவழங்கிய தமிழ் நூல்களில் வடமொழிக்கலப்பால் தோன்றிய விருத்தப்பா என்பது இன்னும் தோற்றமுற்று எழுந்திலது. இது நிற்க.

இனி இங்ஙனந் தமிழ் பெருக்கமுற்று விளங்குதற்கு ஒரு பெருந்துணைக்காரணமாய் இருந்தது யாது? என்றுஆராயப் புகுந்தவழிப் பௌத்தசமயம் ஆங்காங்கு விளக்கமுற்றுப் பரவிவந்தமையே என்பது புலப்படுவதாயிற்று. பண்டைக்காலத்தே ஆசியாக்கண்டத்தின் வடதிசைப்பக்கங்களில் இருந்த ஆரியர் குளிர் நனிமிகுந்த அவ்விடங்களை விட்டு இந்தியநாட்டிற் புகுதன் முன் இவ்விந்திய நாடு முழுதும் பரவியிருந்த மக்கள் தமிழரேயாவர். தமிழர் இருந்த இவ்விந்திய நாடு பெரும்பாலும் வெப்பம் மிகுந்த நாடாதலால் இதி

விருந்த அவரெல்லாம், குளிர் மிகுந்த ஆசியாக்கண்டத்தின் வடக்கேயுள்ள ஆரியமக்களைப்போல் அத்துணை உடல்வலிமை யுடையராக இருந்திலர். உடம்பில் உரங் குன்றியிருந்தமையால் தமிழர் தமக்குள்ளே கலாம் விளைத்து ஒற்றுமை குலைதற்கு இடம் பெறுதலின்றிப் பெரும்பாலும் ஒருமைப்பாடு உடையராய் நாட் கழித்தனர். உடல் வலிவின் குறைவால் அவர் மன அடக்கம் பெற்று எதனையும் ஆழ்ந்தறியும் இயல்புடையராயிருந்தனர். உலகஇயற்கையிலுள்ள அழகினைக்கண்டுவியந்து அவ்வளவில் அமைந்துவிடாமல் அவ்வியற்கையின் உள் நுழைந்து அங்கெல்லாம் பிறழாத ஓர் ஒற்றுமையும், அவ்வொற்றுமையினை நிலைப்படுத்தி மறைந்துகிடக்கும் ஓர்உயிர்ப்பொருளினிருப்பும் கண்டறிந்துகளிப்படைந்தனர். அங்ஙனம் இவ்வுலக இயற்கையில் மறைந்து விரிந்து கிடக்கும் அவ்வுயிர்ப் பொருளினையே கடவுள் என்று துணிந்து அதனை மனத்தால் நினைந்து நாத்தழுதழுப்ப வாழ்த்தி வழிபட்டு வாழ்ந்தனர். அவர் தமது உடல் வலிவின் குறைவால் பலப்பலவகையான சடங்குகள் இயற்றி வழிபடுதற்கு ஒருப்படாமல், தனியே ஓர் இடத்தில் மன அமைதியோடு இருந்து அக்கடவுட் பொருளை மனத்தாற் பல கால் உறைப்ப நினைந்து, அதனால் அறிவாழமுடையராய்த் துலங்குவாராயினர். இவர் இவ்வாறு இருப்ப, ஆசியாவின் வடபகுதிகளில் இருந்த ஆரியரோ குளிரால் உடம்பு இறுகி மிக்க வலிவும் சுருசுருப்பும் உடையராயிருந்தனர்; உடம்பில் வலிவுமிக உடைமையால் மன அடக்கம்பெற்று ஓரிடத்தில் மனவமைதியோடும் இருக்கப்பெறாமல் அவர் தொகுதி தொகுதியாகப் பலதிசையிற் பிரிந்துபோய் அங்கங்

குள்ளாரோடு போர் புரிந்து, அவரையெல்லாம் தம் விருப்பத்தின் வழியிலே நிறுத்திக்கொண்டு மிக்க செல்வவளத்தோடும் வாழ்ந்து வரலாயினர். அவர் மற்றையோருடன் போர்இயற்றப் போகுங்காலங்களினெல்லாம் தாமே வெற்றி பெறற் பொருட்டு அதனைப் பெறுவிக்கும் பொருள் யாது என்று ஆராயத்தலைப்பட்டார். அங்ஙனம் அவர் ஆராயத்தலைப்பட்ட வழியெல்லாம் தமக்குள்ள உடம்பின் சுருசுருப்பால் அவர் தம் அறிவு அமைதியுற்று ஆழ்ந்து செல்லப்பெறுமையால், உலகம் நடைபெறுதற்கு வெளிக்காரணங்களாய்த் தோன்றும் ஞாயிறு, திங்கள், இந்திரன் முதலியவற்றையே கடவுளெனத்துணிந்து வழிபடலானார்; வழிபடுங் காலங்களினெல்லாம் தமதுடம்பின்வலிவினாற் பல வகையான விலங்குகளைக் கொன்று அவற்றின் இறைச்சியைத் தேவர்க்கு ஊணென ஊட்டி வேள்விசெய்தும், வேள்விச் சடங்குகளைப் பலவேறு வகையவாய்ப் பெருக்கி இயற்றியும் வந்தனர். இருக்குவேதத்தின் முதன் மண்டிலத்தில் உள்ள,

"பகைவரை அழிப்பவனே! இவ்வழிப்பறிகாரர் கூட்டங்களின் தலைவரையெல்லாம் ஒன்றாகத் திரட்டி நின் அகன்ற அடியினால் அவர்களைத் தேய்த்து விடுக! நின் அடி அகலமாயிருக்கின்றது.

"ஓ இந்திரனே! சிவந்த நிறம் உடையராய் ஊனைப்பிடுகின்ற பிசாசரை அழித்து விடுக"

என்னும் இவைபோன்ற பாட்டுக்களால் அவர் அவ்வியல்பு உடையராதல் துணியப்படும். இவ்வியல்புள்ள ஆரியர் இந்தியாவினுட் புகுந்தபோது அங்கே தமக்கு முன்னிருந்த தமிழரில் அறிவு திருந்தாது

சிறிது கொடுந்தோற்றம் உடையராய் இருந்தவர் தமக்கெல்லாம் பிசாசர் இராக்கதர் என்னும் பெயர்கள் இட்டு உரைப்பாராயினர். கிரேக்கர் மற்றைச் சாதியாரைப் பார்பேரியர் என்றும், தமிழர் ஏனையோரை மிலேச்சர் என்றும் அழைத்தல்போல ஆரியருந் தமிழரிற் சிலரை அவ்வாறு பெயரிட்டழைத்தார். தமிழர் முன்னாளில் ஆரியரையெல்லாம் மிலேச்சரென்று அழைத்தமை "மிலேச்சர் ஆரியர்" என்னும் திவாகரபிங்கலந்தைச் சூத்திரத்தால் நன்கறியப்படும். உடல் வலிமை மிகவும் உடைய ஆரியர் இந்தியாவினுட் புகுதலும் தமிழரிற் சிலர் அவரோடு போர்புரிந்து தோல்வியடைந்தனர்; சிலர் அமைதியின்பொருட்டு மலைகளினுங் காடுகளினும் போய் இருந்தனர்; சிலர் கடும்போர் மலைந்து ஆரியரை வெற்றிபெற்றனர்; சிலர் தாந்தாம் இருந்த இடம் விட்டுப் பெயராமல் ஆரியரை விருந்தாக ஏற்று அவருடன் உறவாடி அவர் வழக்க ஒழுக்கங்களிற் சிலவற்றைத் தாம் தழுவியும், தம் வழக்க ஒழுக்கங்களை அவர் தழுவுமாறு செய்வித்தும் அவரோடு ஒருமையுற்று வாழத் தொடங்கினர். இவ்விருவகை இனத்தாரும் ஒருவரோடு ஒருவர் மருவி வாழும் நாட்களில் அவ்வவர் தத்தமக்கே உரிய வழக்கவொழுக்கங்களை முழுவதுந் திரித்துப் பிறழவிடாமல், அவை தம்மிற் பெரும்பான்மையவற்றை முன்னிருந்தபடியே எடுத்துக் கடைப்பிடித்து ஒழுகினர். இக்காலத்தில் ஆரியருட் குருக்கள்மார் பலர் தோன்றிப் பலவகையான வேள்விகள் செய்யவேண்டும் என்று வற்புறுத்தி அவற்றைத் தமிழ அரசர் உதவியாற் செய்து வந்தனர்; அப்போதுதான் அவ்வேள்விச் சடங்குகள் செய்யவேண்டும் முறையினை மிக விரித்

தெழுதிப் பிராமணங்கள் இயற்றப்பட்டன. எல்லை இல்லாத ஏழைவிலங்கினங்களைக் கொலைசெய்து இயற்றப்படும் வேள்விகளும் வேள்விச் சடங்குகளும் ஆரியக் குருக்கள்மார்களின் பிறழ்ச்சி அறிவால் எங்கும் மிகுந்துவரவே, உயிர்க்கொலைக்கு இயற்கையிலே உடம்படாத தமிழரில் அறிவான்மிக்க சான்றோர்கள் 'இங்ஙனம் தீதற்ற உயிர்களின் உடம்பைச்சிதைத்து வேள்விகளைச் செய்தலாற் போதரும் பயன் என்னை?' என்று தம் ஆரிய நண்பருடன் நயமாய்க்கலந்து வழக்கிட்டு அவரிற்சிலரைத் தம் வழிப்படுத்திக்கொண்டார். இங்ஙனந் தமிழரின் அறிவாழ ஆராய்ச்சியினை ஆரியநன் மக்கள் சிலர் தாமும் தழுவி ஒழுகப்புகுந்த காலத்திலே தான் உபநிடதங்கள் எழுதப்பட்டன. இவ்வுபநிடதங்கள் ஆரியர்க்கு எட்டாதிருந்த அறங்களை அறிவுறுத்தி அவர் செய்து போந்த உயிர்க்கொலையினை நிறுத்துதற் பொருட்டாகத் தமிழ்ச்சான்றோர்களால் இயற்றப்பட்டனவா மென்பதற்கு அவ்வுபநிடதங்களிலேயே மறுக்கப்படாத சான்றுகள் பலவிருக்கின்றன. இங்ஙனம் உபநிடதங்கள் எழுதப்பட்ட பின்னரும் விலங்கினங்களைப் பலியிடுவித்துச் செய்யும் வேள்விகள் சிறிதுங் குறைபடாமல் ஆரியர்க்குள் மிகுந்துவந்தமையானும், ஆரியக் குருக்கள்மார் தங்கொள்கைக்கு இணங்காத தமிழரையும் அதுசெய்யும்படி வலிந்து வருத்தினமையானும் ஆரியர்க்குந் தமிழர்க்கும் இதன்பொருட்டு வழக்குகளும் எதிர்வழக்குகளும் நேர, அவ்வமயத்தில் வடநாட்டிலிருந்த தமிழ அரசர் குலத்திற் கௌதமசாக்கியர் என்பார் தோன்றிப் பழைய தமிழ் மக்கள் ஆராய்ந்துவந்த அரிய நல்லொழுக்க முறைகளை எடுத்து விரித்-

துச் சொல்லப்புகுந்தார். கல்லாத மக்கள் மனமுங் கரைந்து உருகும்படி மிக இரக்கத்துடன் நல்லொழுக்கங்களின் விழுப்பத்தை எடுத்து விரித்து, இந்நல்லொழுக்கங்களை ஒருவன் வழுவாமல் தழுவி நடப்பனாயின் அவனுக்கு எல்லாத் துன்பங்களினின்றும் விடுபடுகின்ற நிருவாணம் என்னும் தூயநிலை தானேவருமென்றும், அறிவில்லாத ஏழை உயிர்களை ஆயிர மாயிரமாகக் கொன்று வேள்வி வேட்டலால் மேலு மேலும் பாவமே விளையுமல்லது புண்ணியம் எய்தாதென்றுங் கௌதமர் அருள்கனிந்து அறிவுறுப்பாராயினர். மக்கள் உள்ளத்தை எளிதிலே கவர்ந்து உருக்கும்படியான கௌதமர் கொள்கைகள் சிலநாளிலே எங்கும் பரவின. மக்களெல்லாரும் ஆரியக் குருக்கள்மார் சொற்களில் ஐயுறவு கொண்டு தம் அறிவால் நல்லன பலவும் ஆராயப்புகுந்தார்கள். எங்கும் அவரவர் தத்தங் கருத்துக்களிற் றோன்றும் நுட்பங்களைத் தாராளமாய் வெளியிடத் துணிந்தனர். பிராஞ்சு தேயத்திற் * றோன்றியதைப் போன்ற ஒரு பெரிய மாறுதல் எங்கும் உண்டாவதாயிற்று. இங்ஙனம் ஒருபெரிய மாறுதல் இந்திய நாடு முழுவதுஞ் சுழன்றுவரும்போது தென்னாட்டிலுள்ள தமிழரும் தாம் தமதுள்ளத்தே ஆராய்ந்துவைத்த அரிய பெரிய நுண்பொருள்களை வெளியிட்டுத் தமது பண்டைத் தமிழ்மொழியினைப் பண்டை நாளிற் போலப் பெரிதும் வளம்படுத்துதற்குத் துவங்கினர். இங்ஙனங் கிறித்து பிறப்பதற்கு முன் ஒரு நானூறு ஆண்டும் பின் ஒருநூறாண்டும் மிக விரிந்து பெருகிய சமய விளக்கமே அக்காலத்திற் றமிழ்மொழியின்கண்

* The French Revolution.

அரும் பெருஞ் செந்தமிழ் நூல்கள்பல தோன்றுதற்கு ஒரு பெருங்காரணமாயிற்று என்று தெளிவுற அறிதல் வேண்டும். ஆசிரியர் திருவள்ளுவநாயனார் இயற்றிய அரிய பெரிய திருக்குறள் என்னும் நூலிற் கொல்லாமை புலாலுண்ணாமை ஒழுக்கமுடைமை என்னுந் தமிழர்க்குரிய அறிவாழ நுட்பப்பொருள்கள் பலகாலும் பலவிடத்தும் எடுத்து வற்புறுத்தப்படுதல் காண்க.

இனி இப்பொருள்களெல்லாம் பௌத்தசமய நூல்களிலிருந்தெடுத்துச் சொல்லப்பட்டன என்பாரும், திருவள்ளுவ நாயனார் பௌத்தரே என்பாரும் உளர். இயற்கையிலே தமிழர்க்குரிய ஒழுக்கங்களின் விழுப்பத்தையே கௌதமர் என்னுந் தமிழப்பெரியார் விளக்க வந்தமையால், அவ்வொழுக்கவரிசைகள் அவர் சொன்னபின் எடுத்துக்கொள்ளப்பட்டன என்பது பொருந்தாது. திருவள்ளுவனார் முதலிய சான்றோர், தமக்கும் தம்மினத்தார்க்கும் இயற்கையிலே தோன்றிய அரும்பொருள்களைப் பௌத்தசமயம் யாண்டும் விரிந்து பரந்தகாலத்தில் தடையின்றிச் சொல்லுவதற்கு இடம் பெற்றாராகலின், அக்கருத்துகள் திருவள்ளுவனார்க்குங் கௌதம சாக்கியருக்கும் பொதுவானவேயாம் என்று துணிக.

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று"

என்னுந் திருக்குறளில் ஆசிரியர் ஆரியமக்கள் செய்யும் வேள்விப்பயனை மறுத்துக் கொல்லாமையின் சிறப்பை வலியுறுத்திக் கூறியதுங் காண்க. இன்னும் இவ்வாறே ஆசிரியர் ஆங்காங்கு ஆரியமக்கள் செய்யும் மற்றை

வினைச் சடங்குகளையும் மறுத்துக் கூறுதல் கண்டு கொள்க. ஈண்டு அவையெல்லாம் எடுத்துரைப்பிற் பெருகும்.

இனி இவ்வாறு ஒரு காலத்தில் நடைபெறும் ஒழுக்கங்களுக்கும் அக்காலத்திற் றோன்றும் நூல்களுக்கும் பெரியதோர் இயைபு உண்டென்பதனை விளக்குதற் பொருட்டே இவ்வோர் ஐந்நூறாண்டின் நடைபெற்ற நிகழ்ச்சியினை ஒரு சிறிது விரித்துக் கூறினும். ஒரு நூலின் இயல்பை உள்ளவாறு உணர்தற்கு அந்நூல் எழுதப்பட்ட காலத்தின் இயற்கை இன்றியமையாது அறியற்பாலதாம். இதுபற்றியே ஆங்கிலமொழியில் நுட்பவாராய்ச்சிகள் பல எழுதிய உவில்லியம் மிண்டோ * என்னும் உரைகாரர், "காலப்போக்கு என்பது இன்னதென்று தொட்டு அறியப்படாத ஓர் இயற்கை வாய்ந்தது ; அஃது அக்காலத்து மக்கள் இயற்றும் நூல்களினும், கொத்துவேலைகளினும், உடைகளினும், அவர்கள் நடாத்தும் வாணிகவாழ்க்கையினும், அவர்கள் அமைக்குந் தொழிற் களங்களினும் எல்லாம் தன் அடையாளத்தைப் பதிய இடுகின்றது. ஒரு புலவனும் இக்கால இயற்கையின் வழி நின்றே நூல் எழுதுபவனுவன். அக்கால இயற்கை அல்லது அம்மக்கள் ஒப்புரவு அவன் எழுதுவனவற்றை எல்லாம் தன் உருவாக்கி அவற்றிற்குத் தன் நிறத்தை ஊட்டுகின்றது. இதனை நாம் கண்டறிவதற்கு அக்காலத்தின் பொது இயற்கையும், அம்மக்கள் நடையினியற்கையும், அவன் இருக்கும் இடத்தின் இயற்கை

* Professor William Minto

யும் இன்றியமையாது ஆராயற்பாலனவாம். ''* என்று மிகநுட்பமாக் எடுத்து மொழிந்திட்டார். அதுகிடக்க.

இனி இவ்வோர் ஐந்நூறாண்டிற் றோன்றிய நூல்களெல்லாம் பெரும்பாலும் அக்கால இயற்கை தங்கண் எதிர் தோன்றி விளங்கப்பெறும் ஒரே தன்மையுடையவாகு மென்று தெரிதல் வேண்டும். அறிவு ஆழமின்றி ஆரியமக்கள் செய்து போந்த வீணை வெறுஞ்சடங்குகளிற் கட்டுப்படாமல் தனியே பிரிந்துநின்ற தமிழ் மக்கள் உலக இயற்கையினையும் மக்களியற்கையினையும் உள்ளூருவி நுழைந்து ஆராய்ந்து தாங்கண்ட அரிய பொருள் நுட்பங்களை அமைத்து நூல்கள் இயற்றினர். ஆகவே, உலக இயற்கையினையும் மக்களியற்கையினையும் ஆராயும் ஆராய்ச்சி இக்காலத்துத் தோன்றிய நூல்கட்கெல்லாம் பொதுத்தன்மை யென்றுணர்க. இனி இவ்வுலக இயற்கையினை ஆராயும் நூல்கள் எல்லாம் புறப்பொருள் எனவும், மக்களியற்கையினை ஆராய்வனவெல்லாம் அகப்பொருள் எனவும் தொல்லாசிரியரால் வகுக்கப்பட்டன. இவற்றுள் அகப்பொருள் என்பது ஆண்பெண் என்னும் இருபாலாரையும் செறியப்பொருத்துவதாய், மற்றெல்லா உணர்வுகளையும் நினைவுகளையும் தனக்குக் கீழாக நிறுத்தித் தான் அவற்றின்மேல் அமர்ந்து தனக்கு நிகரின்றிப் பெருமையுடன் தோன்றுவதாய், இன்பமுந் துன்பமுமெல்லாந் தோன்றுதற்குத் தான் ஒரு நிலைக்களனாய், எல்லா உலகங்களும் எல்லாப் பொருள்களும் தன்னைச் சுற்றிச் சுழன்று செல்லத் தான் அவற்றின் இடையே சிறிதுந் திரிதலின்றி நிலைபெற்று விளங்குவதாய் உள்ள

* The Literature Of the Georgian Era.

அன்பு அல்லது காதல் * என்பதனை அடிப்படையாகக் கொண்டு மக்களியற்கைமுழுவதூஉம் ஒருங்கே ஆராய்வதாம். இனிப் புறப்பொருள் என்பது மக்கள் உலக இயற்கையுடன் பொருந்தித் தமக்கு இன்றியமையாது வேண்டப்படும் பலவகை வினைகளேயும் முற்றுப்பெறுவித்தற் பொருட்டுச் செய்யும் முயற்சி வேறுபாடுகளும் பிறவுந் தெள்ளிதின் ஆராய்வதாம்.

இனிப் பொதுவாக எல்லா மாந்தர்க்கும் உரிய இயற்கையினைப் பகுத்துரைப்பதாகலின், அகப்பொருள் ஒழுக்கம் பயின்றுவரும் பாட்டுக்களில் சிறப்பாக ஓர் ஆண்மகனையும் ஒரு பெண்மகளேயும் எடுத்துவைத்து, அன்னவர்தமக்குரிய பெயர்சொல்லி அவைதாம் எழுதப்படுதல் இல்லே. எல்லாமக்கட்கும் பொதுவாய் வருகின்ற அன்பினால் நிகழும் ஐந்திணை ஒழுக்கத்தை ஒருவர் இருவர்க்கு வரையறுத்துக்கூறுதலால், அவ்வன்பின் ஐந்திணையொழுக்கம் ஏனையோர்க்கு இல்லையாம்போலும் என மலைவு தோற்றுவித்து வழுவாய் முடிந்திடுமாகலின், அப்பாட்டுக்கள் எல்லாம் குறித்து ஒருவர் பெயர் சொல்லாமலே வரையப்படும் என்பது தெளிந்துகொள்க. இது கடைப்பிடியாய் உணர்த்துதற்கே ஆசிரியர் தொல்காப்பியனார்,

> "மக்கள் நுதலிய அகன் ஐந்திணையுஞ்
> சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்."

என்று கிளந்து கூறினர்.

இனி இதுபோற் பொதுவாக வன்றி, மக்களுள் ஒவ்வொருவரும் தத்தம் முயற்சி வேறுபாடுகளுக்கு ஏற்பப் பலவகைப்பட்ட உணர்வும் பலவகைப்பட்ட

* Love.

செயலும் உடையராய் உலகநடையறிந்து ஒழுகுவராக லின், இங்ஙனமான அவர்தம் புறப்பொருள் ஒழுக்கம் பயின்றுவரும் பாட்டுக்களில் அவ்வவர்க்கே உரிய பெயர் பண்பு செயல் முதலியன எல்லாம் கிளந்தெடுத்துக் கூறி மற்று அவை எழுதப்படும் என்க. ஒருவர் பண்புஞ் செயலும் ஏனையொருவர் பண்புஞ் செயலும் போலன்றி உலக நடையிற் பெரும்பான்மையும் வேறுபட்டு வெளியே தோன்றிக்கிடத்தலால், அங்ஙனம் வெளிப்பட்டுத் தோன்றும் பண்புசெயல்களைக் கூறும் புறத்திணைப்பாட்டுக்களில் அவ்வப்பண்புசெயல்கட்கு உரியார்பெயர் கூறல்வேண்டுவது இன்றியமையாததேயாம் என்க. இந்நெறி அறிவுறுத்தற்பொருட்டே ஆசிரியர் தொல்காப்பியனார்,

"புறத்திணை மருங்கிற் பொருந்தி னல்லது
அகத்திணை மருங்கின் அளவுத லிலவே"

என்று கூறினார்.

இனி அகம் புறம் என்னும் இவ்விருவகை ஒழுக்கமுங் கலந்து வரும் பாட்டுக்களில் அகவொழுக்கமே பெரும்பாலும் முன்னும் பின்னுந் தொடர்புற்றுச் செல்ல, அதன் இடையிலே ஒரு புறவொழுக்கம் சிறுகி வருமாயின், அவற்றுள்ளும் ஒருவர்பெயர் குறித்துச் சொல்லப்படுவதில்லை. அவ்வாறன்றி அவற்றுள் முன்னும் பின்னும் ஒரு புறவொழுக்கம் தொடர்புற்றுச் செல்ல இடையிலே ஓர் அகவொழுக்கங் குறுகிவருமாயின் அவற்றுள் அவ்வொழுக்கம் உடையார் பெயர் பண்பு முதலாயின கிளந்து சொல்லப்படும். இவ்வாறன்றி அகப் புறவொழுக்கங்கள் இரண்டும் இணைந்து ஒப்பவருமாயின் அங்கும் அம்மக்கள் பெயர் பண்பு

முதலாயின கிளந்து சொல்லப்படும் என்பது அறிக. இங்குச் சொல்லப்பட்ட இவ்விலக்கணங்கள் இவ்வைந் நூறாண்டிற் பிறந்த நூல்களினெல்லாம் இனிதுகாணப் படும்.

முல்லைப்பாட்டின் இயற்கையும் அதன் பாட்டியற்றிறமையும்.

இனி இங்கு ஆராய்தற்பொருட்டு எடுத்துக் கொண்ட முல்லைப்பாட்டில் “தன் மனையாளைப்பிரிந்து மற்றை வேந்தரோடு போர்செய்யப்போவானொருதலைவன் தான் பிரிவதனை அவளுக்கு நயமாக உணர்த்திக் ‘கார்காலத் தொடக்கத்தில் வருவேன், அதுகாறும் நீ ஆற்றிக்கொண்டிரு’ என்று சொல்லிப் பிரிய, அச் சொல்வழியே ஆற்றியிருந்தவள் அவன்சொன்ன கார் காலம் வரக்கண்டும் அவன் வந்திலாமையிற் பெரிதும் ஆற்றாளாயினள்; பின்னர்ப் பெருமுதுபெண்டிர் பல வகையால் ஆற்றுவிக்கவும் ஆற்றாதவள் ‘இங்ஙனம் ஆற்றாது வருந்தல் கணவன்கற்பித்த சொல்லைத் தவறிய தாய் முடியுமாதலால், அவர் வருங்காறும் ஆற்றுதலே முறை’ யென்று உட்கொண்டு பொறுமையுடன் இருந்த தலைவியிடத்துச் சென்றதலைவன் மீண்டுவந் தமை” ஆகிய அகப்பொருள் இருப்புச் சொல்லப்பட் டமையால் இப்பாட்டின்கட் டலைமகன் தலைமகள் சிறப் புப்பெயர் இன்னவென்றுஎடுத்துச்சொல்லப்படவில்லை. இங்ஙனந் தலைமகன் தலைமகளைப் பிரியும்போது ஆற்று

வித்துப்போதலும், போனபின் அவன் வினை முடித்து வருந்துணையும் அவள் ஆற்றியிருத்தலும் இங்குச் சொல்லப்பட்ட தலைமக்களுக்கே யன்றி எல்லார்க்கும் உரியனவாகையால் ஆசிரியர் நப்பூதனார் அவர்பெயர் இங்கெடுத்துச்சொல்லாமை பற்றி வரக்கடவதோர் இழுக்கு ஒன்றுமில்லையென்றுணர்க.

இனி முல்லை என்னும் அகவொழுக்கத்தோடு இயைபுடைய புறவொழுக்கம் வஞ்சி என்பதாம்; "வஞ்சிதானே முல்லையதுபுறனே" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும். வஞ்சி என்பது ஓர் அரசன் வேற்றோர் அரசன்நாடு கைப்பற்றும் பொருட்டுப் படையெடுத்துச் செல்வது. வஞ்சித்திணை முல்லைத்திணைக்குப் புறனானவாறு யாங்ஙனமெனின்; மனைவி தன் காதலனைப் பிரிந்து மனையின் கண் இருப்பதுபோல அவள் கணவனும் அவளைப்பிரிந்து பாடிவீட்டின் கண் இருப்பன் ஆகலானும், தலைமகள் வீடு காட்டின் கண் இருப்பதுபோலப் பாடிவீடும் பகைவர் நகர்க்கு அரணான காட்டின்கண் அமைக்கப்படும் ஆகலானும் முல்லையும் வஞ்சியுந் தம்முள் இயைபு உடைய ஆயின என்க.

இனி நப்பூதனார் என்னும் நல்லிசைப்புலவர் 'முல்லை' என்னும் அகவொழுக்கத்திணைவிரித்துச் செய்யுள் இயற்றுகின்றார் ஆகலின், அதனோடு இயைபுடைய வஞ்சியொழுக்கத்தை அரசன் பகைமேற் சென்று பாசறையிலிருக்கும் இருப்புக் கூறுமுகத்தால் இதன்கண் அமைத்துக்கூறுகின்றார். இவ்வாறு தாம் எடுத்துக் கொண்ட பொருளுக்கு மாறுபடாமல் இவ்வாசிரியர் வேறு பொருளை இதன்கட்பொருத்தி உரைக்கும் நுணுக்கம் மிகவும் வியக்கற்பால தொன்றாம்.

இன்னுந் தாங் கூறல்வேண்டும் முதன்மையான ஒரு பொருளைப் பொருக்கான சொற்றொகுதியினல் எடுத்துக் கோவையாகத் திரித்து நூற்றுக்கொண்டு செல்லும்போது, அப்பொருளின் இடையே அதனோடு இயைபுடைய வேறொரு பொருளை இணைத்துச்சொல்லும்பொழுது நேருமாயின், பொருளின்பங்கெடாமல் இடன் அறிந்து அதனைப்பிணைப்பது நல்லிசைப்புலவரிடத்துக் காணப்படும் அரியவினைத்திறமையாமென்பது அறியற்பாற்று. இவ்வரியவினைத்திறமை நப்பூதனர் இயற்றிய இச்செய்யுளின்கண் வெள்ளிடைமலை போல் விளங்கிக்கிடக்கின்றது. 'முல்லை' என்னும் அகவொழுக்கத்தினை விதந்து சொல்லவந்த ஆசிரியர் அதனை முற்றுங் கூறி முடித்தபின், அதனோடு இயைபுடைய அரசன் போர்மேற் செல்வதான வஞ்சியைக் கூறுவராயின், கற்கின்றவர்க்குப் பின்ஒட்டிச்சொல்லப்படும் வஞ்சி ஒழுக்கத்தினைக் கேட்டவிற் கருத்து ஊன்றுமையே யன்றி, இருவேறு ஒழுக்கங்கள் தனித்தனியே சொல்லப்பட்டும் ஒன்றற்கே உரிய முல்லை என்னும் பெயர் மட்டுஞ் சூட்டியகுற்றமும் உண்டாம். அவ்வாறன்றி முல்லைப் பொருளுக்கு நடுவே எங்கேனும் ஓரிடத்திற் பொருத்தமின்றி அவ்வஞ்சிப் பொருளை மாட்டிவிடினுங் கற்போர்உணர்வு இளைப்படையுமாகலின் அதுவுங் குற்றமேயாகும். இனி இக் குற்றமெல்லாம் அணுகாமல் இணங்கப்பொருந்துமிடந் தான் யாதோ வெனிற் கூறுதும். எடுத்துச் சொல்லப்படுகின்ற முதன்மைப்பொருள் முற்றும் முடிவுபெறுமற் காற்பங்கோ அல்லது அரைப்பங்கோ சிறிது கருக்கொண்டு ஓரிடத்திற் கூடிநின்று, கற்பார்க்கு 'இனி

இஃது எங்ஙனம் முடியும்! எங்ஙனம் முடியும்!' என்று முடிவு அறியும் விருப்பத்தினை எழுப்புவித்து, அவர் அதனை முழுதுங்கற்றுத் துறைபோகும் வண்ணம் அப் பொருள் இடையறுந்து நிற்கும் இடமே பிறபொருளை இணைப்பதற்கு இசைவான இடுக்கு வெளியாம் என்க. இவ்வாறு இப்பாட்டின்கண் முல்லைப்பொருள் இடையறுந்து நிற்கும் இடுக்குவெளி யாதோவெனிற்கூறுதும்; தலைமகன் கூறிய கார்காலம் வருதலை உணர்ந்து ஆற்றாமல் அழுது வருந்தும் நங்கைக்கு நற்சொற் கேட்டுவந்த பெருமுது பெண்டிர், "நாங்களும்படைத் தலைவருங்கேட்ட நற்சொல்லால் நின் காதலன் தான் எடுத்துப்போன போர்வினையை விரைவில் முடித்துத் திரும்பி உன்னுடன் வந்து சேர்வன்; அவன் வரும் வரையில் நீ ஆற்றிக்கொண்டு இருத்தல் வேண்டும்." என்று பலகாலுஞ் சொல்லி வற்புறுக்கவும் வற்புறுக்கவும், அவள் அவர் சொற்களைக் கேளாமல் மைதீட்டிய பூப்போன்ற கண்ணினின்றும் நீர் முத்துப்போல் துளித்துளியாய்விழக் கலுழ்ந்துவருந்தினள் என உ௩-வது வரியில் முல்லைப்பொருள் முற்றும் முடிவு பெறாமல் இடையறுந்து நிற்பது காண்க. இப்பாட்டினைக்கற்போர் இவ்வளவில் தாங்கற்பதை நிறுத்தி விடாமல், இங்ஙனம்வருந்திய அப்பெண்மணி பின் எவ்வாறு ஆயினள் எனப் பின்னும் அறிவதற்கு மிக விழைகுவர்; இங்ஙனம் அவர் முடிவறியும் விழைவால் மேலுங் கற்பதற்கு மனவெழுச்சி மிகுந்து நிற்கும் பொழுது பிறபொருள் இடையே இணைத்துச் சொல்லப்படுமாயினும் அதனால் தாம் சிறிதும் இளைப்படையாமல், அவ் விடைப்பட்ட பொருளையுங் கற்று மேற்சென்று

பொருள்முடிவு காண்பரென்பது தெற்றென விளங்கும். ஆகவே, இங்ஙனம் முல்லைப்பொருள் இடையறுந்து நிற்கும் இடங்கண்டு அங்கே முல்லைப்பொருளை மறித்து அதனோடு இயைபுடைய வஞ்சிப்பொருளை இடையே கொணர்ந்து நுழைவித்துப், பின் மறிக்கப்பட்ட முல்லைப்பொருளை அ௦-வது வரியிலே "இன்துயில் வதியுநன் காணாள் துயர்உழந்து" என்பதுடன் கொண்டுபோய் இணைக்கக்கொளுத்தி ஆசிரியர் இச்செய்யுளைத் திறம்படநடாத்தும் நுட்பவினையின் அருமைப்பாட்டை உய்த்துணர்ந்து மகிழ்ந்து கொள்க.

இன்னும் இவ்வகப்பொருள் முல்லையொழுக்கத்தினை இவ்வாறு நடாத்திக்கொண்டு சென்று, அஅ-வது வரியில் "இன்பல் இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோள்" என்பதுடன் முடிக்குமிடத்தும் வினைவயிற் பிரிந்த தலைமகன் மீண்டுவந்தமை சொல்லவேண்டுதலின், அங்ஙனஞ்சொல்லப்படும் பொருளையுங் கற்போர் உற்றுநோக்கும் பொருட்டு, 'இவ்வாறு கிடந்தோளுடைய அழகிய செவி நிறைய ஆரவாரித்தன' என்று மேல் ஒட்டப்படுஞ் சொற்றொடரின் பயனிலையான 'ஆரவாரித்தன' என்பதை, முடிக்கப்படும் அகப்பொருளின் இறுதி மொழியான 'கிடந்தோள்' என்பதுடன் சேர்த்தி, அதன் எழுவாயான 'வினை விளங்கு நெடுந்தேர் பூண்டமாவே' என்பதைக் கடையிலே நிறுத்தி, அவ்விரண்டற்கும் இடையில் அவன் மீண்டு வந்தமை விளங்கக்கூறி அமைத்தார். முடிக்கின்ற இடத்திற் 'கிடந்தோள் செவிநிறைய ஆலின' என்று உரைப்பின், எவைஆலின? என்னும்ஆராய்ச்சிதோன்றி மேல்வரும் பொருள் அறிய வேட்கைமிகும் ஆதலால்,

இவ்வாறு பயனிலையை முன்னும் எழுவாயைப் பின்னுமாக வைத்துப் பிறழக்கூறினார் என்க. இங்ஙனம் பிறழக் கூறுதல் பொருள்வலிவு தோன்றுதற்பொருட்டுங், கற்போர்க்கு மேன்மேலும் விழைவுள்ளந் தோற்றுவித்தற்பொருட்டுமாம் என்பது ஆங்கிலமொழியிற் பெயின் * என்பவர் எழுதிய அரியதோர் அணியிலக்கண நூலினுங் கண்டுகொள்க. இந்நுணுக்கமெல்லாம் அறிந்து செய்யுளியற்றிய நப்பூதனார் பேரறிவும் பேராற்றலும் பெரிதும் வியக்கற்பாலனவாம் என்க.

முல்லைப்பாட்டில் நீளச்சென்று பொருந்தும் சொற்றொடர் முடிபு: மாட்டு.

இனி மேற்கூறியவாறு முல்லைப்பொருள் ஒழுக்கம் உ௩-வது வரியிலே இடையறுந்து நிற்ப, நடுவே வஞ்சிப்பொருள் புகுத்தப்பட்டுத் திரும்பவும் அ௦-வது வரியிலே தன்பொருள் பொருந்தி, அஅ-வது வரியில் அதுமுற்றுப்பெறுந் தறுவாயிற் பின்னும் முடிவுறாதது போல் நின்று, இடையே வேறுபொருள் தழுவி ௱௩-வது வரியிலே பொருள்முதிர்ச்சிபெற்று முடிந்தது உற்றுணரற் பாலதாம் என்க. இங்ஙனம் ஒரு பாட்டின் முதன்மைப்பொருள் இடையிடையே அறுந்து அகன்றுபோய்ப் பொருந்தி முடிதல் இம்முல்லைப்பாட்டிற்கும் இதனொடுசேர்ந்த மற்றை ஒன்பதுபாட்டுக்களுக்கும் பொதுவியற்கையாகும். இவ்வாறு அகன்று

* Alexander Bain's Rhetoric.

கிடக்கும்பொருளை அணுகப்பொருத்திக் காட்டுதலை யே ஆசிரியர் தொல்காப்பியனார் மாட்டு என்பர்.

"அகன்றுபொருள் கிடப்பினும் அணுகிய நிலையி னும், இயன்றுபொருள் முடியத் தந்தனர் உணர்த்தல் மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்" என்பது சூத்திரம்.

பெருங் காப்பியங்களும் இத்தகைய பெரும் பாட்டுக்களும் இயற்றுகின்ற பெரும்புலவர் இவ்வாறு அகன்று பொருள் முடியவைத்தல் உயர்ச்சியடைந்த எல்லாப் மொழிகளினுங் காணப்படும். ஆங்கிலமொழி யில் நல்லிசைப்புலவரான மிலிட்டன் என்பவரும் இவ்வாறே தம்முடைய செய்யுட்களில் அகன்று பொருள் முடியவைத்தலும், மெக்காலே என்பவர் அதனைச் சிறந்தெடுத்துப் பாராட்டுதலுங் கண்டு கொள்க.

முல்லைப்பாட்டின்மேல் நச்சினார்க்கினியருரை.

இனி இதுவே 'மாட்டு' என்னுஞ்செய்யுளுறுப் பின் பயனுமென்பது நுண்ணறிவுடையார்க்கெல்லாம் இனிது விளங்கிக்கிடப்பவும், இதன் கருத்துப்பொருள் இதுவாதல் அறியமாட்டாத நச்சினார்க்கினியர், செய்யு ளில் இடையற்று ஒழுகும் பொருள் ஒழுக்கம் அறிந்து உரை எழுதாமல், ஓர் அடியில் ஒரு சொல்லையும் தொலைவிற் கிடக்கும் வேறோர் அடியில் வேறொரு சொல்லையுந் தமக்குத்தோன்றியவாறெல்லாம் எடுத்து

இணைத்துத் தாமோர் உரை உரைக்கின்றார். நச்சினார்க்கினியர்க்குமுன்னேயிருந்த நக்கீரர், இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், பரிமேலழகியார், அடியார்க்கு நல்லார் முதலான பண்டை உரையாசிரியன்மாராதல், பின்னே யிருந்த சிவஞான யோகிகள் முதலியோராதல் இவ்வாறு செய்யுட்களைக் கண்டவாறெல்லாம் அலைத்து உரைஎழுதக் கண்டிலம். மேலும், நச்சினார்க்கினியர் இங்ஙனஞ் செய்யுட்களை அலைத்து நலிந்து பொருள் சொல்லு முறையை ஆசிரியர் சிவஞான யோகிகள் தாம் இயற்றிய தொல்காப்பியச் சூத்திரவிருத்தியில் ஆங்காங்கு மறுத்தருளியவாறுங் காண்க. அகன்று கிடக்குஞ் செய்யுட்பொருளை அணுகவைத்துப் பொருத்திச் சொல்வதே தொல்காப்பியனார் கூறிய 'மாட்டு' என்னும் உறுப்பாவதன்றி, செய்யுள் ஒருபக்கமும் உரை ஒருபக்கமுமாக வைத்து உரைப்பது அன்றாம் என்பது கடைப்பிடிக்க. அன்றன்று, நச்சினார்க்கினியர் உரைக்கும் உரைப்பொருள் சிறந்ததாகலின், அவர் அவ்வாறு செய்யுட்களை அலைத்துப் பொருள்கூறுதல் குற்றமாகாதெனின்; நன்று சொன்னாய், அவர் எவ்வளவுதான் சிறந்த உரை உரைப்பினும் அது செய்யுட்பொருளைக் கௌவிக்கொண்டு செல்லாமல் வேறுபடுமாயின் அது கொள்ளற்பாலதன்று என மறுக்க. செய்யுளுக்கு இசைய உரையெழுதல் வேண்டுமேயன்றி, உரைக்கு ஏற்பச் செய்யுளை அலைத்து மாற்றல்வேண்டுமென்றல் "முடிக்குத்தக்க தலை செய்துகொள்வேம்" என்பார் சொற்போல நகையாடுதற்கே ஏதுவாமென்றொழிக. அற்றன்று, செய்யுளியற்றியபுலவரே ஓர் ஒழுங்குமின்றி அவ்வாறு சொற்

களையும் பொருள்களையும் சிதறவைத்துப்பாடினராக லின் அக்கருத்தறிந்து நச்சினார்க்கினியர் அங்ஙனம் பொருளுரைத்துக்கொண்டார் என்றுமோவெனின்; அறியாது கடாயினாய், உலகவியற்கையும் மக்களியற்கையும் அறிந்து வரிசை வரிசையாக அரும்பொருள் விளங்கித்தோன்றப் பாடும் நல்லிசைப்புலவர் அவ்வாறு ஒழுங்குமின்றிப்பாடினரென்றல் உலகில் எங்குங் காணப்படாமையானும், அது நல்லிசைப்புலமை ஆகாமையானும் அங்ஙனஞ் சொல்லுதல் பெரியதோர் இழுக்காய் முடியும் என்றுணர்க. அற்றாயின், மிக்க செந்தமிழ்நூற் புலமையும் நுணுகிய அறிவுமுடைய நச்சினார்க்கினியர் அவ்வாறு இணங்காவுரை எழுதியது தான் என்னையோவெனின்; வடமொழியில் இங்ஙனமே செய்யுட்களை அலைத்துப் பாட்டு ஒருபக்கமும் உரை ஒருபக்கமுமாக இணங்காவுரை எழுதியசங்கராசிரியர் காலத்திற்குப் பின்னேயிருந்த நச்சினார்க்கினியர் வடமொழியில அவர் எழுதிய உரைகளைப் பன்முறை பார்த்து அவைபோல் தமிழிலும் உரைவகுக்கப் புகுந்து தமிழ்ச்செய்யுள்வழக்கின் வரம்பழித்துவிட்டாரென்றுணர்க. வேதாந்த சூத்திரத்திற்குச் சங்கராசிரியர் இயற்றிய பாடியவுரை அச்சூத்திரத்திற்குச் சிறிதும் ஏலாவுரை என்பது, ஆசிரியர் இராமாநுசர் பாடிய உரையானும் தீபாபண்டிதர் திருப்பிய ஆங்கிலமொழி பெயர்ப்பானும் உணர்க. இனி ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரை பொருந்துமிடங்களினெல்லாம் ஏற்றுக் கோடற்பாலதேயாம் என்பதும், அரிய பெரிய பழந் தமிழ்நூல்கள் விளங்குமாறு விளக்கவுரை விரித்த நச்சினார்க்கினியர் இவ்வாறு ஓரோவிடங்களில் நவிங்

துரை எழுதுவதுபற்றி இகழப்படுவாரல்லரென்பதும் ஈண்டுவற்புறுத்துகின்றும். இனி இம்முல்லைப்பாட்டினுரை நச்சினார்க்கினியராற் பெரிதும் செய்யுளை அலைத்து வரையப்பட்டதாகலின், அவருரையின் உதவிகொண்டே இப்பாட்டுக்குச் செவ்வையான வேறொரு புத்துரை பின்னர் எழுதுகின்றும்; அங்கு அதனைக் கண்டு கொள்க.

பாட்டின் வரலாறு.

இனித் திருமுருகாற்றுப்படை முதலான பாட்டுக்கள் ஒன்பதும் உள்ளோன் ஒரு தலைவனையே குறிப்பிட்டுப் பாடவந்தமையால், இம்முல்லைப்பாட்டிற்குத் தலைவன்பெயர் எழுதப்படவில்லையாயினும், இதற்கும் உள்ளோன் ஒரு தலைவன் உண்டென்பது துணியப்படும். இம்முல்லைப்பாட்டை அடுத்திருக்கின்ற மதுரைக்காஞ்சியும் நெடுநல்வாடையும் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு விளங்கலால், அவற்றை அடுத்திருக்கின்ற இதுவும் அவனையே பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு செய்யப்பட்டிருக்கலாமென்பது கருதப்படும். பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானம் என்னும் இடத்தில் தன்னைப்பகைத்து எதிர்ந்த சேரன் சோழன் திதியன் எழினி எருமையூரன் இருங்கோவேண்மான் பொருநன்என்னும் அரசர் எழுவரோடும் போர்புரிதற்பொருட்டுச் சென்ற

போது, அவன் மனைவி கொழுநன் பிரிவின் துயரத்தை ஆற்றிக்கொண்டிருந்த அருமையும், அவன் அவ்வரசரை யெல்லாம் வென்று தான்சொன்னவண்ணங் கார்காலத் துவக்கத்தில் மீண்டுவந்தமையுங்கண்டு நப்பூதனார் இதனைப்பாடினாரென்பது புலப்படும். இவ்வாறே நெடுநல்வாடையினும் ஆசிரியர்நக்கீரனார், நெடுஞ்செழியன் மனைவி அவனைப் பிரிந்து வருந்திய துன்பத்தினை விரித்துச்,

"செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி
இன்னே வருகுவர் இன்துணையோரென
முகத்தவைமொழியவும்ஒல்லாள்மிகக்கலுழ்ந்து
உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா
மாயிதழ் ஏந்திய மலிந்து வீழ்அரிப்பனி
செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சிலதெறியாப்
புலம்பொடு வதியும் நலங்கிளர் அரிவை"

என்று கூறுதலோடு நப்பூதனார் கூறுவதையும் ஒப்பிட்டு உணர்க.

வாடைக்காலத்தும் வேனிற்காலத்தும் அரசர்கள் போர்மேற்சென்று பாசறைக்கண் இருப்பது பண்டைக்காலத் தமிழ்நாட்டு வழக்கு என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலின், வேனிற்காலத்துப் போர்மேற்சென்றதலைவன் திரும்பி மனையாள்பால் வந்துசேர்தற்குரிய கார்காலத் துவக்கத்திலே பிரிவாற்றியிருந்த தலைவியின் முல்லையொழுக்கத்தைப் பொருளாகவைத்து நப்பூதனார் இம்முல்லைப்பாட்டியற்றினார்.

திரும்பவுங் கூதிர்காலத்துவக்கத்திலே நெடுஞ்செழியன் தன் மனையாளைப்பிரிந்து போர்மேற்செல்லத் தலைமகள் பிரிவாற்றாது வருந்திய பாலை யென்னும் அகப்பொருள் ஒழுக்கத்தைப் பொருளாகவைத்து நக்கீரனார் நெடுநல்வாடை இயற்றின ரென்று பகுத்தறிந்து கொள்க. வேனிற்காலத்திற் பெரும்போர் துவங்கி நடைபெறுகையில் வேனில்கழிந்து கார்காலந் தோன்றியதாக இருபடைமக்களும் அக்காலங் கழியுந்துணையும் போர்விட்டிருந்து, மறித்துங் கூதிர்காலத்தொடக்கத்திலே போர்துவங்குவராகலின், அக்கார்காலத்திலே அரசர் தம்மனைக்கு மீண்டுவந்துதங்கிப் பின்னருங் கூதிர்காலத்திலே போரைநச்சிப் போவது இயற்கையாம் என்க.

இனி நெடுஞ்செழியன் தமிழில் வல்லவன், சிறந்த கொடையாளி, அஞ்சாத போராண்மை வாய்ந்தவன் என்பது புறநானூற்றில் அவன் பாடிய "நகுதக்கனரே" என்னுஞ்செய்யுளால் இனிதுவிளங்கலானும், தமிழ்ப்புலவர்பலரைச் சேர்த்துவைத்துத் தமிழை வளம்படுத்துவந்தான் என்பது மதுரைக்காஞ்சி முதலியவற்றால் தெரிதலானும் இவனையும் இவன் கற்புடை மனைவியையுஞ்சிறப்பித்துப் புலவர் பலர் பாடினரென்பது துணிபு. அற்றேல், இதில் அவ்வரசன் பெயர் சொல்லப்படாமை என்னையெனின்; அகப்பொருளொழுக்கம் பயின்றுவருகின்ற இதன்கண் அவ்வாறு ஒருதலைமகன் பெயர் சுட்டிச்சொல்லப்படமாட்டாதென முன்னரே காட்டினும்; இங்ஙனமே நெடுநல்வாடையுள்ளுந் தலைவன்பெயர் குறித்துச்சொல்லப் படாமை காண்க.

இனி இச்செய்யுள் இல்லோன்றலைவனாக வைத்துப் புணர்ந்துகட்டி இயற்றப்பட்டதென உரைகூறினருமுளர். பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் முதலிய அரும்பெருந்தமிழ் நூல்கள் எழுதப்பட்ட காலத்தில் இல்லது புனைந்து கூறுங் கட்டுவழக்குத் தமிழில் இல்லை என்றற்கு அக்காலத்து இயற்றப்பட்ட நூல்களே சான்றுமாகலின் அவர் கூறியது பொருந்தாவுரை என்க. அற்றாயின், இறையனார்களவியலுரையில் இல்லோன் தலைவனாகவரும் புனைந்துரைவழக்குச் சொல்லப்பட்டதென்னையெனின்; அங்ஙனம் அருகிவருவதுஞ் செய்யுள் வழக்கேயாம் பொய்யென்று களையப்படாது என்று அறிவுறுத்தற்பொருட்டுச் சொல்லப்பட்டதேயல்லாமல், அக்காலத்து அங்ஙனம் நூல்செய்தல் உண்டென்பதூஉம் அதனாற் பெறப்பட்டதில்லையென்றொழிக.

செய்யுட்பொருள் நிகழும் இடம்,

௮௯-வது வரியிற் காண்க.

இனிப் பாட்டுடைத்தலைவி யிருக்கும் இடம் பல்லான் மலிந்த முல்லைநிலக் காட்டில் மிகவும் அழகிதாகக் கட்டப்பட்ட எழுநிலைமாடமாகும். பரியமரங்கள் நெருங்க அடர்ந்து தண்ணிழல் பயப்பவும், காட்டுக் கோழிகள் பேட்டுடனுங்குஞ்சுடனும் முல்லைக் கொடிகள் பிணைந்து படர்ந்த பந்தரின் கீழ்ச் செல்லவும், புள்ளினங்கள் செய்யும் ஓசையன்றி வேற்றொலி விரவாமல் தனித்து மிக்க எழிலுடன் விளங்கும் முல்லைக்

காடு காதல் இன்பம் நுகருந் தலைமக்கட்குக் கழிபெருஞ் சுவைமிகுக்குஞ் சிறப்புடைமையால் பழைய நாளிற் பெருஞ் செல்வவளம் வாய்த்தோர் அங்கு மாளிகை அமைத்து அதில் வாழ்தல் வழக்கம்.

உச-முதல் எகூ-வது வரிகாறுங் காண்க.

இனித்தலைமகளைப்பிரிந்து வினைமுடிக்கப்போன தலைமகன் இருக்கும் இடம்: பகைவர் நகரத்தைச் சூழ்ந்த அரணயிருக்கும் முல்லைக்காட்டிற் பாடிவீடாம் என்க. முற்கால இயற்கைப்படி அரசர் தம்நகரத்திற்குக் காவலாக மதில், அகழி, பாலைவெளிமுதலியவற்றை அரணாக அமைத்ததேயன்றி அவற்றிற்கும் புறத்தே அடர்ந்த காடுகளையும் காவலரணாக வைப்பர். இவ்வாறு சமைக்கப்பட்ட பகைவரது காட்டிற்சென்று பாட்டுடைத் தலைவன் பாசறையிலிருக்கும் இருப்புச் சொல்லப்படுகின்றது.

செய்யுட் பொருள் நிகழுங்காலம்,

ரு-கூ வரிகளைக் காண்க.

இனித் தலைமகள் முல்லைநிலத்து மாளிகையில் இருக்குங்காலம் கார்காலத்தில் மாலைப்பொழுதாகும். கார்காலத்து மழைபொழிந்த முல்லைக்கானம் மரங்கொடி செடிகளில் இலைகள் நீரைத் துளிப்பப், பறவைகள் ஆணும் பெண்ணுமாய் இன்பம் நுகர்ந்து கூடுகளில் ஒடுங்கிக் கிடப்ப, வானத்திற் கரிய முகில்கள் பரவி எங்கும் மப்பும்மந்தாரமுமாய் இருப்ப, அதனோடு

மங்கல் மாலையுஞ் சேர்ந்து மழைகாலத்தின் இயல்பை மிகுதிப்படுத்தித் தோன்றும்போது தனியளாய் இருக்குந் தலைவிக்கு ஆற்றாமை மிகுதலும், கணவன் சொற்றவறாமல் அவள் அதனைப் பொறுத்து இருத்தலும், அங்ஙனம் இருப்போளுக்குக் கழிபேர் உவகை தோன்றத்தலைவன் மீண்டுவருதலும் போல்வன எல்லாம் இசைவாய் நடைபெறுதற்கு இக்காலம் பெரிதும் ஏற்புடைத்தாதல் காண்க.

ருo-வது வரியைக் காண்க.

இனித் தலைமகன் பாசறைவீட்டில் இருக்குங் காலம் வேனிற்காலத்து இறுதி நாளில் இடையாமம் என்க. வேனிற்காலத்துப் பகைவயிற் பிரிந்த தலைமகன், வெஞ்சுடர் வெப்பந் தீர நால்வகைப்படையும் நீரும் நிழலும் பெறும் பொருட்டுக் கான் யாறு ஓடும் (உச-வது வரி) காட்டில் தங்கிப் பகைவரோடு போர் இயற்றுங் காலமும் அதுவேயாம் என்க. இப்பாட்டில் அவன் பெரும்பான்மையும் போர்வினை முடித்து அவ்வேனிற் காலத்தின் கடைநாள் இரவில் பாசறையில் இருக்கும் இருப்பும், மற்றை நாள் தொடங்குங் கார் காலத்தில் அவ்வினையினை முற்றும் முடித்து இரவு கழிய வருநாள் மாலைப் பொழுதில் மீண்டுந்தன் தலைவிபாற் சென்றமையுஞ் சொல்லப்படுகின்றன. இப்பொருள் அறியமாட்டாத நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் தலைவன் பாசறையிருப்புக்குங் கார்காலம் உரித்தென்று உரை கூறினர்; ஆசிரியர் தொல்காப்பியனார் “கூதிர்வேனில் என்றிருபாசறைக், காதலின் ஒன்றிக் கண்ணிய மரபினும்” என்

பதனாற் குளிர்காலத்துப் பாசறையும் வேனிற்காலத்துப் பாசறையும் என இரண்டே உடம்படுதலானும், தலைமகட்குக் கார்காலங் குறித்துவந்த தலைமகன் அது கண்டவளவானே தான் எடுத்துக்கொண்ட வினை முடித்து மீளுவான் என்பது அவர்க்கும் உடம்பாடாதலானும், இச்செய்யுள் செய்கின்ற நப்பூதனார்க்கும் அதுவே கருத்தாகலானும், போர்வினைக்கு மிகவும் இடையூறு பயப்பதான கார்காலத்தில் இருபடைமக்களும் போர்விட்டிருத்தலே உலகவியற்கையாதலானும் அவர் பாசறை யிருப்பிற்குக் கார்காலமும் உரித்தென்றது பொருந்தாதென மறுக்க. எடுத்தவினை முடியாதாயின் அதனை இடைப்பட்ட கார்காலத்தில் விட்டிருந்து, திரும்பவுங் கூதிர்காலத்தே அதனைத் துவங்கி நிகழ்த்துவர் என்றறிக.

நப்பூதனார்

இயற்றிய

முல்லைப்பாட்டு

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகிவல னேர்பு 1-6
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை (சிறுபொழுது) //
யருங்கடி மூதூர் மருங்கிற் போகி 7-23
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
யரும்பவி ழலரி தூஉய்க்கை தொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்,
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி
னுறுதுய ரலமர னோக்கி யாய்மக
ணடுங்குசுவ லசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
வின்னே வருகுவர் தாய ரென்போ
ணன்னர் நன்மொழி கேட்டன மதனா
னல்ல நல்லோர் வாய்ப்புட் டெவ்வர்

முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருத றலைவர் வாய்வது நீநின்
பருவர லெவ்வங் களைமா யோயெனக்
காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்பக்
கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்
சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப் புழை யருப்ப மாட்டிக் காட்ட
விடுமுட் புரிசை யேமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி
யுவலைக் கூரை யொழுகிய தெருவிற்
கவலை முற்றங் காவ னின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
யோங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்விளை யின்குள குண்ணா துநுதறுடைத்
தயினுனைமருப்பிற் றங்கையிடைக்கொண்டெனக்
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா விளைஞர் கவளக் கைப்பக்
கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப நற்போ
ரோடா வல்விற் றூணி நாற்றிக்
கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கைப்
பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவில் லரண மரண மாக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டங் கோலி யகநேர்பு
குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்
திரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்

விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
கையமை விளக்க நந்துதொறு மாட்ட
நெடுநா வெண்மணி * நிழத்திய † நடுநா
ளதிரல் பூத்த வாடுகொடிப் படாஅர்
சிதர்வர லசைவளிக் கசைவந் தாங்குத்
துகின்முடித் துப்போர்த்த தூங்கலோங்குநடைப்
பெருமூ தாள ரேமஞ் சூழப்
பொழுதளந் தறியும் பொய்யா மாக்க
டொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி
யெறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்நின்
குறுநீர்க் கன்ன லினைத்தென் றிசைப்ப
பத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லிற்
றிருமணி விளக்கங் காட்டித் திண்ஞா
ணெழினி வாங்கிய வீரறைப் பள்ளியு
ணுடம்பி னுரைக்கு முரையா நாவிற்
படம்புகு மிலேச்சருழைய ராக
மண்டமர் நசையொடு கண்படை பெறாஅ
தெடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கண மறந்த வேழம் வேழத்துப்

* 'ஒண்மணி' என்பதும் பாடம். † 'நிழற்றிய' எனவும் பாடம் உண்டு; ஆனால் அதுபொருந்தாது; ஓசையடங்குதல் எனப்பொருள்படும் ஈண்டைக்கு 'நிழத்திய' என்பதே பொருத்தமாம். 'நிழற்றல்' ஒளிவிடுதலெனப் பொருள்படும் வேறு ஒரு சொல்லாம்.

பாம்புபதைப் பன்ன பருஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோ ருள்ளியுந் தோறுமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்
துண்ணா துயங்கு மாசிந் தித்து
மொருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிது நினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொ ணோன்விர
னகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி
யரசிருந்து பனிக்கு முரசுமுழங்கு பாசறை //
யின்றுயில் வதியுநற் காணா டுயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியு மோடுவளை திருத்தியு
மையல் கொண்டு மொய்யென வுயிர்த்து
மேவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து
பாவை விளக்கிற் பருஉச்சுட ரழல
விடஞ்சிறந் துயரிய வெழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
யின்ப விமிழிசை யோர்ப்பனள் கிடந்தோ //
ளஞ்செவி நிறைய வாலின வென்றுபிறர்
வேண்டுபுலங் கவர்ந்த வீண்டுபெருந் தானையொடு
விசயம் வெல்கொடி யுயரி வலனேர்பு
வயிரும் வளையு மார்ப்ப வயிர
செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி

வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் பிரலையொடு மடமா னுகள
வெதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
துணைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

பொருட்பாகுபாடு.

க-முதல் சு-வரிகள், கார்கால மாலைப்பொழுது

கார்காலம் இப்போதுதான் தொடங்கியதாகலின் கரிய முகில் மிகவும் நீரைப் பொழிந்தது. 'பெரும் பெயல்' என்பது கார்காலத் தொடக்கத்திற் பெய்யும் முதற் பெயல், இதனைத் 'தலைப்பெயல்' என்றுஞ் சொல்லுவர். இங்ஙனம் முதற்பெயல் பொழிந்துவிட்ட நாளின் மாலைக்காலம் முதலிற் சொல்லப்பட்டது. தலைவன் குறித்துப்போன கார்காலம் வந்தது என்பதனை அறிந்த தலைவி அவன் வருகையைநினைந்து மயங்கி இருத்தலும், அவ்வாறு இருப்போள் மயக்கந் தீர அவன் மீண்டு வருதலும் இப்பாட்டின்கட் சொல்லப்படுதலின் அவற்றிற்கு இசைந்த கார்கால மாலைப் பொழுதை முதலிற்கூறினர் என்றறிக.

எ-முதல் உச-வரிகள்.

தலைமகள்தனிமையும் அவளதுபிரிவாற்றாமையும்.

வேனிற்காலத் தொடக்கத்திலே பகைவயிற் பிரிந்ததன் காதலன் சொன்ன கார்காலம் வந்தும் அவன் வந்திராமையின் தலைமகள் பெரிதும் ஆற்றாளாகின்றாள். அதுகண்டு ஆண்டின் முதிர்ந்த பெண்டிர் அவளை ஆற்றுவிக்கும்பொருட்டுத் தம் ஊர்ப்பக்கத்தேயுள்ள மாயோன் கோயிலிற் போய் நெல்லும் மணங் கமழும் முல்லைப்பூவுந் தூவி வணங்கி நற்சொற் கேட்ப நின்றார்; நிற்ப, அங்கே அருகாமையி லிருந்த மாட்டுக் கொட்டிலில் நின்ற ஓர் இடைப்பெண், புல்மேயப் போன தாய் இன்னும் வாராமையாற் சுழன்றுசுழன்று

வருந்துகின்ற ஆன்கன்றுகளைப் பார்த்து 'நீங்கள் வருந்தாதீர்கள், நுங்கள் தாய்மார் கோவலரால் ஓட்டப்பட்டு இப்பொழுதே வந்துவிடுவர்' என்று சொல்லிய நற்சொல்லை அம்முது பெண்டிர் கேட்டு வந்து, "அன்னாய்! யாங்கள் கேட்டுவந்த இந் நற்சொல்லானும், நின்காதலன் போகுந்தறுவாயில் அவன் படைமறவர் பாக்கத்திலே கேட்டுவந்த நற்சொல்லானும் நின் தலைவன் தான் எடுத்துச்சென்ற போர்வினையைக் கடிக முடித்து இப்போதே வந்துவிடுவான் என்று துணிகின்றோம்; ஆதலால் மாயோய்! நீ வருந்தாதே" என்று அம்முது பெண்டிர் பலகாலும் வற்புறுத்தி ஆற்றுவிக்கவும் ஆற்றாமல் தன் கண்களில் நீர் முத்துப் போல் இடையறாந்து துளிப்பத் தலைமகள் மிகவும் வருந்துகின்றாள்.

உச-முதல் எஅ-வரிவரையில், பாட்டின் பொருட்காட்சி தலைமகன்பாசறையிலிருக்கும்இருப்புக்குமாறுகின்றது;

உச-முதல் உஅ-வரையில் பாசறையின் அமைப்பு.

இனி வேனிற்காலத் துவக்கத்திற் பகைமேற் சென்ற தலைவன், பகைவர் தம் நகரத்திற்குக் காவலாக அமைத்த அகன்ற பெரிய காட்டிலுள்ள பிடவஞ் செடிகளையும் பசிய தூறுகளையும் வெட்டி, வேட்டுவர் அரண்களையும் அழித்து, முட்களை மதிலாக வளைத்துக் கடலைப்போல் அகலமான பாடி வீடு அமைத்தமை சொல்லப்படுகின்றது.

உகூ-முதல் எகூ-வரையில், பாடி வீட்டினுள் அமைதிகளும், தலைமகனுடைய உடம்புநிலை உள்ளநிலைகளும்

மிக நுணுக்கமாக எடுத்துச் சொல்லப்படுகின்றன.

இனி இங்ஙனம் அமைக்கப்பட்ட பாடி வீட்டி னுள்ளே தழைகள் மேல்வேய்ந்த கூரைகள் ஒழுங்காக இருக்குந் தெருவில் நாற்சந்தி கூடும் முற்றத்திலே காவலாக நின்ற யானை கரும்போடு நெருங்கக் கட்டிய நெற்கதிரினையும் அதிமதுரத் தழையினையும் உண்ணு மல் அவற்றினால் நெற்றியைத் துடைத்துக்கொண்டும், கொம்பிலே தொங்கவிட்ட தும்பிக்கையில் அவற்றைக் கொண்டும் நிற்றலால் அவ் யானைப்பாகர் அங்குசத்தாற் குத்தியும் வடசொற்களால் அதட்டியும் கவளம் ஊட்டு கின்றார்கள்.

இனி, அப்பாடி வீட்டினுட் பல்வகைப் படைக ளும் இருப்பதற்கு அமைக்கப்பட்ட அரண்களையும் அவ்வரண்களுக்கு இடையில் தலைமகனுக்கு ஒரு தனி வீடு சமைக்கப் பட்டமையுங் கூறுகின்றார். வலியவில்லை நிலத்திற் சுற்றிலும் ஊன்றி, அம்புப் புட்டிலை அதில் தொங்கவிட்டுப், பின் அவ்விற்களையெல்லாங் கயிற்றால் தொடுத்துக்கட்டி. வளைத்துச்செய்த இருக்கையில், நீண்ட குந்தங்கோல்களை ஊன்றி அவற்றின்பாற் படல் களை நிரைத்துச் செய்த வில்லரணங்களே சுற்றுக்காவ லாக அவற்றின்கண் உள்ள பலவேறு படைகளின் நடு விலே, தலைவனுக்கென்று பல நிறமுடைய மதில் திரையை வளைத்துச்செய்த வீட்டின் அமைப்புக் கூறி னார். அதன்பின் அங்ஙனம் வகுக்கப்பட்ட தலைமக னிருக்கையில் அழகிய மங்கைப்பருவத் திளைய பெண் கள் கச்சிலே கட்டப்பட்ட திண்ணியவாளினை உடைய ராய் நெய்யைக் கக்குகின்ற திரிக்குழாயினாலே பாவை

6569

யின் கையில் அமைந்த விளக்கின் சுடர் குறையுந்தோறுந் திரியைக் கொளுத்தி எரிக்கின்றார்கள்.; குதிரை முதலியன உறங்குதலின் அவற்றின் கழுத்திலே கட்டப் பட்ட மணியின் ஓசையும் அடங்கிப்போன நடுயாமத்தில் மெய்காப்பாளர் தூக்க மயக்கத்தால் அசைந்து காவலாகச் சுற்றித் திரிகின்றார்கள்; இங்ஙனம் நடுயாமம் ஆதலும், பொழுது அளந்தறிவோர் தலைவன் எதிரே வந்துநின்று வணங்கி வாழ்த்திக் கடாரத்து நீரிலேயிட்ட நாழிகை வட்டிலாற் பொழுது இவ்வளவாயிற்றென்று அறிவிக்கின்றார்கள்; அதனைக் கேட்டவுடன் அரசன் எழுந்து, யவனர்களாலே புலிச்சங்கிலி விட்டு அழகிதாக அமைக்கப்பட்ட இல்லின் உள்ளே விளக்கங்காட்டப்படச் சென்று, வலிய கயிற்றால் இடையிலே திரையை மறித்து வளையக்கட்டி முன் ஒன்றும் பின் ஒன்றுமாய் இரண்டாக வகுக்கப்பட்ட பள்ளி அறையிற்போய்ப் படுக்கையில் அமர்ந்திருக்கின்றான்; அங்ஙனந் தலைவன் பள்ளிகொள்ளும் உள்ளறையின் முன்திரைக்குப் புறத்தே யுள்ள வெளியறையிலே சட்டையிட்ட மிலேச்சரில் ஊமைகள் தலைவன் பள்ளியறையைச் சூழ்ந்து இருக்கின்றார்கள்; அரசனோ நாளைக்குச் செய்யவேண்டும் போரினை மிக விரும்பி அதனாற் படுக்கையில் உறக்கங் கொள்ளானாய் முன் நாட்களில் நடந்தபோரிற் புண்பட்ட யானைகளை நினைந்தும், யானையை வெட்டியும் தமக்கு வெற்றியினை யுண்டாக்கியும் இறந்துபோன போர்மறவரை நினைந்தும், அம்பு அழுந்திய வருத்தத்தால் தீனிகொள்ளாமல் காதைச் சாய்த்துக்கொண்டு கலங்குங் குதிரைகளை நினைந்தும் மிகுந்த இரக்கம் உடையோனாய் ஒருகையை அமளி

மேல் வைத்து ஒரு கையினால் முடியைத்தாங்கி இவ்வாறு நீளநினைந்து இருக்கின்றான்.

எஉ-முதல் அ௦-வரையில், தலைவனதுவெற்றியும், அவன் பாசறையில் இனிது உறங்குதலும்.

இனி இவ்வாறு முன்னாளிரவு உறக்கமின்றிக் கவலையோடிருந்த தலைமகன் பின்னாளிற் பகைவரையெல்லாம் வெற்றி கண்டு, தன் வலிய விரலாலே நல்ல வாகைமாலையினைச் சூடிக்கொண்டு, 'நாளைமாலையில் தலைவியைக் காண்போம்' என்னும் மகிழ்ச்சியினால் ஒருகவலையு மின்றிப் பகையரசர் கேட்டு நடுங்குதற்குக் கருவியான வெற்றிமுரசு முழங்கும் தன் பாசறை வீட்டில் இனிது துயில்கொண் டிருக்கின்றான்.

அ௦-முதல் அஅ-வரையில், பாட்டின் பொருட்காட்சி துயரமும் தேறுதலுங் கலந்த நிலையிற் படுத்துக் கிடக்கும் தலைமகளின் முல்லைக்காட்டு மாளிகைக்குத் திரும்பவும் மாறுகின்றது.

இனி இங்ஙனம் பாசறையில் இனிய உறக்கத்திலே கிடக்கின்ற தலைமகனைத் தன் பக்கத்திலே காணாத தலைமகள் அவனிடத்தே தன் நெஞ்சினைப் போக்கி மிக வருந்தும் வருத்தத்தால், முதுபெண்டிர் நற்சொற்கேட்டு வந்து ஆற்றுவிக்குஞ் சொற்களையுங் கேளாமல் வருந்துகின்றவள், "இங்ஙனம் ஆற்றாமே வருந்தினால் அது நம்பெருமான் கற்பித்த சொல்லைத் தவறியதாய் முடியுங்கொலோ" என்று நெடுக நினைந்து பார்த்துத் தன்னைத் தேற்றிக்கொண்டும், கழன்று விழு

கின்ற வளையைக் கழலாமற் செறித்தும், ஆற்றுமை புணர்வும் அதனைத் தேற்றுகின்ற உணர்வும் ஒன்று சேர்தலால் அறிவுமயங்கியும், அவ்வறிவு மயக்கத்தால் பெருமூச்செறிந்து நடுங்கியும், அந்நடுக்கத்தால் செறித்த அணிகலன்கள் சிறிது கழலப் பெற்றும் எழுடுக்கு மாளிகையில் பாவை விளக்குஎரியக் கூடல் வாயில் நீர் சொரியும் ஓசை காதில்விழ இம்மாலைக் காலத்திற் படுக்கையிற் கிடக்கின்றாள்.

அகூ-முதல் கடைசி வரையில், தலைவன் மீண்டு வருதலும், நாட்டின் மழைகாலச்சிறப்பும்.

இனித் தலைமகன் தன் மாற்றாரையெல்லாம் வென்று பகைப் புலத்தைக் கவர்ந்துகொண்ட பெரும் படையோடு வெற்றிக்கொடியை உயரத்தூக்கி ஊது கொம்பும் சங்கும் முழங்கவும், காசாஞ்செடிகள் நீல மலர்களைப் பூக்கவும், கொன்றைமரங்கள் பொன்போல் மலரவும், காந்தள் அழகிய கைபோல் விரியவும், தோன்றிப்பூச் சிவப்பாக அலரவும், வரகங்கொல்லையில் இளமான்கள் தாவியோடவும், கார்காலத்து முற்றுங் காயினையுடைய வள்ளிக்காடு பின்போகவும் முல்லை நிலத்திலே மீண்டுவரும்போது அவனது தேரிற் கட்டிய குதிரை கனைக்கும் ஓசையானது ஆற்றிக்கொண்டு அங்ஙனம் கிடக்குந் தலைமகள் செவியிலே நிறைந்து ஆரவாரித்தது.

பாட்டின் பொருள் நலம் வியத்தல்.

கடலில் முகந்தநீரைப் பொழிந்துகொண்டே எழுந்து உயர்ந்த கரியமுகிலிற்கு, மாவலிவார்த்த நீர் ஒழுகுங் கையுடன் ஓங்கி வளர்ந்த கரிய திருமாலை ஒப்புமை கூறியது முல்லைப்பாவகத்திற்கு இசைந்த உவமையாகப் பொருந்தியிருக்கின்றது. நிலத்தில் ஊன்றிய வில்லிலே அம்பறுத்தூணியைத் தொங்கவிட்டிருப்பதற்குப் பார்ப்பனத் துறவி காவிக்கல்லில் தோய்த்த உடையைத் தனதுமுக்கோலிற் றொங்கவிட்டிருப்பதை உவமை கூறியது பொருத்தமாகவிருக்கின்றது. இதனால் இவ்வாசிரியர் துறவிகளிடத்துப் பழக்கமுடையார் என்பதும், துறவொழுக்கத்தில் வேட்கையுடையாரென்பதுங் குறிப்பாக அறியப்படும்.

மெய்காப்பாளர் பாடி வீட்டில் இடையாமத்திலே தூக்கமயக்கத்தோடும் அசைந்து திரிதல் பூத்த புனலிக்கொடி படர்ந்ததூறு வாடைக்காற்றில் அசைவது போல் இருக்கின்றது என்பதனாலும், காயாமலர் கறுப்பாகவுங், கொன்றைபொன்னிறமாகவும், தோன்றிசிவப்பாகவும் இருக்கும் என்பதனாலும், வரகங்கொல்லையில் மான்கள் தாவிக் குதிக்கின்றன கார்காலத்தில் வள்ளிக்கிழங்கு முற்றிவிடுகின்றன என்பதனாலும் இவர் இயற்கைப் பொருள்களைக் கண்டறிவதினும், அவற்றைத் தாங்கண்டவாறே சொல்வதினும் திறமை மிக்குடையரென்பது இனிது விளங்கும்.

இன்னும் முது பெண்டிர் நற்சொற்கேட்கும் பொருட்டு ஊர்ப்பக்கத்தே திருமால்கோயிலிற் போய் நாழி நெல்லும் முல்லையுந் தூவி வணங்குதலும், குளிர்

மிகுதியால் தோளிற்கட்டிய கையுடன் நிற்கும் ஓர் இடைப்பெண் ஆன்கன்றுகட்குத் தேறுதல் சொல்லுதலும், காட்டிலே பாடிவீடு அமைத்தலும், அப் பாடிவீட்டினுள் நாற்சந்திகூடும் முற்றத்திலே யானைப்பாகர் யானையைக் குத்திக் கவளம் ஊட்டுதலும், வில்லினால் வளைவாக அமைக்கப்பட்ட கூடாரங்களுக்கு இடையிலே அரசனுக்கென்று வண்ணத்திரையினால் வேறோர் வீடு செய்யப்பட்டிருத்தலும், அவ்வீட்டின் உள்ளே பெண்கள் பலர் கையில் விளக்கு ஏந்தி நிற்றலும், குதிரைமுதலியவற்றின் கழுத்திற் கட்டிய மணியோசை நடு இரவில் அடங்கிவிட்டதும், மெய்காப்பாளர் அரசனிருக்கையைச் சுற்றிக்காவலாகத் திரிதலும், பொழுதறிவோர் கொப்பரை நீரில் இட்ட நாழிகை வட்டிலைப் பார்த்துவந்து அரசன் எதிரிலே இடையாமம் ஆயிற்று என்றலும், யவனர்களாற் புலிச்சங்கிலி விட்டு மிக அழகிதாக வகுக்கப்பட்ட பள்ளியறையுள் அவர்கள் விளக்குக்காட்டச் சென்று அரசன் பள்ளிகொண்டிருத்தலும், அப்போது ஊமை மிலேச்சர் பள்ளியறையைச் சுற்றிக் காவலாக இருத்தலும், படுக்கைமேல் உள்ள அரசன் மறுநாட் போரை விரும்பும் உள்ளத்தோடு தூக்கம் பெறானாய், முன்னாட் போரிற் புண்பட்ட யானைகுதிரைகளையும் செஞ்சோற்றுக்கடன் கழித்து இறந்தொழிந்த அரிய போர்மறவரையும் நினைந்து வருந்தி, ஒரு கையை மெத்தையின்மேலும் மற்று ஒரு கையைத் தலையின்கீழும் வைத்துப் படுத்திருத்தலும், தலைமகள் எழுநிலைமாளிகையில் தன் கணவன் வருகையை நினைந்து பிரிவின் துன்பத்தை ஆற்றிக்கொண்டு பாவையின்கையிலுள்ள விளக்கானது

எரிய மாளிகையின் கூடல்வாயிலிலே வந்துவிழும் நீர்த் திரள் ஒலிப்ப மயில்போற் படுத்திருத்தலும், அப்போது தலைவன் தன் றேரினை விரைவாகச் செலுத்திக் கொண்டு காட்டிலே வருதலும் நாம் நேரே காண்கின்றதுபோலவும், ஓவியம் எழுதி நங்கண்ணெதிரே காட்டினாற்போலவும் மிக்க அழகுடன் சொல்லப்படுதல் காண்க.

இனி இவ்வாசிரியர் தாம் புனைந்துரைக்கும் பொருள்களின் உள்ளே நுழைந்து அவற்றை விரிவாகப்புனைந்துரைக்கின்றாரென்பதும் ஈண்டு அறியற்பாற்று; இவ்வியற்கை பத்துப்பாட்டுக்கள் இயற்றிய புலவர் எல்லாரிடத்தும் பொதுவாகக் காணப்படுவதொன்றும். ஆயினும் இவரை யொழிந்த ஏனைப்புலவரெல்லாரும் நயமமைந்தபாவக வுணர்ச்சி தளர்வடையாவண்ணம் விரித்துப் புனைந்து சொல்லுதற்கு இசைந்த நன்பொருள்களையே விரித்துரைக்கின்றார்கள்; மற்று இவரோ புனைந்துரை விரிப்பதாற் சுவையுண்டாகாத ஓரோவொன்றனையுஞ் சிறிது அகலவிரித்துக் கூறுகின்றார்; பாடிவீடு அமைக்கப்பட்டதன்மையினை இவர் இன்னுஞ் சிறிது சுருக்கிக் கூறியிருந்தால் இப்பாட்டு இன்னும் பொருட்சுவை முதிர்ந்து விளங்கும். திருமுருகாற்றுப்படை முதலானவனைச்சிலபாட்டுக்களுக்கு இம்முல்லைப்பாட்டு இவ்வாற்றால் ஒருசிறிது தாழ்ந்ததுபோலுமென அவைதம்மை ஒப்புநோக்கிக் கற்பார்க்கு ஒருகாற் றோன்றினுந் தோன்றும். என்றாலும் இப்பாட்டின்கட் கண்ட பொருட்கோவை நினைக்குந்தோறும் இன்பம் பயக்கும் விழுப்பம் வாய்ந்து மிளிர்கின்றது.

பாவும் பாட்டின் நடையும்.

இனி இச்செய்யுள் நேரிசை அகவற்பாவாற் செய்யப்பட்ட தொன்றும். இதில் ஒவ்வோர் அடியும் நான்கு சீர்களான் வகுக்கப்படும்; ஒவ்வொரு சீரும் இரண்டசைக்குக் குறையாமலும் மூன்றசைக்கு மேற் படாமலும் வரும்; புலவன் தான்கருதிய அரும் பொருள்களையெல்லாம் வருத்தமின்றி எளிதாகவெளி யிடுவதற்கு இவ்வகவற்பாவினும் இசைவானது பிறி தில்லை. எதுகை யின்பமும் மோனையின்பமும்தோன்ற இயைந்து நிற்குஞ் சொற்கள் மற்றைமொழிகளிற் போலாது தமிழில் மிகப்பெருகியிருந்தாலும், அவ் வெதுகைநயம் மோனைநயங்களையே பெரிதும் நோக் காது பழைய தமிழ்ப்புலவர்களெல்லாரும் பொருள் சென்றவழியே சொற்கள்நிரம்பச் செய்யுட்கள்பலவும் இயற்றுவாராயினர். பொருளொழுங்குமுதிரத் தங் கருத்துக்களை இணக்கிவைத்துச்செல்லும்போது ஆங் காங்கு இடர்ப்பாடின்றி எளிதாகத் தோன்றும் எது கைமோனைகளையே அமைப்பர்; எதுகைமோனை களுக்கு ஏறபப் பொருள்பொருத்துவாரல்லர். பிற்கா லத்தில் அகவற்பாப்பாடின புலவர் பெரும்பாலும் ஒவ் வோரடியிலும் முதற்சீரும் மூன்றாஞ்சீரும் எதுகை பொருந்தத் தொடுத்தார்கள்; சிலர் இவ்விரண்டு அடி கள் முதற்சீர் எதுகை இணையக்கொளுவினர். அவர் செய்த அப்பாட்டுக்கள் எல்லாம் முதலிலிருந்து இறுதி வரையில் ஒரே ஓசையாய் நடந்துகேட்பார்க்கு வெறுப் புணர்வினைத் தோற்றுவியாநிற்கின்றன. மற்றுப் பண் டைக்காலத்துப் புலவரின் அகவற்பாட்டுக்களோ

பொருள் இயைபுக்கு இணங்க ஓசை மாறி மாறி நடத்தலின் கேட்பார்க்குக் கழிபேர் உவப்புணர்வினைப் பயந்துநிற்கின்றன. இவ்வாசிரியர் நப்பூதனார் சில அடிகளில் முதற்சீரும் மூன்றாஞ்சீரும் எதுகைபொருத்தியும், வேறுசிலவற்றில் முதலும் நான்கும் எதுகை பொருந்தச்செய்தும், மற்றுஞ்சில அடிகள் இரண்டிரண்டாய் முதற்சீரில் அவ்வாறு எதுகைபொருந்த வைத்தும், பின்னுஞ்சிலவற்றில் அதுதானு மில்லாமல் வைத்தும் பலவகையால் ஓசையின்பம் மாறி மாறி வரத்தொடுத்தார். இன்னும் ஆங்காங்கு அமைக்கப்படும் பொருளுக்கு இணங்க அடிகள் மெதுவாகவும், விரைவாகவும், இடையிடையே தெற்றுப்பட்டுஞ் செல்கின்றன. பாடிவீடு இயற்றும் இடத்தில் ஓசை தெற்றுப்பட்டுச் செல்கின்றது; அரசன் பாசறையினுள் இருக்குநிலையைச் சொல்லுமிடத்து ஓசை மெதுவாக நடக்கின்றது; அவன் மீண்டு விரைந்துவருமிடத்து விரைந்துபோகின்றது. இவையெல்லாம் அறிவு ஒருங்கி உணர்க.

இனி இப்பாட்டினுள் இடைச்சொற்களையும் வேற்றுமையுருபுகளையும் நீக்கி எண்ணப்பட்ட சொற்கள் சிறிதேறக்குறைய ஐந்நூறு சொற்களாகும்; இவற்றுள் முன்வந்த சொல்லே பின்னும் வருமாயின் பின்வந்தது எண்ணப்படவில்லை. இவ்வைந்நூறு சொற்களுள் நேமி கோவலர் படிவம் கண்டம் படம் கணம் சிந்தித்து கடகம் முரசு விசயம் அஞ்சனம் என்னும் பதினொன்றும்வடசொற்கள்; யவனர் மிலேச்சர் இரண்டும் திசைச்சொற்கள்; ஆகஇதனுட்காணப்பட்ட பிறமொழிச் சொற்கள் பதின்மூன்றேதாம். எனவே

இப்பாட்டினுள் நூற்றுக்கு இரண்டு அல்லது மூன்று விழுக்காடு பிறசொற்கள் புகுந்தன என்றறிக ; ஏனைய வெல்லாந் தனிச் செந்தமிழ்ச்சொற்களாகும்.

இனி இம்முல்லைப்பாட்டை ஏனைஒன்பது பாட்டுக் களோடும் ஒப்பவைத்து நோக்குங்கால் இஃது ஏனைய வற்றைப்போல் மிகஉயர்ந்த தீஞ்சுவை நடையின தாகக் காணப்படவில்லை யென்பது தோன்றுகின்றது. பொருநராற்றுப் படையில்வந்த,

> " துராஅய் துற்றிய துருவையம் புழுக்கின்
> பராரை வேவை பருகெனத் தண்டிக்
> காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை "

என்னும் அடிகளின் இனிமை கனிந்த நடைபோ லாவது, மதுரைக்காஞ்சியிற் போந்த,

> " மழைதொழி லுதவ மாதிரங் கொழுக்க
> ஆழ்ந்த குழும்பில் திருமணி கிளர
> எழுந்த கடற்றின் நன்பொன் கொழிப்ப "

என்னும் அடிகளின் தேனொழுகும் அரியநடைபோ லாவது இழுமென் ஓசையுடன் தித்திப்பாக எழுதப் பட்ட ஓரடியையாவது இம்முல்லைப்பாட்டிற் காண்டல் அரிது ; இஃதுஏனையவற்றைநோக்கப் பெரும்பாலும் எங்கும் வல்லென்ற ஓசையுடையதாயிருக்கின்றது. சொல்லின் கொழுமை ஏனைப் பாட்டுக்களிற்போல இதன்கண் மிகமுதிர்ந்து தோன்றாமையின், இது தன்னைக்கற்பார்க்கு ஏனையபோல் மிக்க சொல்லின்பம் பய வாதென்று கருதுகின்றாம். இப்பாட்டின் நடையினால் இதனை யியற்றிய ஆசிரியர் நப்பூதனார் துறவொழுக்க மும், வல்லென்ற இயல்பும், அறிவாழமும், மிக்கமன வமைதியும் உடையாரென்பது குறிப்பாக அறியப்

படும்; காட்டிடத்தையும், மழைகாலத்தையும், தலைவி தனிமையையும் பொருளாகக் கொண்டு இச்செய்யுள் யாத்தமையானும், துறவோர் கருவிகளை உவமையெடுத்துக் காட்டுதலானும் அவையே இவர் தன்மையாமென்பது தெளியப்படும்.

இப்பாட்டின்கட் காணப்பட்ட பண்டைக்காலத்தமிழரின் வழக்கவொழுக்க வரலாற்றுக் குறிப்புகள்.

இனி இப்பாட்டினாற் பண்டைக்காலத்தமிழரின் வழக்க ஒழுக்கங்கள் சில அறியப்படுகின்றன. இனி நிகழும் நிகழ்ச்சிகளை நிமித்தங்கேட்டு அறியலாம் என்று நம்பினர். பகைவர்மேற் சென்ற அரசர் காட்டிற் பாடிவீடு அமைப்பது வழக்கம். யானைப்பாகர் யானைகளை வடநாட்டுச் சொற்களால் பழக்கிவந்தனர். அரசன் போர்மேற் செல்லும்போது பெண்களும் வாள்வரிந்த கச்சுடனே சென்று பாடிவீட்டில் அவனை ஓம்பினர். பெண்மக்கள் இங்ஙனம் அரசரோடு உடன் சென்று அவனுக்குப் பணிபுரிதல் முற்காலத்துண்டென்பது வடமொழியிற் காளிதாசர்இயற்றிய சாகுந்தல நாடகத்தானும் அறியப்படும். கடாரத்து நீரிலே இட்ட நாழிகைவட்டிலாற் பொழுது அறிந்துவந்தனர். கிரீசு முதலான அயல்நாடுகளிலுள்ள யவனர் என்னுஞ் சிற்பிகளை வரவழைத்து அருமைமிக்க பலசிற்பவேலைகள் செய்து வந்தனர். இவ்வாறே சீவகசிந்தாமணியிலும் "தம்புலன்களால் யவனர் தாட்படுத்த பொறியே" என்று இவர்கள் குறிப்பிடப்பட்டமை

காண்க. மிலேச்சதேயத்திலுள்ள ஊமைகளை வருவித்துத் தமிழஅரசர் தம் பள்ளியறைக்கு அவர்களைக் காவலாகஇருத்தினர்; ஊமைகள் அல்லாரை அங்கு வைப்பின் அரசன் பள்ளியறைக்கண்ணவான மறைபொருள் நிகழ்ச்சிகளை அவர்கள் வெளிவிடுவரெனவும், ஒருவரோடொருவர் சிற்சிலபொழுதுகூடி முணுமுணுவென்று பேசுதலுஞ் செய்வாராதலால் அதனால் அரசன் துயில்கெடுமெனவும் கருதிப்போலும் ஊமைகள் அங்ஙனம் பள்ளியறைக் காவலராக இருத்தப்படுவாராயினர்! இன்னும் ஏழடுக்குமாளிகை முதலான உயர்ந்த கட்டிடங்களும், இன்பம் நுகர்தற்குரிய பல வகையான அரும்பண்டங்களும், யானை தேர் குதிரை காலாள் முதலான நால்வகைப்படைகளும் பிறவளங்களும் பழந் தமிழ்நாட்டுமன்னர் உடையராய் இருந்தனரென்பதும் பிறவும் இனிது விளங்குகின்றன.

விளக்க உரைக் குறிப்புகள்.

இம்முல்லைப்பாட்டிற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் இப்பாட்டுச்சென்றவழியே உரை உரையாமல், தம் உரைக்கிணங்கப் பாட்டைஇணக்குவான் புகுந்து தமக்கு வேண்டியவாறெல்லாஞ் சொற்களை அலைத்தெடுத்து ஓர் உரை எழுதுகின்றார். இங்ஙனம் எடுத்து உரை எழுதுவனவெல்லாம் 'பாட்டு' என்னும் இலக்கணமாமென அதனியல்பைப் பிறழஉணர்ந்து வழுவினரென்பதனை முன்னரேகாட்டினும்; ஆண்டுக்கண்டு கொள்க. இனி இங்கு அவர்உரையினை ஆங்காங்குமறுத்துச் செய்யுட்பொருள் நெறிப்பட்டொழுகும் இயற்கை நன்முறைகடைப்பிடித்து, வேறோர்புத்துரைவிளங்கும் வண்ணஞ் சிலஉரைக்குறிப்புக்கள் தருகின்றாம்.

(க-ருவரிகள்) பெரியகையிலே நீர் ஒழுக நிமிர்ந்த திருமாலைப்போல உலகத்தை வளைத்துக் கடல்நீரைப் பருகி வலமாக எழுந்து மலை முகடுகளில் தங்கி எழுந்த மேகம் முதற்பெயலைப்பொழிந்த மாலைக்காலம் என்க.

கரியநிறம் பற்றியும், உலகமெல்லாம் வளைந்த தொழில் பற்றியும், நீர் ஒழுகாநிற்ப நிமிர்ந்தமைபற்றியும் திருமாலை மேகத்திற்கு உவமைகூறினர். மாவலி வார்த்தநீர் கைகளினின்றுஒழுகத் திருமால் நிமிர்ந்தது போல நீரைச்சொரிந்துகொண்டே உயர்ந்தமேகம் என்று உரைக்க.

நனந்தலை-அகன்றஇடம். நேமி-சக்கிரம். வலம்புரி பொறித்த-வலம்புரிச்சங்கை வைத்த; "வலம்புரி பொறித்தவண்கைமதவலி" என்றார் சீவகசிந்தாமணி

யினும். 'மாதாங்கு' என்பதனை 'மால்' என்பதனோடு கூட்டித் 'திருமகளை மார்பில் தாங்கும்மால்' என்று பொருளுரைக்க. பாடு இமிழ் பனிக்கடல்-ஒலிமுழங்கும் குளிர்ந்தகடல். கொடுஞ்செலவு-விரைந்துபோதல். சிறுபுன்மாலை-பிரிந்தார்க்குத் துன்பம் விளைக்கும் சிறு பொழுதானமாலை.

(எ-கக) ஊர்ப்பக்கத்தேபோய் நெல்லும்மலருந் தூவிக் கையாற்றொழுது பெரிதுமுதிர்ந்தமகளிர் நற்சொற்கேட்டுநிற்ப என்க.

அருங்கடிமூதூர்-பகைவர் அணுகுதற்கரியகாவல் அமைந்த பழையவூர். யாழ்இசை இனவண்டு ஆர்ப்ப-யாழின் நரம்பொலிபோல் ஒலிக்கும் ஓரினமானவண்டுகள் ஆரவாரிக்க; இவை தூவும்முல்லைமலரிற்றேனை நச்சிவந்தன. நாழிகொண்ட-நாழிஎன்னும் முகந்தளக்குங் கருவியின் உட்பெய்த. நறுவீ-நன்மணங்கமழும் மலர். முல்லை-முல்லைக்கொடி. "நன்னீரெறிந்து விரிச்சியோர்க்குஞ், செம்முதுபெண்டிர்" என்றார் புறத்தினும், உ அo.

(கஉ-கஎ) அங்ஙனம் அவர்நிற்கின்றவளவில் பசிய கன்றின் வருத்தமிக்க சுழலுதலை நோக்கிய ஓர் இடைப்பெண்: 'கோவலர் பின்னேநின்று செலுத்த உம்முடைய தாய்மார் இப்போதே வருகுவர்' என்று சொல்வோளுடைய நற்சொல்லைக்கேட்டனம் என்க.

நடுங்குசுவல் அசைத்தகையள்- குளிரால் நடுங்குந்தோள்களின்மேற் கட்டினகையளாய். கொடுங்கோல்-வருத்துகின்ற தாற்றுக்கோல். நன்னர் நன்மொழி-நன்றாகிய நல்லமொழி, நன்மைப்பொருளை புணர்த்தும் நன்னர் நல் என்னுஞ் சொற்கள் ஒருங்கு

வந்தமை "ஒருபொருளிருசொற் பிரிவிலவரையார்" என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியவாற்று னமைக்கப்படும்.

(கஅ) அதனாலும், நின்தலைவன் படைத்தலைவர் தாஞ் செல்லும்முன்னே நற்சொற்கேட்போர் கேட்டு வந்த நிமித்தச்சொற்களும் நன்றாயிருந்தனவாதலா னும் என்க.

நல்லோர்-படையுள் நற்சொற்கேட்டற்குரியோர். வாய்ப்புள்-வாயிற் பிறந்த நிமித்தச்சொல்.

பெருமுதுபெண்டிர் தாங்கேட்டுவந்த நற்சொற் கூறித் தலைமகளை ஆற்றுவிக்குமிடத்துத் தலைமகன் சென்றக்கால் நிகழ்ந்த நன்னிமித்தத்தினையும் உடன் எடுத்துக்காட்டி வற்புறுத்துகின்றார் என்பது இவ்வடி யினால் இனிது பெறப்படுகின்றது. பகைவரது மண் கொள்ளச்செல்கின்ற வேந்தன் படைத்தலைவர் இங் ஙனம் ஒருபாக்கத்திலே விட்டிருந்து விரிச்சிகேட்ப ரென்பது ஆசிரியர் தொல்காப்பியனாராற் சொல்லப்பட் டது. இப்பொருள் இவ்வடியினால் இனிது பெறப்படு வதாகவும், இதனை உணராத நச்சினார்க்கினியர் கஅ-வது வரியிலுள்ள 'நல்லோர்' என்பதனை எ-வது வரியி லுள்ள 'போகி' என்னும் வினையோடுகூட்டி இடர்ப்பட் டும் இப்பொருளை கூறினார்; அங்ஙனம் இடர்ப்பட்டுக் கூட்டிப் பொருளுரைக்கும்வழிப் பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டபொருள் அவரால் உரையின்றி விடப் பட்டது. தலைமகன் குறித்துப்போன கார்ப்பருவவர வினைக் கண்டு ஆற்றாளான தலைமகளை ஆற்றுவித்தற் பொருட்டுப் பெருமுது பெண்டிரும் விரிச்சி கேட்டு வந்து ஆற்றுவிக்கின்றார் என்பது நப்பூதனார் கருத்தாக

லானும், மேமெலடுத்துச் செல்லும் வேந்தன் படைத் தலைவர் மாத்திரமே விரிச்சி கேட்டற்கு உரியார் ஏனையோர் உரியரல்லர் என்பது தொல்காப்பியனார்க்குக் கருத்தன்றாகலானும், யாங்கூறும் பொருளாற் பெருமுது பெண்டிர் விரிச்சிகேட்டலும் படைத்தலைவர் வாய்ப்புளும் இனிது பெறப்படுவதாக அவர் உரையாற் படைத்தலைவர் நன்னிமித்தம் ஒன்றுமே வலிந்து கொள்ளப்படுதலானும் நச்சினார்க்கினியருரை போலியுரை யென்று மறுக்க.

(கக-உ௩) 'நின்றலைவன், பகைவர் இடமெல்லாந் திறைப்பொருளாகக் கவர்ந்து கொண்டு, இங்ஙனந்தானெடுத்த போர்வினையை இனிது முடித்து விரைவில் வருதல் உண்மையேயாம்; மாயோய்! நீ நின்துயரத்தை விலக்கு' என்று அவர் வற்புறுப்பவும் வற்புறுப்பவும் தலைமகள் ஆற்றாளாய்க் கலுழ்ச்சிமிக்குக் குவளைப் பூவின் இதழை ஒத்த கண்ணிலே முத்துமுத்தாய் நீர் துளிப்ப வருந்தி என்க.

இனி இங்கு இவ்வாறு உரை கூறுதலை நச்சினார்க்கினியர் மறுக்கின்றார். அவர்கூறிய மறுப்பு வருமாறு: 'முல்லை என்பது காதலனைப்பிரிந்த காதலி அவன் வருந்துணையும் ஆற்றியிருக்கும் ஒழுக்கமாம். நப்பூதனார் இதற்கு 'முல்லைப்பாட்டு' என்று பெயரமைத்தமையால் இதன் கண் அவ்வொழுக்கமே கூறப்படுதல் வேண்டும் என்பது துணிபு; இதற்கு வேறாகத் தலைவி ஆற்றாமல் வருந்தினாள் என்றல் நெய்தல் என்னும் இரங்கல் ஒழுக்கமாம் ஆகலின், இவ்விரங்கல் ஒழுக்கம் போதரப் பொருளுரைத்தல் நூலாசிரியர் கருத்தொடு முரணுமாகலின் இப்பாட்டுக்கு நேரே பொருள் கூறுத

லாகாது.' என்று சொல்லிப் பொற்சரிகை பின்னிய நற்பட்டாடையினைத் துண்டு துண்டாகக் கிழித்துச் சேர்த்துத்தைத்து அவம்படுவார் போலச், செய்யுட் சொற்றொடர்களை ஒரு முறையுமின்றித் துணித்துத் துணித்துத் தாம் வேண்டியவாறு பின்னி உரை வரைகின்றார்.

இனி அவர் நிகழ்த்திய தடையினிப் பரிகரித்துரைக்கின்றாம். வேனிற்காலத் தொடக்கத்தில் தலைவன் தான் பிரியும்போது 'யான் கார்காலந் துவங்குதலும் மீண்டுவந்து உன்னுடன் இருப்பேன்; என் ஆருயிர்ப்பாவாய்! நீ அது காறும் நம் பிரிவாற்றாமையால் நிகழுந் துயரைப் பொறுத்திருத்தல் வேண்டும்' என்று கற்பித்த வண்ணமே ஆற்றியிருந்த தலைமகள் அவன் குறித்த கார்ப்பருவம் வரக்கண்டும் அவன் வந்திலாமையிற் பெரிதும் ஆற்றாளாயினாள்; இஃதுகை இயற்கை. இங்ஙனம் ஆற்றாளாகின்றமை கண்ட பெருமுதுபெண்டிர் விரிச்சி கேட்டுவந்து வற்புறுப்பவும் ஆற்றாது வருந்துந் தலைவி பின் 'நாம் இங்ஙனம் ஆற்றாமை வருந்துகின்றது கணவன் கற்பித்த சொல்லைத் தவறியதாய் முடியும்' என்று நெடுக நினைந்து பார்த்து 'அவர் வருந்துணையும் நாம் ஆற்றுதலே செயற்பாலது' என்று தன்னைத் தேற்றிக்கொண்டு கிடந்தாள் என்பது அ௨-வது வரிமுதல் நன்கெடுத்துக் கூறப்படுதலின், இப்பாட்டின்கண் முல்லையொழுக்கமே விளக்கமாகச் சொல்லப்பட்டதென்பது அறிவுடையார்க்கெல்லாம் இனிதுணரக்கிடந்தது. அற்றன்று, முல்லை யொழுக்கமே பயின்று வருகின்ற இப்பாட்டின்கட் " பூப்போல் உண் கண் புலம்பு முத்துறைப்ப " என்னும் இரங்கற்குரிய அழு

கையினைக் கூறுதல் பொருந்தாதாம் பிறவெனின்; நன்று கடாயினுய்; முன்னும் பின்னுமெல்லாம் முல்லையொழுக்கமே தொடர்புற்று வரும் அச்செய்யுளினகத்து இடையே தோன்றிய அவ்விரங்கற் பொருள் பற்றி ஈண்டைக்கு வரக்கடவதாம் இழுக்கு ஒன்றுமில்லை; முழுவதூஉந் தொடர்ந்து அவ்விரங்கற்பொருள் வருமாயினன்றே அது குற்றமாம். அல்லதூஉம்; குறிஞ்சி, பாலை, மருதம், முல்லை முதலான ஒழுக்கங்கள் நடைபெறும் போதெல்லாம் இடையிடையே தலைவிமாட்டு ஆற்ருமை தோன்றும் என்பதூஉம், அங்ஙனந் தோன்றும் அவ்வாற்ருமை எல்லாம் நெய்தலொழுக்கமாதல் இல்லை என்பதூஉம் 'அகநானூறு' 'கலித்தொகை' முதலிய பண்டை நூல்களினெல்லாங் காணக்கிடத்தலின் இம்முல்லைப்பாட்டினிடையே வந்த அவ் அடிபற்றி ஈண்டைக்காவதொரு குற்றமில்லையென விடுக்க. ஆற்றுவிப்பார் யாருமின்றித் தனியளாயிருந்து கடலைநோக்கியுங் கானலை நோக்கியும் தலைவி இரங்குதலும், பிறர் உள்வழி அவரோடு இரங்கிக் கூறுதலும் நெய்தலொழுக்கமாம் என்பது தொல்லாசிரியர் நூல்களிற் காண்க. ஆற்றுவிப்பார் உள்வழியெல்லாம் நிகழும் ஆற்ருமை 'நெய்தல்' ஆவதில்லையாகலின், இப்பாட்டின் கண்ணும் கணவன் கூறிய சொல்லும் பெருமுது பெண்டிரும் ஆற்றுவித்தற் காரணமாய் நிற்பத் தலைவிமாட்டுத் தோன்றிய ஆற்ருமைஇடையேவைத்து மொழியப்பட்டதாகலின், அது நெய்தற் றிணையாதல் ஒரு சிறிதும் பொருந்தாமையின் நச்சினர்க்கினியர் நிகழ்த்திய மறுப்புப் போலியாமென்று ஒழிக.

பருவரல்.-துன்பம், துயரம். எவ்வம் - வருத்தம்.

மாயோள் - வெளிறித் தளுக்காகமிளிருங் கரியநிறம் உடையவள் ; "மாயோள் முன்கை யாய்தொடி" என்னும் பொருநராற்றுப்படை யடியுரையிலும் இப்பொருளே காண்க. கலுழ்ச்சி-அழுகை. புலம்பு - தனிமை ; அது தனித்தனியே இடையற்றுவிழுங் கண்ணீர்த்துளி மேல் நின்றது ; இச்சொல் இப்பொருட்டாதல் "புலம்பே தனிமை" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தால் அறிக.

(உச-உஅ) மேல் எடுத்துச்சென்ற வேந்தன் படைத்தலைவர் பகைப்புலத்திற்கு அரணாய் அமைந்த முல்லைக்காட்டிலே பிடவஞ்செடிகளையும் பசிய தூறுகளையும் அழித்து, அங்குள்ள வேடரின் காவற்கோட்டைகளையும் அழித்து, முள்ளாலே மதில் வளைத்து அகலமாய்ச்சமைத்த பாசறை என்க

இங்கே பகையரசன் பாடிவீட்டில் இருக்கும் இருப்பும், எடுத்துச்சென்ற வேந்தன் பாடிவீட்டில் இருக்கும் இருப்புமாக இரண்டு பாசறை யமைப்பு இதன்கட் சொல்லப்பட்டதெனக் கொண்டு சில எழுதினரும் உளர். நச்சினார்க்கினியர் உரையிலாதல் நப்பூதனார் பாட்டிலாதல் அங்ஙனம் இருவகைப் பாசறையிருப்புச் சொல்லப்பட்டதில்லாமையால் அவர் கூறியது பொருந்தாவுரையாம் என்க.

கான்யாறு தழீஇய அகல் நெடும்புறவு - காட்டியாறு சூழ்ந்த அகன்று நீண்ட முல்லைக்காடு. சேணாறு - நீள மணங்கமழும் ; இவ்வடை மொழியைப் 'பைம்புதல்' என்பதனோடு கூட்டியுமுரைத்தல் ஆம். எருக்கி - அழித்து. புழை அருப்பம்-வாயில் அமைந்த கோட்டை. 'இடுமுட்புரிசை' முள்இடுபுரிசை என

மாற்றுக; புரிசை - மதில். 'ஏமம் உறு' ஈறு குறைந்து ஏமுறு எனவாயிற்று; ஏமம் - காவல். படுநீர்ப்புணரி-ஒலிக்கின்ற நீரையுடைய கடல்.

(உகூ-ங௬) இப்பாசறையின் உள்ளுள்ள தெருக்களின் நாற்சந்தி கூடும் முற்றத்தில் காவலாகநின்ற மதயானை, கரும்போடுகதிரும் நெருங்கக்கட்டிய அதிமதுரத்தழையினை உண்ணாமல், அவற்றால் தனது நெற்றியைத்துடைத்துக் கொம்பிலே தொங்கவிட்ட தன் புழைக்கையிலே கொண்டுநின்றதாகப் பாகர் பரிக்கோலினாற் குத்தி வடசொற் பல்காற்கூறிக் கவளம் ஊட்ட என்க.

உவலைக்கூரை - தழைகள் வேய்ந்த கூரை; பாடிவீட்டில் மறவர் இருத்தற்காக அறை அறையாக வகுத்து மேலே தழைகள் வேய்ந்திடப்பட்ட கூரைகள் இவை. ஒழுகிய தெரு-இங்ஙனம் வகுக்கப்பட்ட கூரைகள் ஒழுங்காக இருக்கும் தெருக்கள். கவலை - நாற்சந்தி கூடும் இடம். பாடியினுட்புகுவார் இவ்விடத்திலுள்ள முற்றத்தின்கண் வந்தே பாசறையிலுள்ள தெருக்களுக்குப்போக வேண்டுதலின், இங்கே யானை காவலாக நிறுத்தப்பட்டது. தேம்படுகவுள - மதநீர் ஒழுகுங்கன்னத்தினையுடைய. இன்குளகு - அதிமதுரத்தழை. அயில் - கூர்மை. கவைமுள் கருவி - கவர்த்த அல்லது பிளப்பான முள்ளுள்ள பரிக்கோல். கல்லா இளைஞர் - யானைபழக்குஞ் சொற்களையன்றி வேறு வடசொற்களைக் கல்லாத இளையோர். கைப்ப - ஊட்ட.

(ங௭-சச) துறவோன் தனது முக்கோலை நாட்டி அதன் கட் காவியுடையைத் தொங்கவிட்டு வைத்தாற் போலப் போரிற் பின்னிடாமைக்கு ஏதுவான வலிய

வில்லில் தூணியைத் தொங்கவிட்டுப், பின் அவ்விற்களை யெல்லாம் படங்குக்காக ஊன்றிப் பின்னர் அவை தம்மை யெல்லாம் கயிற்றால் வளைத்துக்கட்டிச் செய்த இருக்கையில் குந்தக்கோல்களை நட்டு அவற்றின்பாற் படல்களை வரிசையாகப்பிணைத்து இவ்வாறு இயற்றிய வளைந்த வில்லரலான அரணமே தமக்குக்காவலிடமாக அமைந்தவேறுவேறான பலபெரும் படைகளின் நடுவில், நீண்டகுத்துக்கோல்களோடு சேர்த்துச்செய்த பலநிறம் வாய்ந்த மதிட்டிரையை வளைத்து வேறோர் உள்வீடு அரசனுக்கு என்று எல்லாரும் உடன்பட்டுச் செய்து என்க.

கல் - காவிக்கல். கல்தோய்த்து உடுத்த - துகிலைக் காவிக்கல்லில் தோய்த்து உடுத்த. படிவம் - தவவேடம்; "பல்புகழ் நிறுத்த படிமையோனே" என்னும் பனம்பாரனார் பாயிரச்செய்யுளினும் இச்சொல் இப்பொருட்டாதல் காண்க. அசை நிலை - தங்கவைத்த தன்மை; என்றது காவியுடையை. கடுப்ப - ஒப்ப; இச்சொல் மெய் உவமத்தின்கண் வருமென்பர் ஆசிரியர் தொல்காப்பியனார். தூணிநாற்றி- அம்பறாப்புட்டிலைத் தொங்கவிட்டு. கூடம், கூடாரம், படங்கு என்பன ஒரு பொருட்கிளவிகள். பூந்தலைக்குந்தம் - பூச்செதுக்கின தலையையுடைய கைவேல். கிடுகு - படல். நிரைத்து - வரிசையாகவைத்து. நாப்பண் - நடு. காழ் - கம்பு; கோல். கண்டம் - கூறு; கூறுபட்ட பல நிறத்தினையுடைய திரையை உணர்த்தியது ஆகுபெயரால்; "நெடுங்காழ்க்கண்டம் நிரல்பட நிரைத்த" என்றார் சிலப்பதிகாரத்தினும். *

* நீர்ப்படைகாதை, கஅ-ஆம் வரி.

(சரு-சகூ) வாளினைத் தமதுகக்சிலே சேரக்கட்டின மங்கையர் பாவையின் கையிலுள்ள விளக்குகள் கெடுந் தோறுந் திரிக்குழாயினுல் திரியைக்கொளுத்தி அவற் றைக்கொளுத்த என்க.

இதற்கு இவ்வாறன்றி மங்கையர் கையிலுள்ள விளக்கினைத் திரிக்குழாயையுடைய சிற்றூட்கள் கொளுத்த என்றுரைப்பின் 'மங்கையர்' என்னுஞ் சொல் தழுவும் வினையின்றி நின்றுவற்றுமாகலின் அப் பொருள் பொருந்தா தென்க.

தொடி - கைவளை; இப்பொருட்டாதல் "கங்க ணங் கைவளை யொருபலந் தொடியே" என்னும் பிங் கலந்தையிற் காண்க. புறம் - முதுகு. இரவைப் பகலாக் கும் வலியபிடியமைந்த விளங்கியவாள். விரவு - கலந்த, சேர்ந்த; 'விரவ' எனத்திரிக்க. வரிக்கச்சு - வரிந்து கட்டப்பட்ட இரவிக்கை; 'வரி' நிறம்எனினுமாம், நிறத்தினையுடைய கச்சு என்க. குறுந்தொடி யணிந்த முன் கையினையும் கூந்தலசைந்து கிடக்குஞ் சிறு புறத் தினையு முடைய மங்கையர், வாள் விரவ வரிந்து கட் டின கச்சை யணிந்த மங்கையர், என அடைமொழி களை இருகாற் பிரித்துக் கூட்டுக. சுரை - திரிக்குழாய். நந்துதொறும் - கெடுந்தோறும்.

(ருo—ருச) மணியிசையையும் அடங்கிய நள்ளிர வில், அசையும் மோசிமல்லிகைக்கொடி யேறிய சிறு தூறுகள் துவலையோடுவந்து அசையுங் காற்றினுல் அசைந்தாற்போலத் தூக்க மயக்கத்தால் அசைதலையு டையமெய்காப்பாளர்காவலாகச்சுற்றித்திரியவென்க.

நெடுநா வெண்மணி - நீண்ட நாக்கினையுடைய வெள்ளியமணி. நிழத்திய - நுணுகிய; அதாவது முன்

னுள்ள ஓசை அடங்கிய; இச்சொல் நுணுக்கப்பொருளை யுணர்த்துதல் "ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய், ஆவயின் நான்கும் நுணுக்கப்பொருள" என்னுந் தொல்காப்பிய உரியியற் சூத்திரத்திற் காண்க; இனி 'நிழற்றல்' எனப்பாடமோதுவாருமுளர்; 'நிழற்றல்' ஒளிவிடுதலெனப் பொருடரும் பிறிதொரு சொல்லாதலின் அஃதிண்டைக்குப் பொருந்தாது; அற்றேல், திவாகரத்தில் "நிழற்றல் நுணுக்கமும் நிழற்செயலுமாகும்" என்று அஃது இருபொருளும் உடைத்தாக ஓதப்பட்டவாறென்னையெனின்; அது தொல்காப்பியத்தொடு முரணுதலின் கொள்ளற்பாலதன்றென மறுக்க. என்றது குதிரை யானை என்றற்றொடக்கத்தனவும் உறங்குதலின் அவற்றின் கழுத்திற் கட்டிய மணியோசையும் அடங்கினமை கூறிற்று; இனிப் பாடிவீட்டின்கண் எல்லாருந் தொழில்விதற்குத் தெரிகுறியாக அடித்து விட்ட மணி யென்றுரைப்பினும் அமையும். 'பூத்த ஆடு அதிரற்கொடி' எனச்சொற்களை மாறிக் கூட்டுக. படார் - சிறுதூறு. சிதர் - திவலை. துகில் முடித்துப் போர்த்த - கூறையால் மயிரை முடித்து உடம்பையும் போர்த்துக்கொண்ட; இச்சொற்றொடர் மெய்காப்பாளர்க்கு அடையாய் நின்றது; "மீப்பால் வெண்டுகில் போர்க்குநர் பூப்பால் வெண்டுகில்சூழ்ப்பக் குழன் முறுக்குநர்" என்னும் பரிபாடற் பத்தாஞ் செய்யுளடிகள் ஈண்டு ஒப்பிடற்பாலன. ஓங்குநடைப் பெருமூதாளர் - உயர்ந்த நல்லொழுக்கத்தினையுடைய மெய்காப்பாளர்; தம்மரசர்க்குப் பகையாவார் செய்யும் கீழறுத்தல்களுக்கு இடங்கொடாது தம்மரசர்மாட்டு மெய்யொழுக்க முடையராதல் பற்றி 'ஓங்குநடை'

யுடையாரெனச் சிறந்தெடுத்துக் கூறினர்; 'பெருமூதாளர்' என்பது பெரிது முதிர்ந்த காவலாளர் எனப் பொருட்படுதலின் ஏனைக் காவற்றொழிலிலெல்லாங் கடமை வழுவாது மெய்ப்பட ஒழுகி முதிர்ந்தார் தம்மையே பின்னர் மெய்காப்பாளராக வைப்பரென்பதூஉம் பெறும்.

(ருரு-ருஅ) பொழுதினை இத்துணையென்று வரம்பறுத்து உணரும் பொழுதறி மாக்கள் அரசனைத் தொழுது கொண்டே காணுங் கையினராய் விளங்க வாழ்த்தி 'நில வுலகத்தை வென்று கைப்பற்றுதற்குச் செல்வோனே நினது கடாரத்திலே இட்ட சிறிய நீருள்ள நாழிகைவட்டிலிற் சென்றநாழிகை இவ்வளவு' என்று சொல்ல வென்க.

தம்மரசர்க்குப் பகைவராயினோர்செய்யுங் கீழறுத்தலுக்கு வயமாகிப் பொழுதினைப் பொய்த்துக்கூறுவார் போலாது, என்றுந் தம்மரசர்பால் நெகிழாமெய்யன்பு பூண்டு பொழுதினைப் பொய்த்தலின்றி அறிவிப்பார் இவர் என்பது புலப்படப் 'பொய்யா மாக்கள்' என்றும் பொழுதளந்தறியுந் தொழிலன்றிப் பிறிது அறியாமையின் இவரை மக்கள்என்னாது மாக்கள்என்றுங்கூறினர். இப்பொருள் காணமாட்டாத நச்சினார்க்கினியர் பொழுதறியும் வினையாளர் என்று நேரே பொருள்படும்இச்சொற்றொடரை 'மாக்கள் பொழுதளந்தறியும் பொய்யாக் காண்கையர்' எனப் பிறழ்த்திபதன் மேலும் ஈண்டைக்கோர் இயைபின்றியும் உரைத்தார்; எறிநீர் வையகம்—வீசுகின்ற கடல்நீராற் சூழப்பட்ட நிலவுலகம். குறுநீர்- சிறிய நீர்; இது நாழிகைவட்டினுட்கசிந்தநீர். 'குறுநீர்' என்பதற்கு

நாழிகை வட்டில் என்று குறிப்பு எழுதினருமுளர்; அப்பொருள் நச்சினார்க்கினியருரையிலாதல் மற்றை நூல்களிலாதல் பெறப்படாமையால் அதுபொருந்தாதென விடுக்க. கன்னல்-நாழிகை வட்டில்; இஃதிப் பொருட்டாதல் "கன்னலுங் கிண்ணமும் நாழிகை வட்டில்" என்னும் பிங்கலந்தைச் சூத்திரத்தாற் காண்க. "குறுநீர்க் கன்னலின், யாமங்கொள்பவர்" என்றார் மணிமேகலையினும். ஒருகடாரத்திலே நீரை நிரப்பிக், கீழே சிறுதொளையுள்ள ஒரு வட்டிலை இட்டால் கடாரத்து நீர் அப்புழை வழியே வட்டியினுள் ஊறும்; அங்ஙனம் ஊறும் நீரினளவுக்குத்தக நாழிகை கணக்கிடுவர். பொழுது இனைத்து என்று பொழுது அவாய் நிலையான் வந்தது.

(௬கூ-கூ௬) உடையினையும் மெய்ப்பையினையும் தோற்றத்தினையும் யாக்கையினையுமுடைய யவனர் புலிச்சங்கிலிவிட்டுக் கைசெய்த இல்லில் அழகிய மணி விளக்கினை ஒளிரவைத்து வலியகயிற்றிற் சுருக்கிய திரையை வளைத்து முன்னொன்றும் உள்ளொன்றுமாக இரண்டறை வகுத்த பள்ளியறையுட் புறவறையின் கண்ணே சட்டையிட்ட ஊமைமிலேச்சர் அருகே காவலிருப்பரென்க.

மத்திகை-சவுக்கு, குதிரைச்சம்மட்டி. மத்திகை வளைஇய உடை-குதிரைச் சம்மட்டி சூழப்பட்ட உடை; மறிந்துவீங்குசெறிவுஉடை- மடங்கிப்புடைக்க நெருங்குதலுறக்கட்டின உடை. மெய்ப்பை- சட்டை. வெருவருந்தோற்றம்- காண்பார்க்கு அச்சம் வருதற்கேதுவானதோற்றம். யவனர்-கிரேக்கர், சோனகர். மணி விளக்கம்-பளிங்கு விளக்கு; மணிபோறலின் பளிங்கும்

மணி எனப்பட்டது; ''மணியிற்றிகழ்தரு'' என்பதற்குப் பரிமேலழகியாரும் 'பளிக்கு மணி' என்று பொருளுரைத்தார், திருக்குறள், கஉஎ௩. எழினி-திரை. 'உடம்பின் உரைக்கும் நாவினுரையா' எனமாறி உடம்பாற் குறிகாட்டித் தெரிவித்தலன்றி நாவால் உரைக்க மாட்டாத என்க. மிலேச்சர்-ஆரியர், பெலுச்சிதானத்தினின்றுவந்த துருக்கர்; 'பெலுச்சி' என்பது மிலேச்சர் எனத்திரிந்தது; பெலுச்சிதானத்தின் வழியாகப் பாரதவருடத்தினுட் புகுந்தமை பற்றியே பண்டைக் காலத்தில் ஆரியர் தமிழரால் மிலேச்சரென அழைக்கப்பட்டனர்; திவாகரத்திலும் ''மிலேச்சர் ஆரியர்'' எனப் போந்தமைகாண்க.

(௬எ-எக) பள்ளியறையின் அகத்தே சென்ற அரசன் நாளைக்குச்செய்யும் மிக்க போரினை விரும்புதலாலே உறக்கங் கொள்ளானாய், முன்னாட்களிற் பகைவர் வீசிய வேல் நுழைந்தமையாற் புண்மிக்குப் பெட்டை யானைகளையும் மறந்த களிற்றியானைகளையும், யானைகளின் பரிய தும்பிக்கை அற்று விழத் தாம் அணிந்த வஞ்சிமாலைக்கு நல்வெற்றியினைச் செவ்விதாக்கிச் செஞ்சோற்றுக்கடன் தப்பாமற் கழித்து இறந்த மறவரையும் நினைந்தும், காவலாயிட்ட தோற் பரிசையினையும் அறுத்துக்கொண்டு அம்புகள் அழுந்தினமையால் செவியைச் சாய்த்துக் கொண்டு தீனி எடாமல் வருந்துங் குதிரைகளை நினைந்தும் ஒரு கையைப் படுக்கையின்மேல் வைத்து மற்றொருகையால் முடியைக்தாங்கியும் நீளச்சிந்தித்து இரங்கி இங்ஙனமெல்லாம் அவ்விரவைக் கழித்துப், பின்னாளில் பகைவரைக்குறித்துப் படைக்கலங்கள் எடுத்த தன்வலிய

விரலாலே அவர்தம்மை யெல்லாம் வென்றமையின் தான் அணிந்த வஞ்சிமாலைக்கும் நல் வெற்றியினை நிலைநிறுத்திப், பின்னுளில் தன் மனைவியைக்காணும் மகிழ்ச்சியால் பாசறையில் இனியதுயில் கொள்கின்றான் என்க.

'மண்டு' என்பதனை அமர் என்பதனேடாதல்நகை யென்பதனேடாதல் கூட்டி மிக்குச்செல்லும் போர், மிக்குச்செல்லும் நகை என்க. தேம்பாய் கண்ணி-தேன் ஒழுகும் வஞ்சிமாலை. சோறு வாய்த்தல்-செஞ்சோற்றுக்கடன் தப்பாமற் கழித்தல்; இதனைச் "சிறந்ததிது வெனச் செஞ்சோறுவாய்ப்ப" என்னும் புறப்பொருள் வெண்பாமாலை யுரையினுங்காண்க. கடகம்-கங்கணம், தொடி, வளை; இவ் அணிகலன் ஆண்மக்களும் அணிதலுண் டென்பது "கண்ணெரிதவழ வண்கை மணி நகுகடகம் எற்ற" என்னுஞ் சீவகசிந்தாமணிச்செய்யுளினுங் காண்க. நகைதாழ்கண்ணி-ஒளி தங்குமாலை, என்றது தனக்குண்டாம் ஒளி தங்குதற்கு அடையாளமாய்இட்டவஞ்சிமாலையை. அரசு இருந்துபனிக்கும்முரசு முழங்கு பாசறை-பகையரசு இருந்து நடுங்குதற்குக் காரணமான வெற்றிமுரசுமுழங்கும் பாசறை என்க. பனிக்கும்-நடுங்கும்.

(அ0-௱ஙு)பொழிப்புரை பொருட்பாகு பாட்டில் விளக்கமாகஎழுதப்பட்டிருக்கின்றது, ஆண்டுக்காண்க.

நிறைதபுபுலம்பு-நிறை கெடுதற்கு ஏதுவான தனிமை. "நிறையெனப்படுவது மறைபிறரறியாமை" என்றார் கலியினும். ஏஉறுமஞ்ஞை-அம்புதைத்தமயில், இதுமயிலின்சாயலினையுடைய தலைமகள் நடுக்கத்திற்கு உவமையாயிற்று. பாவை-வெண்கலத்தாற் செய்த

பிரதிமை; இதன்கையில்விளக்கெரிய விடுவது அரசர்க்கு வழக்கம். முடங்குஇறை - கூடல்வாய்; கூரையின் இருபகுதிகள் ஒன்று பொருந்தும் மூட்டுவாய். வலன் நேர்பு ஆர்ப்ப-எய்திய வெற்றிக்குறைத்து ஒலிப்ப. அயிர்-நுண்மணல். அஞ்சனம்-மை. முறிஇணர்-தளிருங்கொத்தும். தோடு ஆர்-இதழ்நிறைந்த; 'தொகுதி நிறைந்த' எனஉரைப்பினுமாம். கானம் நந்தியசெந்நிலப் பெருவழி-காடு செழித்த செவ்விய முல்லைநிலத்தின் வழியிலே. வானம்வாய்த்த-வேண்டும் பருவத்து மழை பெய்யப்பெற்ற. திரிமருப்புஇரலை-முறுக்குண்ட கொம்பினை உடைய புல்வாக்கலைகள். எதிர்செல் வெண் மழை பொழியுந்திங்கள் - இனிமேற்பெய்தற்காகச்செல்லும் வெண்புயல் மழையைப் பொழிதற்குரிய கார்காலந் தொடங்கும் ஆவணித்திங்கள் முதலில்; இதற்கு நச்சினார்க்கினியர் முன்பனிக்காலம் என்று பொருள் கொண்டு இப்பாட்டின் பொருளுக்குச் சிறிதும் இணங்காவாறு உரை கூறினார். பிறக்கு-பின். துனைபரிதுரக்கும்-விரைந்துசெல்லுங் குதிரையை மேலுந்தூண்டிச் செலுத்தும். வினைவிளங்கு-போர்வினைக்கண் தமது திறம்மிக்குவிளங்கும், என்றது தலைமகனது தேரிற்பூட்டிய குதிரைகளை.

வினைமுடிபு

எழிலி பெரும்பெயல் பொழிந்த மாலைக்காலத்திலே பெருமுது பெண்டிர் "யாம் ஊர்மருங்கிற்போகி நெல்லொடு முல்லையுந் தூஉய்த் தொழுது நிற்ப, ஆய்மகள் கன்றின் அலமரல் நோக்கி 'நுந்தாயர் கோவலர் உய்த்தர இன்னே வருகுவர்' என்போள் நன்மொழி கேட்டனம் அதனாலும் நின் தலைவர் திறையராய் வினைமுடித்து வருவது வாய்வது, மாயோய்! நீ நின் எவ்வங் களை எனக் காட்டவுங் காட்டவுங் கலுழ்ந்து கண் முத்துறைப்ப ஆற்றாதுவருந்துந் தலைமகள், பாசறையில் இன்றுயில் வதியுந்தலைவனைத் தன்மருங்கிற்காணாளாய் மேலும்வருந்திப் பின் தன்நெஞ்சை அவனிடத்தே ஆற்றுப்படுத்தித் தான் தனியளாய் இருக்கும் நிலைமையினை நீளநினைந்து பார்த்து "நாம் நங்காதலன் சொல்வழி ஆற்றியிருத்தலே முறை" எனத்தேற்றியும், ஒடுவளை திருத்தியும், மையல்கொண்டும், உயிர்த்தும் நடுங்கி, நெகிழ்ந்து, விளக்கிற் சுடர் அழல, மாடத்து முடக்கிறைச் சொரிதரும் அருவி ஒர்ப்பனள் கிடந்தோள் செவிநிறைய ஆலின, பரிதுரக்குஞ் செலவினர் நெடுந்தேர் பூண்டமா என்று வினை முடிவு செய்க.

முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை

முற்றும்.

முல்லைப்பாட்டின்

அருஞ்சொற்பொருள்.

அ

அகம்-உள்வீடு,சச;பிங்கலந்தை

அங்கை-அழகியகை; அகம்கை-உள்ளங்கை, கூ௫, தொல்காப்பியம், எழுத்தியல், ௩க௫.

அசைநிலை- தங்கவைத்த தன்மை,௩அ; "அசைத லாடலுந் தங்கலுமுரித்தே" திவாகரம்.

அசைத்த-கட்டிய, கச; பிங்.

அஞ்சனம் (வடசொல்)-மை: மைபோன்ற நீலமலர் கூ௩.

அஞ்செவி- அகம் செவி- உட்செவி, அக.

அதிரல்-மோசி மல்லிகை,௫க; சிலப்பதிகார உரை,க௩,கரு௬ஈ; 'புனலி' என்பர் நச்சினார்க்கினியர்.

அமர்-போர்,ஈஎ.

அயிர்- நுண்மணல், கூஉ;திவாகரம்.

அயில்- கூர்மை,௩ச; திவாகரம்.

அரசு- அரசன், எக.

அரணம்-காவலானஇடம்; சஉ; காவல், ச- ஆம் பரிபாடலுரை

அருங்கடி- அரிய காவல், எ.

அருப்பம்- அரண், உகூ; "விய லருப்பம்" என்புழியும் இப்பொருட்டாயிற்று,'புறநா. கள.

அலமரல்-சுழலல்,க௩;தொல்காப்பியம் உரியியல், க௩.

அலரி-பூ, கo.

அவிழ்-மலர்ந்த,கo.

அழல-எரிய, அ௫.

அன்ன-ஒத்த,எo.

ஆ

ஆய்மகள்- இடைப் பெண்,க

ஆர்- நிறைந்த, கூகூ; திவாகரம்.

ஆர்ப்ப-பேரொலிசெய்ய,அ,கூஉ 'ஆர்ப்பு ஒன்றலாப் பேரொலி' என்பர் திவாகரர்.

ஆலின-ஒலித்தன, அகூ; திவாகரம்; புறநானூற்றுரை, கஉஅ.

ஆற்றுப் படுத்த- வழிச் செலுத்திய,அக.

இ

இசை-ஒலி,எ,அஅ.

இசைப்ப-சொல்ல, ௫அ.

இணர்-கொத்து, கூச;திவாகரம்

இமிழ்-முழங்கும்,ச, அஅ; 'ஏறுமாறிமிழ்ப்ப" என்பதனுரையைக்காண்க,பரிபாடல், உஉ.

இரலை-ஆண்மான்,புல்வாய்,கூகூ; தொல்.மரபியல்,சச.

இருக்கை- இருப்பிடம், சo

இல்-வீடு, பாடிவீடு,கூஉ.

இழை-அணிகலன், அச;திவா.

இன்குளகு- இனியஅதிமதுரத்தழை, ௩௩.

இன்னே- இப்பொழுதே, கசு. இனம்-கூட்டம்,அ; "சுறவினத் தன்னவாளோர்" புற.நா. கங. இனைத்து-இவ்வளவு,ருஅ.

ஈ

ஈண்டு-திரண்ட,கூ0; புறநா.கஎ.

உ

உகள- தாவ,ககூ; புறநானூற் றுரை,கரு. உண்கண்-மையுண்டகண், உங; புறப்.வெண்.உரை, பொது.எ; திருக்குறள் பரிமேலழகருரை' க0கூக. உய்த்தர-செலுத்துதலைச்செய்ய, 'உய்' முதனிலைவினைப்பெயர், கரு. உயங்கும்-வருந்தும், எசு;திவா உயரி-உயர்த்து,ககூ;புறநா. ருசு; புறப்பொருள் வெண்பாமாலை, அ,கஎ. உயிர்த்தும்- பெருமூச்சுவிட்டும், நெட்டுயிர்ப் பெறிந்தும்,அங. உவலை- தழை, உகூ;பதிற்றுப் பத்து,உஅ. உழந்து- வருந்தி,அ0; பரிபாட லுரை,கூ. உழையர்- அருகிலுள்ளவர்,சுசு; "உழையிருந்தான்" என்புழியும் இப்பொருட்டாதல் காண்க, திருக்குறள், சுகஅ. உள்ளியும்- நினைத்தும், எஉ; திருக்குறளுரை, கஙகசு. உறுதுயர்- மிக்க வருத்தம்,உறு கின்றதுயர் என உரைப்பினு மாம்,உறுதல்- அடைதல்,கங. உறைப்ப-துளிப்ப,உங; உறை- நீர்த்துளி, திவாகரம்.

எ

எஃகம்-வேல், சுஅ;திவாகரம். எருக்கி-அழித்து, உரு;பதிற்றுப் பத்து, அங; கொல்லுதல்,திவா. எவ்வம்- வருத்தம், உக; எவ்வம் மானமென்பர் புறப். வெண்பா மாலைஉரைகாரர், கைக்கிளை, எ. எழிலி-மேகம், ரு. எழினி-திரை,சுச; சிலப்.ங,ளக எறிநீர்-வீசும்நீர்: கடல்,ருஎ;எறி தல்-வீசுதல், பிங்கலந்தை.

ஏ

ஏ- அம்பு, அச;' ஏத்தொழில்- அம்பின்றொழில்,பரிபாடல் கஅ ஏமம்-காவல்,.ருச;திவாகரம். ஏமுற-'ஏமம் உற'என்பன ஏ முற என்றாயின, ஏமம்-காவல், உஎ;புறநானூறு ,ங.

ஒ

ஒய்யென-விரைய, அங; ஞானா மிர்தப்பாயிரவுரை,கூ;புறநா.கூஅ ஒழிந்தோர்- இறந்தோர், எஉ; ,'ஈரைம் பதின்மரும் பொருது

களத்தொழிய" என்றார்புறத்தினும்,உ.

ஒழுகிய-ஒழுங்குபட்ட,உக.

ஒள்-விளங்கிய, சகூ, புறநா,கக.

ஒற்றி-சேர்த்தி,எரு; சீவகசிந்தாமணியுரை,களசகூ.

ஓ

ஓங்கு- உயர்ந்த, ருந;புறநா.ந.

ஓர்ப்பனள்- செவியிற்கேட்பவளாய்,அஅ;புறநானூறு, கருஎ; 'கருதினவளாய்' என்றுரைப்பினுமாம்.

க

கச்சு- முலைக்கச்சு: இரவிக்கை, சஎ;பிங்கலந்தை.

கடகம்-கங்கணம்,தொடி, வளை, எகூ;திவாகரம்.

கடுப்ப-ஒப்ப,நஅ; மெய்உவமத்தின்கண் வருவது இச்சொல், தொல்காப்பியம்,உவம.கரு.

கண்டம் (வடசொல்)- கூறுபாடு, கூறுபட்ட பலநிறத்திணையுடைய மதிட்டிரை,சச; சீவகசிந்தாமணி,கூச.

கண்ணி-மாலை: வஞ்சிமாலை,எக, எஅ;திவாகரம்.

கண்படை-உறக்கம்,கூஎ; திருக்குறள்,கoசக;பிங்கலந்தை.

கணம்-திரள்,கூகூ; பிங்கலந்தை.

கருவி - பரிக்கோல்: குத்துக்கோல்,தாறு,நரு; படைக்கலம், திவாகரம்.

கலுழ்-அழுதல்,உஉ; திவா.கலக்கம் எனினுமாம், கூ- ஆம் பரிபாடலுரையையுங்காண்க.

கவர்ந்த- கைகொண்ட, கூo; கொள்ளை கொண்ட, புறப்பொருள்வெண்பா.உரை,உ,கூ.

கவலை-நாற்சந்தி கூடும் இடம், ந.o;சந்தி, திவாகரம்; கவர்த்தவழி.புறநானூற்றுரை,ந.

கவளம்- உணவு, நகூ; சோறு, திவாகரம்.

கவுள-கன்னத்தைஉடைய, நக;

கவுள்- கதுப்பு: கன்னம்,திவா.

கவைமுட் கருவி-கவர்த்த முள்உள்ளபரிக்கோல்,நரு;மணிமேகலை,கஅ,ககூரு;கவை-கவர்,பிங்

களை-விலக்கு,உக; பிங்கலந்தை.

கன்று-ஆன்கன்று,கஉ,

கன்னல்-நாழிகைவட்டில், ருஅ; திவாகரம்.

கா

காட்ட-காட்டில் உள்ள,உகூ.

காயா-காசாஞ்செடி, கூந;திவா.

கால-கக்க:சொரிய: மலர, கூச; திவாகரம்.

காழ்-கோல்,சச;திவாகரம்.

கான்யாறு-காட்டியாறு,உச.

கானம்-காடு,கஎ.

கி

கிடுகு-படல்,சக.

கு

குந்தம்-கைவேல், ௪௧; திவாகரம், புறப்பொருள் வெண்பாமாலை, ௬,௭; சிறுசவளம் பெருஞ்சவளம் என்பர் பிங்கலந்தையுள்.

குருதி-உதிரம், ௬௬; திவாகரம்.

குளகு- தழை, ௩௩; 'இலை நுகர் விலங்கின் உணவு' என்பர் திவாகரர்; "மறிகுளகு உண்டன்ன" நாலடியார், ௧௬.

குறுநீர்-சிறியநீர், ௫அ.

கூ

கூடம்-படங்கு: கூடாரம், ௬௦; பிங்கலந்தை.

கூர்ந்து-மிக்கு, ௬அ; தொல்காப்பியம், உரியியல், ௧அ.

கூரை-இல்லின்மேற் பகுதி, ௨௬

கை

கைப்ப- ஊட்ட, ௩௬; தீற்ற, மதுரைக்காஞ்சி, ௬௫௬.

கைய-கையிலுள்ள, ௧௬,

கொ

கொடுங்கோல்- வருத்தும் தாற்றுக்கோல், ௧௫.

கொடுஞ்செலவு- விரைந்துசெல்லல், ௫.

கொண்டென- கொண்டனவாக, ௩௬.

கொளீஇ-கொளுத்தி, ௬அ.

கோ

கோடல்- காந்தள், ௬௫; புறப்பொருள்வெண்பாமாலை, அ, ௧௬

கோடு-மலைமுகடு, மலையுச்சி, ௫; பிங்கலந்தை.

கோலி-வளைத்து, ௬௬; திவாகரம்

கோவலர்-இடையர், ௧௫.

சி

சிதர்-துவலைமழைத்திவலை: ௫௨ பிங்கலந்தை.

சிந்தித்தும் (வடசொல்)- நினைந்தும், ௭௬.

சு

சுட்டிய-குறித்த, ௭௭; புறநா, ௩௨

சுடர்-கனலி: தீக்கொழுந்து, அ௫ திவாகரம்.

சுரை- திரிக்குழாய், ௬அ; பதிற்றுப்பத்து, ௬௭- ஆம்பாடலுரை.

சுவல்- தோள், ௧௬; திவாகரம்.

செ

செந்நிலம்- செவ்வியநிலம், ௬௭

செறி-நெருங்கின, ௬௩.

செறிவு-நெருங்குதல், ௫௬; பிங்.

சே

சேண்-தொலைவு, நீளம், ௨௫; தி.

ஞா

ஞாண்-நாண்: கயிறு, ௬௩; பதிற்றுப்பத்துரை, ௬௦.

த

தட-பெரிய, ௨; "தடவுங்கயவும் நளியும் பெருமை" தொல். உரி-௨௬.

தபு-கெடு, அ௧; திவாகரம்.

தழீஇய-சூழ்ந்த,உச.

தா

தாம்பு- தாமணி,கஉ; திவா; கயிறு,பிங்கலந்தை.

தாழ்-தங்கும்,எஅ; "தாழ்தல்-தங்குதல்" அடியார்க்குநல்லாருரை, சிலப்பதிகாரம்,ச.

தானை-சேனை, கூ0; பிறநானூற்றுரை. உஉஅ; காலாட்படை' திவாசரம்.

தி

திங்கள்-மாதம்: ஆவணிமாதம்,ா

திண்- வலிய, சகூ, கூரு;திவா.

திரி-முறுக்குண்ட,ககூ.

திரு- அழகு,கூரு; பரிமேலழகருரை, திருக்குறள், க0கக; ஞானமிர்தவுரை, உஉ; பேராசிரியருரை, திருச்சிற்றம்பலக் கோவையார்,க.

திருத்தி-செவ்விதாக்கி,எக,எஅ; புறநானூற்றுரை,கஎ.

திறை- கப்பம், அரசிறை, ககூ, திவாகரம்.

து

துகில்-பெரும்பாலும் வெள்ளிய ஆடையினை உணர்த்தும், ருரு; பரிபாடல் க0- ஆஞ்செய்யுளிலுங்காண்க; 'துகில் வெண்மை செம்மை இரண்டற்கும் பொது' என்பர் நச்சினார்க்கினியர், சீவக் சிந்தாமணி,நச.

துமிபு-அறுத்து,எஉ; திவாகரம்.

துமிய- அற்றுவிழ,எ0; துணிபட, பிங்கலந்தை; புறநா,ககூ.

துயர்-துன்பம், அ0; திவாகரம்.

துயில்-உறக்கம்,அ0.

தூக்கும் - செலுத்தும், க0உ; புறநானூறு,அ.

துனை- விரைவு, க0உ; தொல். உரியியல்,கஎ,

தூ

தூங்கல்- தூக்கமயக்கம்,ருரு.

தூஉய்-தூவி,க0.

தூணி- அம்புபெய் கூடு,ருகூ; திவாகரம்.

தெ

தெவ்வர்-பகைவர்,கஅ;'தெவ்வுப் பகையாகும்' தொல்.உரி.ரு0.

தே

தேம்-மதநீர்,நக; தித்திப்பு, பிங். தேன், எக; தொல்காப்பியம், புள்ளிமயங்கியல்,சகூ.

தொ

தொடர்-சங்கிலி, கூஉ; புறநா, எச.

தொடி-கைவளை,சரு;பிங்.

தொடுத்த - கட்டப் பட்ட, கஉ; "தொடுகழன்மன்னன்" என்பதனுரையையுங்காண்க, புறப். வெண்.பாடாண்-கூ.

தொழுது-கும்பிட்டு, க0, ருகூ; பிங்கலந்தை,

தோ

தோடு-தொகுதி, பூவின் இதழ், ௧௬; திவாகரம்; புறநானூறு, ௨௩௮, ௨௨.

தோய்த்து- நனைத்து, ஊற வைத்து, ௩௭.

தோல்-கேடகம், பரிசை, ௭௨; புறநானூறு, ௪, ௧௬; தோற் பலகை, திவாகரம்.

தோன்ற-விளங்க ௫௬.

தோன்றி-செங்காந்தள், ௯௬; திவாகரம்.

ந

நகை-ஒளி, ௭௮; பிங்கலந்தை.

நசை-விருப்பம், ௬௭.

நடை-ஒழுக்கம், ௫௩; பிங்க.

நந்துதல்-கெடுதல், ௪௧, தழைத்தல், ௯௭; "நந்தல்கேடும் ஆக்கமுமாகும்" என்பது திவாகரம்.

நறு-நல்லமணம், ௯.

நன்னர்-நன்மை, ௧௭; திவா.

நனந்தலை-அகன்ற இடம், ௧; தொல், உரி. ௭௮.

நா

நாப்பண்-நடு, ௪௩; பிங்கலந்தை.

நாற்றி-தொங்கவிட்டு, ௩௯.

நாழி-அளக்குநாழி:படி, ௯; பிங்.

நாறும்-மணக்கும், ௨௫; இப்பொருட்டாதல் "நாற்ற நாட்டத்து" என்புழியுங் காண்க, புறநானூறு ௭௦.

நி

நிமிர்ந்த-உயர்ந்த, ௩.

நிரைத்து-வரிசையாக வைத்து, ௪௧; பட்டினப்பாலை, ௭௮.

நிலை-தன்மை, ௩௮; திவாகரம்; நிற்குந்தன்மை எனினுமாம்.

நிழத்திய-நுணுகிய: ஓசை அடங்கிய, ௫௦; தொல்காப்பியம், உரியியல், ௩௪.

நிறை-'மறைந்தது ஒரு காரியம் பிறர் அறியாமல் ஒழுகுதல்' என்பர் நச்சினார்க்கினியர், நெய்தற்கலிஉரை, ௧௬.

நு

நுதல்-நெற்றி ௩௩.

நுனை-முனை, ௩௪, ௭௩; புறநானூறு, ௪௨.

நெ

நெகிழ்ந்து-கழன்று, ௮௪; திருக்குறள், ௧௨௩௬.

நெடிது-நீள, ௭௬; நெடுங்காலம், திருக்குறள், பரிமேலழகருரை, ௫௬௨.

நே

நேமி (வடசொல்)-சக்கரம், ௧.

நேர்பு-உடன்பட்டு, ௬௪.

நோ

நோன்-வலிய, ௭௭.

ப

பகழி-அம்பு, ௭௩; திவாகரம்.

பசலை-பசியநிறம், பொன்னிறம்,

கஉ; "நெருஞ்சிப்பசலைவான்பூ" என் புழியுங்காண்க, புறநா. கருரு

படம்-சட்டை: குப்பாயம், கூகூ; "குப்பாயமிலேச்சனை" என்றார் சீவகசிந்தாமணியிலும், சாகக.

படார்-சிறு தூறு, ருக.

படிவம்-தவவேடம், விரதம் எனினுமாம், நஎ; 'படிவம்' வேடம், புறப்பொருள்வெண்பா மாலை உரை, கூ, சஉ; விரதம், பதிற்றுப்பத்து, எச; பரிபாடல் ரு, எரு.

படுநீர்-ஒலிக்கும்நீர், உஅ; படு மணி- ஒலிக்கும்மணி, புறப் பொருள் வெண்பா மாலை, வெட்சி, கூ.

படை-படைக்கலம்: வாள், எஎ; பிங்கலந்தை.

பதைப்பு-பதைத்தல், எ0; மெலி வுறுதல், பரிபாடலுரை, க0.

பயிற்றி-பலகாற் கூறி, நரு; புறநானூற்றுரை, நச.

பரந்த-அகன்ற, பரவிய, உஅ.

பரி-குதிரை, க0உ; திவாகரம்.

பருகி-குடித்து, ச.

பருவரல்-துன்பம், உக; திவா; துயரம், புறப். வெண். உரை, கைக்கிளை எ.

பருஉ-பரிய, எ0, அரு.

பள்ளி-படுக்கை, கூச, எரு; பிங் கலந்தை.

பனிக்கடல்-குளிர்ந்தகடல், ச.

பனிக்கும்-நடுங்கும், எக; புற நானூறு, ரு.

பா

பாசறை-பாடிவீடு, எக, புற நானூறு, நக,

பாடி-பாசறை, உஅ; படைவீடு, திவாகரம்.

பாடு-ஒலி, ச; திவாகரம்.

பாவை-பிரதிமை, அரு.

பி

பிடவம்-நறு மணங் கமழும் வெள்ளிய பூக்களையுடைய ஒரு காட்டுச்செடி. உரு; மணிமே. ந, க௲ந; பதிற்றுப்பத்து, கூகூ; ஐங்குறு. சநரு, சகூக; குறிஞ்சிப்பாட்டு.

பிடி-பெண்யானை, கூக; திவா.

பிறக்கு-பின், க0க; புறநானூற் றுரை, கரு; "பிறக்கடிஒதுங்கா" என்றார் பதிற்றுப் பத்தினும், அ0.

பு

புக்க-புகுந்த, இட்ட, கூ0;

புணர்-கூடின, கூக.

புணரி-கடல், உஅ; திவாகரம்.

புதல்-சிறு தூறு, உரு.

புரிசை-மதில், உஎ; புற நானூறு, கஎ.

புலம்-இடம், கூ0; திருக்குற ளுரை, சந.

புலம்பு- தனிமை, ௨௩ அக; ௬௩; திருக்குறளுரை, ௧௨௭௩. தொல். உரி. ௩௫.

புலித்தொடர்-புலிச்சங்கிலி, ௬௨

புழை-சிறுவாயில், ௨௬; திவா

புறம்-முதுகு, ௪௫; திவாகரம்.

புறவு-முல்லைநிலக்காடு, ௨௪, பிங்கலந்தை.

புன்-துன்பம், ௬; இப்பொருளில் 'புன்கண்' என்னுஞ்சொல் 'புன்'எனநின்றது.

புனை-கைசெய்த, அழகுசெய்த, ௬௨; புறநானூறு, ௧௪.

பெ

பெருமுது பெண்டிர் - பெரிது முதிர்ந்த மகளிர், ௧௧.

பெருமூதாளர் — காவற்றொழிவிற்பெரிது முதிர்ந்தோர், ௫௪; பெரிய முதுமையுடையோர், புறநானூறு, ௨௪௩.

பொ

பொறித்த-வைத்த, ௨.

ம

மஞ்ஞை-மயில், ௮௪; திவாகரம்.

மடம்-மென்மை, ௯௯; புறநானூற்றுரை, ௨௩.

மண்டு-மிக்குச்செல்லும், ௬௭; புறநானூற்றுரை, ௬; 'மேற்கொண்டு' புறப்பொருள் வெண்பாமாலையுரை, ௬, ௧௦.

மணி-ஓசைமணி: கண்டைமணி ௫௦; பிங்கலந்தை; பளிக்குமணி,

மத்திகை-குதிரைச் சம்மட்டி, ௫௯; திவாகரம்.

மருங்கு-பக்கம், ௭.

மருப்பு-கொம்பு, ௩௪, ௯௯.

மறிந்து-மடக்கி, ௫௯; 'கீழ்மேலாய்' என்பர் புறப்பொருள் வெண்பாமாலையுரைகாரர், ௭, ௬; நச்சினார்க்கினியர் 'வடிம்பு தாழ்ந்து' என்பர்.

மா

மா-திருமகள், ௨, பெரிய ௮௭, திவா; குதிரை, ௭௪, ௧௦௩, பிங்கலந்தை.

மாட்ட-கொளுத்த, ௪௯; புறநானூறு, ௧௯.

மாட்டி-அழித்து, ௨௯; புறப்பொருள் வெண்பாமாலை உரைகாரர் 'மாளப்பண்ணி' என்பர்.

மாடம்-அழகியவீடு, ௮௬; 'மாடு' என்னும் முதனிலையிற் பிறந்த சொல்.

மாண்- மாட்சிமைப் பட்ட, ௬௨

மாயோள்-கரியநிறத்தை உடையோள், மாந்தளிரின் நிறத்தை உடையோளெனினுமாம், ௨௧; 'மாமை' நிறத்தை யுணர்த்துமென்பர் திவாகரரும் புறப்பொருள் வெண்பாமாலையுரைகாரரும்.

மால்-மாயோன், ௩; கரியநிறத்

THE MADURA TAMIL SANGAM

தினன் என்பது சொற்பொருள், திவா.

மி

மிடைந்து-நெருங்க, நஉ.

மு

முடங்கிறை-முடங்கு இறை: முட்டப்பட்டு வளைவாய் இருக்கும்வீட்டின் இறப்பு; முடங்கு-மடங்கிய, இறை-வீட்டிறப்பு, என்றது நீர் விழுங் கூடல் வாயை, அஎ; திவாகரம்; "உழவினர் கைம் மடங்கின்" என்னுந்திருக்குறளில் மடங்குதல் இப்பொருட்டாதல்காண்க.

முற்றம்-முன்இடம், ந0; புறநானூறு, கஎ0.

முல்லை-காட்டுமல்லிகைக்கொடி கூ; திவா.

முறி-தளிர், கூச; திவாகரம்.

முனை - பகைவரிடம், கக; 'வேற்றுப்புலம்' புறப். வெண். உரை, வெட்சி. கஎ.

மூ

மூதூர்-பழையவூர், எ.

மூழ்கல்-அழுந்தல், எந; பரிபாடலுரை, கூ.

மெ

மெய்ப்பை-சட்டை, கூ0; திவா.

மை

மையல்-மயக்கம், அந; பிங்கலந்தை.

ய

யவனர்-சோனகர், கூக; திவாகரம். (Iaones or Greeks.)

யா

யாக்கை-உடம்பு, கூக.

யாத்த-கட்டிய, நஉ.

யாழ்-ஓர் இசைக்கருவி, அ.

வ

வதியுனன்-தங்குகின்றவன். அ0; திவாகரம்.

வயிர்-ஊதுகொம்பு, கூஉ; திவா.

வரி-வரிந்துகட்டு; நிறம் எனினுமாம், சஎ.

வலம்-வெற்றி: வென்றி, எக; திவாகரம்.

வலம்புரி-ஓர் உயர்ந்த சங்கு, உ; ஆயிரஞ் சங்கு சூழத் திரிவது வலம்புரிச்சங்கு என்பர், சீவக சிந்தாமணி "வரிவளை சூழும் வலம்புரி" என்பதன் உரையைக் காண்க, உக0ரு.

வலனேர்பு-வலமாகஎழுந்து, ச;

வலன்நேர்பு- வெற்றிக்குஒத்து, கூக; நேர்பு-ஒத்து, பரிபாடலுரை, கக.

வள்ளி-கிழங்குதருகொடி, கூக; பிங்கலந்தை.

வளி-காற்று, ருக.

வளை-சங்கு, கூஉ; திவாகரம்.

வளைஇ-வளைத்து, க.

வளைஇய- சூழப் பட்ட, ருக;

புறநா. கக.

வன்கண்- கொடுமை, சுக; தறுகணமை, புறநா. ந; அருளின்மை, அசைவின்மை, திண்மை, திருக்குறள் பரிமேலழகருரை, உஉஅ, கூநஉ, சுஅக.

வா

வாங்கு-வளைத்த, சுo; வளைந்த, சுஉ, கூஅ; பிங்கலந்தை; வாங்கிய-வளைத்த, சுசு,

வாய்த்த-தப்பாமற் பெற்ற, கூஅ; புறப். வெண்-மாலை, அ, நo.

வாய்த்து-தப்பாமற் கழித்து, எஉ; புறப்பொருள் வெண்பா மாலை, வாகை, நo.

வாய்ப்புள்-நற்சொல், விரிச்சி, கஅ; புறப். வெண். பொது. கக.

வாய்வது-உண்மை, உo.

வானம்-மழை, கூஅ; திருக்குறள், கக,

வி

விசயம் (வடசொல்)-வெற்றி, கூக; பிங்கலந்தை.

விரவு-கலந்த; சேர்ந்த, சுஎ; புறநா. கருஉ.

விரிச்சி-நற்சொல், கக; இப்பொருட்டாதல் "ஆடமைத் தோளி விரிச்சியுஞ் சொகினமும்" என்பத னுரையிலுங் காண்க, புறம். வெண். பொது. கக.

விளக்கம்- விளக்கு, சுந; "குடியென்னுங் குன்று விளக்கம்" திருக்குறள், சுoக.

வீ

வீ-மலர், கூ.

வீங்கு-புடைக்கும், ருக.

வெ

வெருவரும்-அச்சம்வரும், சுo; திவாகரம்.

வெலீஇய-வெல்லுதற்கு, ருஎ.

வே

வேட்டு-வேடு. வேட்டுவச்சாதி, உசு; சிந்தாமணி, சசகூ.

வேழம்-யானை: களிற்றியானை. சுகூ; திவாகரம்.

வை

வை-கூர்மை, எந; "வையே கூர்மை" தொல்காப்பியம், உரியியல், கூக.

வையகம்-நிலவுலகம், ருஎ; 'வையகமும் வானகமுமாற்ற லரிது' என்றார் திருக்குறளிலும், கoக

முல்லைப்பாட்டின்
அருஞ்சொற்பொருள்
முற்றும்.

6569
THE MADURA TAMIL SANGAM